718

3-13

OFFICE OF THE REGISTRAR
2-...-1913
MADRAS.

# மானவதி

அல்லது

# (நல்லிதங்காள்)

ஓர் இனிய தமிழ் நாடகம்.

இது

பாமாவிஜயம், லதாங்கி-லலிதாங்கி,

ராஜாகோபிசந்த், மதாலஸா, வள்ளிபரிணயம், அல்லிஅரசி,

ஆகிய இந்நாடகங்களை யியற்றிய

ஒரிஜினல் ஆக்டர்

## ஹி. எஸ். கல்யாணராமய்யர்

எழுதியது.

முதற்பதிப்பு 1000.

Madras:

PRINTED BY S. MURTHY AND CO., AT THE "KAPALEE" PRESS,

305, *Thumbu Chetty Street.*

1913.

(காப்பிரைட் ரிஜிஸ்டர்டு.)

[தபாற்கூலி வேறு.

0-2MKR4,M
N13
139919

# மானவதி

அல்லது

# (நல்லிதங்காள்)

ஓர் இனிய தமிழ் நாடகம்.

இது

பாமாவிஜயம், லதாங்கி-லலிதாங்கி,

ராஜாகோபிசந்த், மதாலஸா, வள்ளிபரிணயம், அல்லிஅரசி,

ஆகிய இந்நாடகங்களை யியற்றிய

ஒரிஜினல் ஆக்டர்

## வி. எஸ். கல்யாணராமய்யர்

எழுதியது.

முதற்பதிப்பு 1000.

Madras :

PRINTED BY S. MURTHY AND CO., AT THE "KAPALEE" PRESS,

*305, Thumbu Chetty Street.*

1913.

(காபிரைட் ரிஜிஸ்டர்டு)

விலை அணா 6.] [தபாற்கூலி வேறு.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
★ சென்னை-600 008. ★

1938
894.812

ஸ்ரீ நடேசாயநம:

# முகவுரை.

---

கனவான்களே, இந்த நல்லதங்காளென்ற மாதுசிரோமணியின் கதையை, எளியஜனங்கள் வீதிகளில் பாடிவரும் வழக்கத்தை, வெகுகாலமாகக் கண்டும் கேட்டுமிருக்கிறோம், இப்போது சுமார் பத்து வருஷகாலமாக சென்னை நாடகக் கம்பெனியார்கள் முதலாக இதை நடத்த ஆரம்பஞ் செய்ய, பிறகு பலரும் அரங்கபூமியில் அபிநயித்து வருகிறார்கள். உலக வழக்கங்கள் இந்தக்கதையால் வெளியாகிறதென்று அறிந்து ஜனங்கள் வெகு ஆவலாகப் பார்த்து வருகிறார்கள். நானுமிந்தக்கதையை அநேகம் கம்பெனியாக்டர்களுடன் கலந்து பல இடங்களில் நடித்துக் காட்டியிருக்கிறேன். கனவான்களநேகர் என்னை இந்தக் கதா பாகத்தை யனுசரித்த ஒரு நாடகம், என்னுடைய அநுபவத்திற்குப் பொருத்தமாக எழுதவேணு மென்று அபிப்பிராயப் பட்டபடியால், எனது சிற்றறிவிற்குத் தோன்றிய வரையில், இயற்கைக்கும் நாடக லக்ஷணத்திற்கும் பொருந்த, சிலபாகங்களை மறைத்தும், அவசிய மில்லாத வரிகளை நிறுத்தியும், எழுதியிருக்கிறேன். அவை யாவன.—1. நல்லண்ணன் (சுலோதரன்) கனவுகண்டு வேட்டைக்குப் போன இடத்தில், பஞ்சத்

139919
-600 00


தால் மெலிந்து தன் மக்களுடன் ஆதரவற்றுத் தன்னை நாடி வந்த, நல்லதங்காள் (மானவதியைக்) கண்டு, மகாவிசனத்தை யடைந்து. பிறகு அவளைத் தனியே பட்டணத்திற்குப் போகச் சொல்லி விட்டு, மிருக வேட்டையை அரசர்கள் விலக்கப்படாத தர்மங்களிலொன்றாகக் கூறி, தான்வனத்திலிருந்து கொண்டு, கை மோதிரத்தை அடையாளமாக தன் பத்னிக்குக் காட்டச் சொன்ன தாகவும், நடிக்கிறார்கள். பின் வருகிற கதாபாகத்தில் அவனுக்குள்ள ஸகோதர வாஸ்சலியத்தினளவைப் பார்க்கும்போது, அலங்கோலமாக மக்களுடன் தன்னை நாடிவந்த தங்கை மருமக்கள் நிலமையை நேரில் கண்டபிறகும், உடனே யவர்களைக் கூட்டிக்கொண்டு தான் போகாமல் தாமதித்திருக்கக் கூடு மென்று எனக்குத் தோன்றவில்லை. இந்த நியாயம் இயற்கைக்குப் பொருத்த மாகா தென்பது என் கருத்து. (2) நாடழிப்பது—தீமூட்டுவது-சவம்-நாயகா-நாயகிகளின் கொடுமையான மரணங்கள். ஆகிய இவைகளைப் பெரிய கவிகள் நாடக மேடையில் பிரத்தியக்ஷமாக நிருபணஞ் செய்யக் கூடா தென்று விலக்கி யிருக்கிறார்கள். பின்னும் கருணை சோகாதிரஸங்களை அளவுக் கடந்து வெகு கொடுமை யாகவும், பார்க்கச் சகிக்க முடியாத நிலமையிலும், அபிநயிக்கக் கூடா தென்றும், அதையறிவுடையோர்கள், தர்ம சிந்தனை யுடையவர்களாகிய கனவான்களிருந்து பார்க்கப் பிரியப்பட மாட்டார்களென்றும், கூறுகிறார்கள். அதை யனுசரித்து இரண்டு மூன்று ஸீன்களை ஒரே நிலையில் அடுத்தடுத்துக் காட்டுவது அழகில்லை யென்று நிருத்தியிருக்கிறேன். ஆகையால் என்னு

டைய குற்றங்களைத் திருத்தியும், குணபாகங்களை அங்கீகரித்தும் ஸந்தோஷிக்க, வித்வான்களையும், கனவான்களையும் வணக்கமாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

C. S. கல்யாணராமய்யர்.

**KONDYAMPET,**
*Thiruvanakovil Post.*
12—6—13.

072 MKR4,M
NB

# நல்லதங்காள்.

## நாடக பாத்திரங்கள்.

## மானவதி.

| | | |
|---|---|---|
| குணசோமன் | ... ... | காசிபன் |
| மானவதி | ... ... | நல்லதங்கை |
| சுமுகன் முதலிய | ... ... | 7 மக்கள் |
| சுஸோதரன் | ... ... | நல்லண்ணன் |
| குடிலாம்பாள் | ... ... | மூளியலங்காரி |
| வீரசேனன் | ... ... | வேடன் |
| மந்திரி | ... ... | |
| பிராம்மணர்கள் | ... ... | பலஜாதியர் |
| குடிகள், இடையர்கள், கஞ்சுகி, ஸேவகன் ..., பார்வதி பரமேசுவரன் | | ஸமயோசிதமான ஆக்டர்கள் |

குறிப்பு :—காசி யென்பது உத்தரக் கண்டத்திலுள்ள தென்பதும், மதுரை யென்பது, பாண்டியனது தலை பட்டணமாகிய மதுரை யென்பதும், கதை நிகழ்ந்த இடமாகக் கூறுவது பொருத்தமாக இல்லை. தென்காசி யல்லது சிவகாசியிலும், வடமதுரை யிலுமிருந்த புண்ணிய புருடர்களின் கதையாக இருக்கலாமென்பது எனது கருத்து.

காசியிலும் மதுரையிலும் இடையிலுள்ள காடுகளிலும் நடந்த கதாபாகமுள்ளது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
2 -SEP 1913
MADRAS.

உ

வேலுமயிலுந் துணை.

# மானவதி

என்னும்

# நல்ல தங்காள் சரித்திரம்.

## அங்கம். I.

### களம். 1.

இடம்.—காசிபட்டணம் வீதி.

காலம்.—காலை.

பாத்திரங்கள்.—குடிகள் பிரவேசம்.

(குடிகள் எல்லோருஞ் சேர்ந்துபாடுவது).

'சுத்தபிரம்ம பராத்' மெட்டு.

1. ஈசன்செயல் யாரறிவார்
பாசமொழித்தவர் தான்றெரிவார்
ஈராறுண்டாய் மழையில்லை
இருப்பவர்க்குப் பிழைப்பில்லை

2. குடிகள்செய்த குற்றமேதோ
கொற்றவன் செய்த கொடுமையேதோ
படிமிசைபஞ்சம் படர்ந்ததே
பலபிணிபீடை துடர்ந்ததே

3. தாய்முகங்காணு மக்களானோம்
தருமழைகாணப் பயிரானோம்
பதிமுகங்காணு ஸதியானோம்
விதிவலிமாலிக் கதியானோம்

4. மன்னவனுே கன மகராஜன்
தன்னுயிர்போல் காக்கும் தயாபோஜன்
தர்மஸ்வரூபி யதிதேஜன்
தார்மன்னர் போற்றும் பதாம்புஜம்

5. தேடிக்கண்டு மனுக்கொடுப்போம்
கூடியெல்லாரும் ஊரைவிடுப்போம்
வாடிப்பசிதாகத்தாலினிமேலே
வாழ்வதரிது—மண்மேலே

தீக்ஷிதர். சாஸ்திரிகளே! குசலமா? ஊம்—இன்னம் எத்தினேகாலத்துக்குத்தான் பகவான் சோதிப்பாரோ, நமக்கென்ன தெரிகிறது; ஒன்றும் தோணவில்லே.

சாஸ்திரிகள். நம்ம மகாராஜா, மகாப்பிரபு, உதார ஸ்வபாவமுடையவர்—ஸர்வஜனபந்து—தர்மத்திலே பிரியமுள்ளவர். அதிசுலபர். அந்த நாளிலே எத்தினே யாகங்கள், என்ன பிராமண ஆராதனங்கள், உற்சவங்கள் நித்திய மங்களமாக நடந்துவந்தன—எல்லாம் கதையாகப்போச்சு! நம்முடைய பாக்கியந்தான்.

தீ. ஓய்! விண்பிரலாபம், யாகம் இனி நரமேதந்தான் சோத்துக்கு வழியில்லே, நித்தியம் ஏகாதசிதான்.—மகாராஜா பரமசாது, அவர்மே லென்ன தோஷம்? இனியிங்கேயிருந்து காலக்ஷேபஞ் செய்ய முடியாது; அவரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு எங்கேயாவது க்ஷேத்திரவாஸங்களுக்கு ஸம்ஸாரம் குழந்தைகள் சகிதம் யாத்திரை போக வேண்டியதுதான்.

சா. ஐயா! நம்முடைய பாடும் அவ்வளவுதான். கடமாவது, படமாவது, ஆகாசமாவது, சாஸ்திர வாதமெல்லாம் ஒடுங்கினது. ஊரெங்கும் ஆகாசமாகத்

தான் போச்சு, வீட்டு மேற்கூரை வைக்கோல், புல், எல்லாவற்றையும் ஆடுமாடும் பிடுங்கித்தின்று விட்டது. நானும் சித்தமாக இருக்கிறேன், சேர்ந்து போவோம்.

தீ. ஐயங்கார் சுவாமிகளே! தேவள் திருவுள்ளம் எப்படி?

ஐய. தீக்ஷிதர்வாள், கலிப்பிராபவம்; திவ்வியதேசம், மகா தீரவாஸம். இந்த கதியானால், யார்மேல் தோஷம் ஸாதிக்கிறது—எம்பொருமான் திருவுள்ளம் அப்படியிருக்கிறது. எத்தனை நாள் கஷ்டம், ஒருவருஷமா? பத்து ஸம்வத்ஸசரமாகிறதே. முன்னாளிலே தசரதசக்கிரவர்த்தி ஆண்டு வந்த காலத்திலே இப்படி துர்ப்பிக்ஷ மிருந்த தாகவும், மகானுகிய ருஷியசிரிங்க மகரிஷி ஆகமனத்தாலே நிவர்த்தியாகி, மகா வருஷம் வருஷித்து சுக மடைந்தார்களென்றும், ஸ்ரீமத் இராமாயணத்தாலே தெரிகிறது. அந்த விதம் இந்த நாளிலே எந்த மகான் வரப் போகிறார்? வேதாப்பியாஸம் நின்றுவிட்டது. நித்திய கர்மங்கள் லோபித்து போச்சு. ஊ—அதுகளைப் பேசிப் பிரயோசனமில்லே. நானும் பிரயாணத்திற்கு சித்தந்தான்.

தீ. ஆசாரியாரே! தங்களுத்தேசமென்ன?

ஆசா. நங்கெ மாத்திர ஸுகவா? ஸம்ஸார தாபத்திரய அபார; ஹேஹனுகஷ்ட, எந்தா சிரம, தேவரிகே கண்ணில்லா—நானு மக்களு ஸகித பிரயாணகே ஸித்தவாகி தேனே—சுவாமி.

தீ. ஸரி, ஸரி, புறப்படுங்கள்—கால தாமதம் வேண்டாம்.

ஸாது. அரே ராம், அரே ராம், பகவான்—விஸ்வநாத், குருஜீ, கியா—பரிக்ஷ—கர்தி, ஹம் கரீப்லோக், மர்ஜாயிங்கே, பாரா பரஸ்கே உப்பர் ஹுவாஹயே, பர்ஸாத்நை படா; எஹீ ராஜ்மோ, தரம் கூச்நை சல்தா, மகாராஜ் படா தயாபந்த ஹயே, கியா கரேங்கே, பகவர்ன்கா குஷி, ஓயிஸா ஹுயே; மைபி எஜிஹி ராஜ்ச்சாண்டகே—ராமேஸ்வர்க்கு ஜாதா ஹுப். ஏராம் ஆலேக்.

பண்டாரம்.—அண்ணுமலே, சிவ சிவ சிதம்பரம், சிவகாமி, விசாலாச்சி, உன் மனசு, நாட்டிலே மழைமாரி யில்லே—வருசம்பத்து, பன்னண்டுக்கு மேலாச்சு; சத்திரம் மடமெல்லாம் அடைச்சுப்போட்டாக, தன் வவுரு வளப்படதே கஸ்டமாக இருக்கச்சே, தானமா வது தர்மமாவது; மவராசாவும் எல்லாத்தையும் சனங்களுக்குக் கொடுத்து, நம்மைப்போலே ஆய் விட்டார்கள்; சிவன் செயல், மடத்தாச்சியை கூட்டிக்கண்டு, தெற்கே புறப்பட்டுபோவோம்.

ஜனங்கள்.—ஆற்றிலேயா—குளத்திலேயா—கிணற்றிலேயா, அடா சாமி! இந்த அநியாயமுண்டா! இப்படி மழை மாரியத்துப்போமா. பாவம். மவாராஜா தர்மதுரை, நல்ல மனசு, அவங்க என்ன செய்வாங்க, எந்த காலத்தேயும் இப்படி இருந்த தில்லேயாம்—அய் யோ—கால்நடைகள் மெலிந்து குடல் வத்தி செத் துப் போகுது—பார்க்க சகிக்க முடியாது. ஆடு மாடை யோட்டிக்கொண்டு எங்கேயாவது போய்ப் பிழைப்போம்.

(எல்லோரும் செல்வது)

களம் முற்றிற்று.

## களம் 2.

இடம்:—அரண்மனையி லொரு பாகம்.

காலம்.—பிற்பகல்.

பாத்திரங்கள்.—குணஸோமன் என்கிற காசிபன், பரிஜனங்கள்.

குண. (மனவருத்தத்துடன்)

இராகம், எது குல காம்போதி—தாளம் ரூபகம்.

காலம் யாரறிவார்! கடவுள் செயுங்கோலம்
ஆலமுண்டவன் செயல் அற்புதம் அற்புதமய்யா— (கால)
மாதம் மும்மாறி பெய்து மாநிலம் செழித்ததுபோய்
சோதனைபோல் பசையுமற்று சோஷித்ததே பூமியெங்கும் (கால)
ஆறுகுளங்களிலும்—அகத்துக்கிணறுமுற்றும்
நீரும் குடிக்கவற்று—நிராதாரயானதைய்யோ (கால்)
தினைவரகு கேழ்வரகு—கம்புசோளம் செந்நெற்பயிர்
தினையளவும் பலிக்காமல்—திகைத்துநிற்கும் நாளானதே (கால)
தாய்க்குச்சுகமிருந்தாலன்றோ—தன்மக்கள் சுகம்பெறுவார்
தார்மன்னன் வருந்தும்போது-தவித்திடாதோகுடிகளெல்லாம் (கா)

குண. ஜகதீசா! விசுவநாதா! என் இந்த ஏழையின்மீது கருணை குறைந்தது; கிருபாஜலதியே! எனது நாட்டிலுள்ள குடிஜனங்களும், பசுபக்ஷிகளும் கொடி செடி விருக்ஷங்களும், மழைமுகம் காணாது இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் இந்த சிரமத்தை யனுபவிக்கக் கூடும். குடிகளனுபவிக்கும் துன்பத்திற்குக் காரணம் கொற்றவனது கொடுங் கோல்முறையென்றல்லவோ வசையென்மீதேறபடும். நான் அந்த விதம் ஒரு அபராதமும் துணிந்து செய்யக் கூடியவனன்றே! எந்ததெய்வகுற்றம்! எந்தத்துறவிகளின் சாபம்! எந்த அதர்மத்தின் கொடுமை! எந்த பதி

விருதையின் சாபம்! ஒரு உயிருக்கு நேரிட்ட சிரமமாக இல்லையே, பல்லுயிர்களும் வருந்துகின்றனவே எல்லாருக்கும் மேலானதென்று பேசப்படுகிற இந்த புன்னுடலையும் அதற்குக் காரணமாகிய உயிரையும் ஸந்தோஷமாகக் கொடுப்பேன். அன்பைப் பொழியும் மேகமே! உனது திருவருளல்லவோ பெருகவேணும். பாலுக்கு வேண்டித் தாய் முகம் நோக்குப் பாலர்களைப்போல, பலஜனங்களும் தாங்கள் பிழைக்க வகைதெரியாது என் முகத்தைப் பார்க்க வெட்கப்படுகிறார்கள். அவர்கள் முறையைக் கேட்கவும், அவர்கள் முகத்தைப் பார்க்கவும் மனங் குன்றுகிறதே! எனதறிவு சலிக்க வழி யொன்றும் தோன்றவில்லையே! மந்திரீ! மகாஜனங்களே! என்னால் செய்யக்கூடிய தொன்று மில்லையே! பல்லாயிரம் கண்களும், செவிகளும், முகங்களும், பொருந்திய பரமபதியான விசுவநாதனல்லவோ. கிருபாரூபமாகிய முகிலா யெழுந்து சுரந்து தாழ்ந்து கனமழை சொரிய மனமிரங்கவேணும். பஞ்சபூதங்களுக்கும் முதல் சிருஷ்டியாகிய ஜலத்திற்கு அதிதெய்வமாக விளங்கும் வருணபகவானுக்குப் பிரீதிகரமான ஜபங்கள் ஹோமங்கள் பூஜைகள் ஆராதனைகள் முறையாகவும் சிரத்தையாகவும் நடக்கட்டும். புண்ணிய ஆலயங்களில் விசேஷபூஜைகள் நடக்கட்டும். மனிதர்களை யடுத்து ஸேவைசெய்தாலே அநேகம் நன்மைகளைப் பெறுகிறோம். ஜகத்பதியாகிய மகாதேவனை உபாசித்தால் வீண் போகுமா? கவலைப் படாதீர்கள்.

செஞ்சுருட்டி இராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

கடைக் கண்ணுற் பாரும்—கவலையைத்தீரும்—
இடையிலானை யுரியை—உடையாகப் பூண்டவா— (கடை)
பஞ்சம் மிகுதியாலே—பஞ்சுபடாப் பாடுபட்டோம்
பஞ்சானனே யுந்தன்—நெஞ்சங் குளிர்ந்து வந்து— (கடை)
வாஸவாதியமரர் போற்றும்—வாரானவியில மர்ந்த
தாஸனெங்கள் வறுமைதீர்ப்பீர்—விமலனே விசுவநாதா— (க)
(எல்லோருஞ் செல்வது)

களம் முற்றிற்று.

---

## களம் 3.

இடம்.—அந்தப்புரத்திலொரு பாகம்.
காலம்.—மாலை.
பாத்திரங்கள்.—(நல்லதங்கை) மானவதி,
தோழி பிரவேசம்.

இராகம் சுருட்டி—தாளம் ரூபகம்.

மா—என்பாக்கியமே பாக்கியம்—பெண்களில்—
எவர்க்குண்டு இந்த சிலாக்கியம்— (என்)
நன்மனமும் நற்குணமும் நற்குலமும் நற்செயலும்
நன்மதியும் நற்கல்வியும் நன்றமைந்த நாதனைக்கொண்ட—(என்)
ஈசனருளினாலே யேழுமகவைப் பெற்று—
நேசமாயிருபேரும் நேர்மையாய்ச் சுகித்திடும்— (என்)
இந்திரன் இந்திராணி போலும் சந்திரன் ரோகிணி போலும்—
செந்திருமாலைப் போலும் சுந்தரமாய் விளங்கும்— (என்)

பெண்களுக்கு இந்நிலத்திலடையவேண்டிய செல்வங்களுட் சிறந்தது மனமொத்த மணவாளன். பிறகடையவேண்டிய பாக்கியம் மக்கட்பேறு. இது

போலவே யாடவர்கட்கும் மனப்பொருத்தமுள்ள மனையாள், சரியானபருவத்தில் குழந்தைகள் ; இது வுமன்றி இல்வாழ்க்கைக்குரிய தர்மங்களும் முறை யாக நடத்தப்படுமேயானால்—அந்த ஸ்திரீ புருஷர் களுக்கு மேலான கதி கிடைக்கு மென்பது நிச்சயம். இல்வாழ்க்கையின் முறையாவது.

(நாதா நாமக்கிரியை—ஆதிதாளம்)

கண்ணிகள்.

இல்லற தர்மத்தின் பெருமை—எவர்களாலும்—
சொல்வதரிதா மதனருமை— (இல்)

துறந்த ஞானிகட்கும் இறந்த பிதிர்க்களுக்கும்
சிறந்த கதியளிக்க வுகந்த நிலையைப் பெற்ற— (இல்)

தருமமெனும் பண்டமிடு சகடமாமது
கரும நுகத்தடிபூட்டிக் காதலித்திருபேரும்
ஒருமைப்பட்டி ழுப்பரேல் உற்றகதியளிக்கும்
ஒண்டியாயிழுத்திடில் உலகமே நகைத்திடும் (இல்)

பெற்றவர் கற்றவர் உற்றவர் சுற்றத்தார்
பெரியவர் சிறியவர் வறியவர் இழிபவர்
எத்தகையார்க்கும் சிரத்தைபக்தியுடன்
எற்றவமுதளிக்கப் பாத்திரமான இந்த (இல்)

நினைவறிந்த நாளாக உலகத்திற்கும் தர்மங்களுக்கும் பயந்து நடந்து வந்ததினாலே அநுகூலமான புருஷ பாக்கியமும்—அதற்கமைந்த ஏழு ஆண் மக்கள் செல்வமுமடைந்து சுகமாக வாழ்ந்துவருகிறோம்— இந்த நிலமை கிடைத்தது உத்தம சிவ பூஜையின் பலனென்று தெரிந்து முக்காலத்திலேயும் பார்வதி பரமேசுவரனைப் பூஜித்துக்கொண்டு வருகிறேன். ஆனால் கொஞ்சகாலமாக தொடர்ந்து வருகிற பஞ்சத்

தின் கொடுமை ஜனங்களால் சகிக்க முடியவில்லை. மழை சுத்தமாகப் பெய்யவில்லை. ஒருவிதப்பயிரும் பலிக்கவில்லை. புற்பூண்டுகளும் முளைக்கவில்லை. அதனால் எல்லா ஜீவன்களும் பசிதாகத்தால் வருந்துகின்றன. ஜனங்கள் ஒரு தொழிலும் நடை பெறாததினாலே வேறு ஊர்களுக்கு போகிறார்களாம். என் பிராணநாதனோ, தனது உடல் பொருளாவி மூன்றையும் வெறுத்துப் பலவித முயற்சி செய்து வருகிறார். மானமாகிய அரும்பொருளுக்காகக் கவலை படுகிறார். குடிகளைப்பார்க்க வெட்கப்படுகிறார். அது நிற்க, இங்கே யருமைக்குழந்தைகள் பலவிதத்திலும் சிரமத்தை யடைகின்றன. சொல்ல நாவெழவில்லை: எல்லாம் மதலைகள். பாற்சுவை மறக்காத பருவம். தாயை விட்டுப் பிரிக்கப்படாத வயசு. ஒருவகையும், ஒருவழியும் தோன்றவில்லை. தெய்வமே! என் செய்வது!

(குணஸோமன் பிரவேசம்).

ஸிந்துபைரவி இராகம் ஆதிதாளம் (ஸாகி)

குண. செய்வதேதும் தோணேன், ஜகதீசா செல்ல ஓர்வழியுங் காணேன் (செ)
பண்டு என் குடிகளும் பாவி நானுஞ் செய்த
பாவமோ எந்த முனிசாபமோ தெரிந்தினி— (செ)
வருண ஜபங்களும் வகைவகை ஹோமங்களும்
குருக்கள் முகமாய்ச் செய்து கோடி விதத்தில் பார்த்தேன் (செ)
கருணையும் பெருகாதோ—கர்த்தன்மன முருகாதோ
தருணமி தல்லால் வேறு தயாநிதியே மேலே— (செ)
பல்லுயிர்களும் படும்பாடெல்லாம் பார்த்தாயே
கல்லு மிரும்புருக்கும் கஷ்டத்தைப் பொறுத்தாயே (செ)
தாயே நஞ்சிட்டா லதைத் தடுப்பவர் உலகிலேது
நாயேனுயிர் விடுவேன் நானினி வாழ்வதேது— (செ)

(நாதன் முகவாட்டத்தைக் கண்டு மானவதி மனங்கலங்கி வணங்கி ஒருபுறமாய் நின்று கேழ்ப்பது.)

கமாசு இராகம்—ஆதி தாளம்.

மா. வாடியிருப்பது—ஏதுகாரணமோ கோடிமன்மதாகார (வாடி)

ஆழ்கடல் கலங்கினும் அஷ்டகிரிசலித்து
சூழ்புவி மூழ்கினும் ஊழ்வினைப் பயனென்றே
வாழ்வும் தாழ்வும் யார்க்கும்—வழிமுறை வருமென்று
வழிபடு கடவுளைத் தொழுதிடாமலின்று— (வாடி)

மக்களின் குற்றமோ—மனைவியென் குற்றமோ
தக்கமதியுடைய—மந்திரியின் குற்றமோ
பக்கத்திலிருக்கும்—பரிஜனக் குற்றமோ
பதறுதே யென்மனம்—பகர்ந்திடாமலே— (வாடி)

பிராணகாந்தா! குடிகளால், படைகளால், உத்தி யோகஸ்தர்களால், குருக்களால், சத்துருக்களால், பந்துக்களால், குடும்பத்தால் நேரிடும் தோஷங்களை, எந்த விதத்திலும் மாற்றிக்கொள்ளலாம்—ஆனல் வினை வலியால் தெய்வத்தால் சம்பவிக்கும் துன்பங் களுக்கு, மனித அறிவினல் நிவர்த்திக்கக்கூடுமோ! என்றுமில்லாத விதமாக முகம் மிகவும் வாட்ட மாகக் காணப்படுகிறதே! அதென்ன?

குண. பிரியசகி! பாற்கடல் போல பகவான் நமக்கு எல்லா விதமான செல்வங்களையும் பூர்ணமாகக் கொடுத்திரு க்கிறுரென்று நான் ஸந்தோஷமாக இருக்க, நமது நாட்டிற்கே மழையில்லாக் குறையால் விளைந்து வரும் துன்பங்கள் விருத்தியாகின்றன. நமது யுக்தி களும் முயற்சிகளும் பலன் கொடுக்கவில்லை— ஐயோ பாவம்! காட்டுத்தீயினல் காடுகளழிவது போல, பஞ்சத்தினலுண்டான வறுமை யென்னும்

அக்கினியினால்—குடிகள் தங்கள் மக்களுடனும் ஆடு மாடுகள் கால்நடைகளுடனும், தகிக்கப்பட்டு நாளுக்கு நாள் மடிந்து போகிறார்கள்—என்றால் சகிக்கக் கூடவில்லை—கண்களிருந்தும் கண்களில்லாத குருடர்களைப்போல, அகக்கண்ணாகிய அறிவழிந்திருக்கிறேன். வெயிலில் காய்ந்து வருபவனுக்கு ஆலமரத்தின் நிழல் போல, மனமயர்ந்து வரும் போதெல்லாமெனக்கு உன் புன்னகைமுகமும் குளிர்ந்த பார்வையும் சிரமத்தை மாற்றிவைக்கும்; அப்படி இருக்க இந்தசமயம் உன்னையும், நம்குழந்தைகளையும் பார்க்கப்பார்க்க, ஆஜ்யாகுதியைப்பெற்ற அக்கினிபோல என் மனதில் அடங்கியிருக்கும் தாபமானது அதிகரிக்கிறது, என்செய்வேன்!

மான. துரையே! எல்லாமறிந்தவர்களுக்கு நானென்ன சொல்லப்போகிறேன்.

முகாரி இராகம் விருத்தம்.

இன்பமதடைந்த காலை யினிதென மகிச்சி யெய்தார்
துன்பமடைந்த போதுந் துண்ணெனத் துளங்கிச்சோரா
ரின்பமும் துன்பந்தானு மிவ்வுடற்கியைந் தவென்றே
முன்புறு தொடர்பை யோர்வார் முழுவது முணர்ந்த நீரார்

(கணவனைத்தேற்றுதல்.)

இராகம் முகாரி—தாளம் ஆதி

மயங்கிடலாகுமோ, மகாநுப்பாவனே—
மாறியே யின்ப துன்பம் வருமென்றறியீரோ— (மய)
ஜயமுள்ள காலம்வரை—பயமில்லை யென்பார் மேலோர்
ஜன்மாந்திர கர்மத்தை—ஜயிக்கப்போமோ வீணே— (மய)
இந்திராதி தேவர்களும்—சந்திராதித்தியர்களும்
செந்திருமாலயனும்—சுந்திரே சர்தானும்
வந்த வினையைப் போக்க—வகையறியார் களென்றால்
இந்த மானிடர் நம்மால்—எந்தவிதந் தடுப்போம்— (மய)

பிராணகாந்தா! நம் செயலால், பொருளால், முயற்சியாலாகக் கூடிய விஷயமாக இல்லையே! நாளுக்கு நாள் ஜனங்கள் அநேகர் நம் நாட்டை விட்டுப் போகிறார்களாம். பசிதாகத்தால் உயிர் விடுகிறார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். என்னையும் என் குழந்தைகளையும் பார்த்தீர்களா? வாயாலே சொல்ல வேணுமா?

குண. பிரியசகீ! நான் சலிக்கும் பதுமையாக இருக்கிறேன், என் புத்திக்கு ஒன்றும் தோன்ற வில்லையே! நீ தெரிந்தவள், உனக்கு ஒரு ஆலோசனையும் தோன்ற வில்லையா? சொல், குற்றமில்லை.

மான. துரையே! சிலநாட்களாக எனக்கொன்று தோன்றுகிறது. தங்களிடம் பிரகாசமாகச் சொல்லவும் மனம் ஸஞ்சலத்தை யடைகிறது. எல்லாம் தெரிந்தவர்கள் நீங்கள். பேதமையோடு பிறந்த என்புத்தியும் யுக்தியு மெவ்வளவு?

(லஜ்ஜை—துக்காபிநயம்.)

குண. ஸுமுகீ! ஏன் வருத்தப்படுகிறாய்? நீ யுசிதமறியாதவளா! காரிய காரணங்கள் விபரம் தெரியாதவளா! கண்மணி, குற்றமில்லை, ஏதானாலும் சொல். இங்கிதமான விஷயங்களை பாலர்கள், கிள்ளைகள் சொன்னாலும் பத்தியமாக அங்கீகாரம் செய்யலாம்.

மான. குணநிதே! என்னறிவும் பொறுமையும், இதுவரையில் எனக்கு வசமாக இருந்தன. இப்போதிருக்கிற காலநிலை, அவைகள் என்னணையைக்கடந்து நிற்கின்றன. மாதாபிதாக்களிருவருக்கும் குழந்தைகள் பொதுவானாலும் என்மனம் மக்கள் முகம் பார்க்

கப்பார்க்கக் கொதித்துப்புண்ணுகி, வெண்ணெய்போலுருகி நைந்து தேய்ந்துபோகிறது.

(தயங்கித்தயங்கி கண்ணீர் விட்டுப்பேசவேண்டும்.)

இதே ஸ்திதியிலினிக்கொஞ்சகாலம் இந்த குழந்தைகளிங்கே யிருந்தால், அற்பஜீவன்களாகிய மதலைகள், 7 ஆண் மக்களையும் வறுமைக்குப்பலி கொடுப்பதுடன், பாவி நானுமுயிர்விட, பின்னும் அநேக கஷ்டங்களும் சம்பவிக்குமென்று தோன்றுகிறது. மதிமானே ! ஒன்று பாலென்றும், ஒன்று பழமென்றும் ஒன்று நல்லுண வென்றும், ஒன்று ஆடையணியென்றும், அழுது கண்சிவக்கப் பிடிவாதமாகக் கேழ்க்கிறது. நான் ஒன்றும் சொல்லத் தோன்ருமல் பூமியை நோக்கித் தலைகவிழ்ந்து கண்ணீர் உதிர்ப்பேன். அவைகளுக்குக் குறிப்பறியக் கூடிய பருவமின்னும் வரவில்லை ; தவிழ்கிறதும், எடுக்கிறதும், அணைக்கிறதும், நடைபழக்குகிறதும், உளறிக்குழைந்து பேசுகிறதுமானநிலையிலுள்ளது, எதற்கும் அழுகிறதைத் தவிர வேறு தெரியாது. அக்கினியைக் கண்டு மேலெழுந்து பொங்கித்ததளிக்கும் பாலைப்போல பரிசுத்தமான மனதோடு கூடிய தங்களைப்பார்க்கவும், என் மனம் கட்டுமீறி யோங்கிப் பொங்கிக் கொத்தளிக்கிறதே. இனியிந்த நாட்டில் நம்மால் குழந்தைகளுடனிருக்க ஸாத்தியப்படாது. இந்த க்ஷணமே அதற்கேற்ற ஆலோசனை செய்யுங்கள் ; இனிவரும் காலநிலைமை ஆலோசிக்க, மலை மலையாகச் சகிக்க வொண்ணுத துன்பங்கள் வருமென்று சங்கிக்கிறேன். நாம் வினைவலியின் குறிப்பிற்குக் கொஞ்சம் அஞ்சி நடக்க வேணும். எதிர்த்துப் போராடுவது

முறையல்ல. ஓடியொளித்தால் விடுமோவென்று சொல்லுவீர்கள், அதை முற்றிலும் பரிக்ஷிக்கக் கூடாது—கவனிக்க வேணும்—துரையே—

குண. முக்தே! அதிவிசாலமான உன்னறிவும் காலத்திற் கேற்றபடி குறுகி மெலிந்ததோ! நீ யுன் வயிற்றி லுதித்த மக்களுக்கு மட்டும் மனம் வருந்துகிறாய்; நான் நமது ஆளுகைக்கு உள்ளான பல்லுயிருக்கும் வருந்துகிறேன்—ஒரே காலத்தில் எந்த இடத்திற்கு இவர்களை யழைத்துப் போய் மானமாக வைத்து ஆதரிக்க முடியும். ஸாத்வி! அதிருக்கட்டும், எந்த இடத்திற்குப் போனால் மானமாக காலத்தைக் கழிக் கலாமென்று எண்ணங் கொண்டிருக்கிறாய்? பயப்ப டாதே, சொல். உசிதமாக இருந்தால் அந்த விதஞ் செய்யலாம்.—

மான. வேறு சமயங்களானால் எந்த இடங்களுக்கும் போக லாம், இது சமயம் இனத்தோடு இனம் போய்ச் சேர்ந் திருந்தால் குணமாக இருக்கும் என்று நினைக்கி றேன்.

குண. என் மனதிற் கொன்றும் தோன்ற வில்லை, விபர மாய்ச் சொல்.

(கணவனை தனது ஊருக்கழைப்பது.)

இராகம் தோடி—ஏகதாளம்.

மா. போவோம் வாரீர் துரையே புனிதமா மெங்கள் நாடு
புனிதமா மெங்கள் நாடு—பூர்வீக எங்கள் வீடு— (போ)
காலத்தினல்வறுமை பூண்டோம்—ஞாலத்தோரி கழக்கண்டோம்
சோலை கழனி சூழும்—சொந்த நாட்டையடுத்துப்— (போ)
மாதவத்தாலே பெற்ற—மக்கள் முகம்பார்த்துவாட
ஏது சாபப்பலனோ—யிந்தக்கோலமானோம் போதும்— (போ)

துரையே! இன்னும் எவ்வளவுகாலம் பொறுமையாக இருக்கக்கூடும். நமது மக்களுடன் நாமிருவரும் என் பிறந்த நாடாகிய மதுரைக்குப் போவோம். என் ஸகோதரன் தங்களேயும் குழந்தைகளேயும் பிரியமாக ஆராதிப்பான். ஆலோசிக்க வேண்டாம். புறப்படுங்கள்.

குண. சபலே! என்ன! என்ன! ஏது இப்படிப் பேசினுய்! உன்மனது மிப்படி அறியாமற் கூறியது, என் கால வேற்றுமையோ! அதியாச்சரியத்தை யுண்டு பண்ணுகிறது. எல்லாம் தெரிந்தும் தெரியாதவள் போலப் பேசுகிருய்! நான் ஸந்தோஷிக்கவா! கோபிக்கவா!

சேஞ்சுருட்டி இராகம் ரூபகம் தாளம்
பியாக் கெஜல்.

கு—அன்னமே முன்செய்தவினை—யானேமிக்கோலம்
கன்னல் மொழியாளே நீயும்—கலங்கிரு யென்காலம்— (அ)
மா—கனவிலும் மொழி மாறிப்பேசிடேன்—காவலன்முன்னே
கருத்தி லாராய்ந்து பார்த்து—கனவானே சொன்னேன் (க)
கு—வரிசையுடன் வாழும் நாளில்—வாவென்பார்யாரும்.
கரிசனமாய் நிலைகுலைந்த காலம்—கண் பாரார் தேரும்— (அ)
மா—அலையுடன் அலைமோதும் போது—அப்புவும் மாறுமோ
அண்ணன் மனைசேர்ந்தால் நமக்கு—அவமானம் நேருமோ- (க)
கு—வேட்டகந்தன்னில் வீணையுண்பதை—வெறுப்பா ரடிமானே
காட்டிலலைந்து கஞ்சி குடித்தாலும்—கனமடிதேனே— (அ)
மா—இங்கித குணஸரஸி யெனண்ணனை—எதிப்படிப் பேசுரீர்
அங்குசென்ருல் அவமானம் நேருமென்று—அதிகமாயேசுரீர்- (க)
கு—அடி பேதாய்! என் மனக்குறிப்பை நன்ருய்த்தெரிந்து கொள்ளாமலே—உன் அண்ணன் மீதுள்ள பாச

த்தாலே என்னைத் தெரியாதவன் அன்பில்லாதவனென்று மதிக்கிருய்—

மா. புருஷர்கள் வீட்டில் உயர்ந்த மாளிகைகளில் வசிக்கும்போதும், பெண்களுக்குத் தன் தாய் வீட்டில் கஞ்சி குடித்துக் குச்சு வீட்டில் படுத்திருந்து வளர்ந்த நிலைமையே, மேலாக மனதிற்குத் தோன்று மென்பார்கள். துரையே! என்னை யப்படிப்பட்ட சாமானிய புத்திகொண்டு பேசுகிறவளாக நினைக்காதீர்கள். நிஜமாகவே, என் அண்ணன் எல்லாருக்குமே நல்லவன், அதிலும் நம்முடைய விஷயத்தில் விசேஷ அருமை பாராட்டக் கூடியவன். ஒரு குற்றமும் வரமாட்டாது, ஆலோசிக்காமல் புறப்படுங்கள்:

ஆநந்த பைரவி இராகம்-சாப்புத் தாளம்—
கண்ணிகள்.

மா—பிறந்த வீடுபோகக் கோரும்—விடைதாரும்
சிறந்த புவியை யாளும் இறையே—யென் துரையே— (பிற)

து—எது இந்த எண்ணம் படைத்தாய்—மானம் விடுத்தாய்
எல்லா மறிந்தவள் நீ சொல்லாது சொல்ல— (எது)

மா—கொடிக்குக்காய் பாரமாமோ நாதா—பிராணநாதா
படிக்கு ளென்னண்ணனைப்போல்--பிறப்புந் தானுண்டோ--(பிற)

து—காலகதியோ பொல்லாது—எங்குஞ் செல்லாது
கணமும் மானம் போனல்—உயிரும் நில்லாது— (எது)

மா—தந்தைதா யிருபேருமவனே—பிறந்தவனே
சிந்தை மகிழ நம்மைச்—சேர்த்து வைத்தவனே— (பிற)

து—இனத்தாரை யகித்து வாழ்வது—தாழ்வது
கனத்தை மாற்றிக்கௌர வத்தையழிக்கும்— (எது)

மா—மச்சான்முறை யென்பதும் போச்சோ—வீண்பேச்சோ
எச்சாதியற்குமது உச்சிதமன்றே— (பிற)

துரையே! கூழ்குடித்தாலும் தெளிவை மருமகனுக்கிட்டு அடியிலுள்ள பாகத்தை தன் மக்களுக்கிடுவதல்லவோ உலகவழக்கம்! எல்லா மறிந்த என் அண்ணன் உங்கள் குணம்மரியாதை தெரியாதவனு? உங்களை மேன்மையாகவே வைத்து நடத்துவார்—ஸந்தேகம் கொள்ளாதீர்.

கு. கண்ணே! என்ன பேதமை! என் சொல்லில் விளங்கும் நியாயம் உன் மனதில் தோன்றவில்லையே! சொல்லுகிறேன் கேள்.

விருத்தம்.—இராகம் கேதாரகௌளம்

கோற்றொடி செல்வர்பாற் குறையிரந்து நின்
றேற்ற யின்றுயிர் சுமந்திருத்தலீறிலா
வாற்றலு மானமு மறிவுங்கல்வியு
மாற்றருஞ் சீர்த்தியு மாற்று மென்பவே

அடிகுணவதியே! நிலையிழந்தவர் உயர்ந்தோர்பால் அணுகி அடங்கி யொடுங்கி முகம் பார்த்து சமயம் பார்த்து பேசிப்பழகி காலம் போக்குவது, அவர்களுடைய ஒப்பற்ற பலத்தையும் மானம் அறிவு கல்வி மாசுபடாத கீர்த்தியையும் அழித்து விடுமே. இதை யறிவுடையோர், மனத்தாலும் நினைப்பார்களா? அதிலும் பெண் கொடுத்தவர் வீட்டில் காலமில்லாக்காலத்தில் போய்த் தாமதிப்பார்களா? உலகம் பழிக்குமே; அதிபுத்திமானகிய நளசக்கிரவர்த்தி வினைவலியால் நிலைதவறித் தன் தேவியுடன் கானகமடைந்த காலத்தில் உன்னைப் போலவே, அந்தப் புண்யவதியும் தன்பதியை தான் பிறந்தவீடு போகவேண்டினள், அப்போது அவர் கூறிய சமாதான மொழியைக் கேட்டதில்லையோ?

விருத்தம்—இராகம் சங்கராபரணம்.

மிக்கவெஞ்சமத்திடை வெருவியோடின
ரொக்கறன் புறத்தனி யுலகில் வாழுநற்
புக்குவேட்டகத்தினி லுண்ணும் புன்மையோர்
மக்களுட் பதடி யென்றுரைக்கும் வையமே

போர் முகத்தில் பயந்துப் புரங்காட்டி யோடுகிற வனும், உறவினர் பால் வலிய அடைந்து வாழ்கிற வனும், வேட்டகத்தில் கால மில்லாத காலத்தில் தங்கியிருந்து, வயிறு வளர்க்கிறவனும், மக்களுட் பதர். ஆண்மையில்லாப் பேடி, ரஸமில்லாத சக்கை. உயிருள்ள சவம். கண்ணே! வேண்டாம். உன்னையும் உன் மக்களையும் கூட்டிக்கொண்டு காடு அடைந்தாவது, நாடு அடைந்தாவது, உலகம் பழிக்காவண்ணம் பிச்சையேற்றுவது காலம் கழிப் பேனே யல்லாது, நான் மதுரைக்கு வரமாட்டேன். பெண்ணே! கோபிக்காதே! ஆராய்ந்துபார்.

மா. (கோபத்துடன் விழித்துப்பார்த்து) ஆமாம், உங்கள் தர்மந்தான் உங்களுக்கு ஞாபகத்திலேயே இருக்கும். சொந்த மனைவியையும் மக்களையும் வலிய வறுமைக்கு உயிர்ப்பலி கொடுப்பது தர்ம மாகுமோ! தன்னையும் தனது ஸர்வஜனங்களையும் காப்பாற்றுவதும் தர்ம விகிதமான கர்ம மல்லவோ! (விம்மியழுது) நீங்கள் உங்கள் தர்மத்தைக் காப் பாற்றிக் கொண்டு இங்கே யிருங்கள். என்னாலினிச்ச கிக்கமுடியாது. தீயைக்கண்ட மலர் வாடுவதுபோல் என்னருமையான ஏழு மக்களும் பசியால் வாடி உயிரிழப்பார்கள். நிச்சயம். அவர்களைத் தாங்கிப் பெற்ற இந்தப் பாழுங்குடல் சுர்றிப்பற்றி யெரி

கிறது. மார்பிலேறியடைக்கிறது. ஒரு குழந்தைக்கு ஒருகோடிதானம் தர்மம் தவம் செய்கிறார்களே! என் முன்னும் பின்னும் அடியிலும் மார்பிலும் தோளிலும் மடியிலும் வளர்ந்த குழந்தைகளை எப்படி உயிரிழக்கப் பார்ப்பேன். உங்களையுமழைத்துப் போக விரும்புகிறேன். நீங்களங்கு வருகிறதற்கு மனமில்லை யென்று வற்புறுத்திக்கூறினால் நான் என் மக்களுடன் போகவேண்டும். அவசியம் என்னைத்தடுக்க வேண்டாம். இனி க்ஷணமும் இங்கிருக்க முடியாது. சேவகா! குழந்தைகளைக் கூப்பிடு. சீக்கிரம் போய்வா:

(சேவகன், சுமுகன், சுகுணன், சுசீலன், சுவீரன், சுதாகரன், சுந்தரன், முறையே, வினயமாக பாடிக்கொண்டு பிரவேசித்து இரண்டுபுறமும் நிற்கவும்.)

'சேலாவு சேலாவு' என்ற பார்ஸி மெட்டு.

அன்னை தந்தையே—நம்—மடிகள் பணிந்தோம்
அன்புடன்—போற்றி நாங்கள்—அங்கம் குளிர்ந்தோம்—(அன்)
எங்களை நீங்கள்—இங்கழைத்ததேன்
திங்கள் முக மலர்கள் வாடி—திகைத்து நிற்பதேன்— (அன்)
அறியா மதலைகள்—தெரியாமற் செய்த
அற்பபிழைகள் அனைத்தும் பொறுத்து—ஆதரிப்பீரே— (அன்)

(குணசோமனும் மாயவதியும் குழந்தைகளை யணைத்தெடுத்து ஆசீர்வதிப்பது)

மா. குழந்தைகளே! நான் கொஞ்சகாலம் உங்கள் மாமன் வீட்டிற்குப்போய் வரவேண்டியிருக்கிறது. நீங்கள் உங்கள் தந்தையுடனே இங்கிருக்கவேண்டும். அதையுங்களுக்குத் தெரிவிக்க யழைத்தேன். உங்கள்

மனம் போலவெல்லாம் தந்தையர் வைத்து ஆதரிப்பார். நான் போய் வரலாமா?

சுமு. அம்மா! அம்மா! அதென்ன அப்படிக்கேழ்க்கிறீர். தந்தையர் எம்மைக் காப்பாற்றுவார். பயமில்லை. ஆனாலும் உங்கள் பக்கமிருப்பது போல எங்களுக்காகுமா? பயிர் செழிக்க ஜலம் காரண மானாலும் மழைநீர்போலவாகுமோ; மற்ற மண் நீர் எல்லாம் தாய்முகம்போல வாகுமோ? தந்தையர்தரும், அணி ஆடை யமுதமெல்லாம்—

(குழந்தைகள் கூடிப்பாடுவது.)

ஸிந்துபைரவி—தத்தினமாற மெட்.

குழ—அன்னையே நாங்களுன்னை-யெப்படி யரைக்கணம் பிரிவோம்
தன்னையே நொந்துநினைந்து—தனியாகவேதிரிவோம்— (அன்)

மா—அனல்படு மெழுகாகிமனம்—அழிந்துருகிவாடுமே
கனவிலும் நினைவிலும்—கண்மணிகளைத் தேடுமே— (அனல்)

குழ—யார்முகம்பார்த்துஅமுதளித்துஅன்னையே யெம்மைதேற்றுவார்
கார்முகில்போலக்கருணைசுரந்துகோரப்பசியை யாற்றுவார்(அன்)

மா—தந்தையுமகருச்சொந்தமாகவே—எந்தப்பொருளுந்தந்திடுவார்
நிந்தையாகநீர்சொல்லும்மொழியால்-சிந்தைகலங்கிநொந்திடுவார்
(அனல்)

குழ—பெற்றதந்தையைகுற்றங்கூறிநாங்கள் உற்றகதியையிழக்கவோ
கொற்றவனானாலும் குழந்தைக்குத்தாயர்மோ—சற்றுமுலகினில்
பிழைக்கவோ (அன்)

அம்மா! தந்தையர் எம்மை யாதரிப்பார். எல்லாம் கொடுப்பார். ஆனால் உன்னை விட்டுப்பிரிந்தா லெங்களுக்கு இருக்க முடியாது. உன் பின்னே நாங்களும் வருவோம். (கண்களைப் பிசைந்து) எல்லோரும் வருவோம்.

மா. ஈசா! நானென்ன செய்வேன்! பிராணநாதா! இந்தக் குழந்தைகளிப்படி, ஒரே விதமாகப் பிடிவாதஞ் செய்கின்றனவே! அடா! கண்மணிகாள்! உங்களில் மூத்தவர்களாயிருக்கிற மூன்று பேர்கள் தந்தையுடன் இருங்கள். மற்றவரை யழைத்துப்போய் சீக்கிரம் திரும்பிவருகிறேன். கலகஞ்செய்யாதீர்.

குழ. (தனித்தனியே சொல்வது) அம்மா, நான்வருவேன், தம்பியிருக்கட்டும்—(2) நான்வருவேன்—அண்ணனிருக்கட்டும்—(3) அம்மா! எனக்கு—யார் (கண்ணில் ஜலம்) நான்வரத்தான் வருவேன்—(4) நான் சாப்பிடமாட்டேன்—ஊ—அவன் வரவேண்டாம். (5) நான் ஒன்றும் கேட்கவில்லை. அம்மா! அம்மா! அவன்மட்டும் வரலாமோ? போடா அண்ணு! நீவரக் கூடாது.—(6) (காலடியில் விழுந்தழுகிறது) (7) (தரையில் புரண்டு அழுகிறது.)

மா. தெய்வமே! ஒன்றுமுகம்சுழித்துக்கேழ்க்கிறது, ஒன்றுகோபிக்கிறது, ஒன்று அழுகிறது, ஒன்று அடித்துக்கேழ்க்கிறது, ஒன்று புரண்டழுகிறது, ஒன்று கெஞ்சுகிறது, எல்லாம் மொய்த்துக் கொள்ளுகிறது. பிராணநாதா! இதற்கென்செய்வது, இவைகளொன்றையும் பிரிந்துபோகமுடியாதுபோலிருக்கிறதே! எல்லாமென்னைத் தொடர்ந்து வருகின்றனவே!

(குழந்தைகளைப்பார்த்து)

கமாசு இராகம்—ஆதி ஸாகி மேட்.

மா—பாலரே சிலரே பாட்டன்வீடுபோய் வருவேன்
பாங்காய்த்தந்தையரும்மைப்—பாதுகாத்திடுவரே (பால)

குழ—தாயைப்பிரிந்து மக்கள்—தரணியில்சுகமடையார்
வாயைவிட்டுச்சொல்லவும்—வகையொன்றும்தோணலையே (தா)

மா—கண்மணி குலமணிகாள்—காசுபணம்தந்திடுவேன்
கலங்கிடவேண்டாம் நீங்கள்—காணவும்மைவந்திடுவேன் (பா)
குழ—எத்தினைசொன்னாலுந்தாயே—எங்கள்மனஞ்சலித்திடுமோ
ஏமாற்றிப்பேசும்சொற்கள்—எங்கள்முன்பலித்திடுமோ (தா)
அம்மா! அம்மா! நாங்கள் வருவோம், நாங்கள் வருவோம்—

குண. (மனங்கலங்கிப்பேசுவது) மானவதி! எல்லாம் தெரிந்தவளாகிய நீயே, இப்படி மனமருண்டு பேசுகிறாய்? மதலைகளாகிய மக்கள் உன்பின்னேவருவே னென்று பேசுவதும் அரிதா? பசு சென்றவழி கன்றுகளும் தொடரும். இது உலக வழக்கந்தானே! நமது முகம்பார்த்துவாழும் பல்லுயிர்களுக்கு முன்னே அவர்களுடன்கலந்து எமது உயிரைவிடுங்காலம் நேர்ந்தாலும் மாறாதபுகழைக் கொடுக்குமே! வீணே மயங்காதே!

இராகம் உசேனி—சாப்புத்தாளம்—வாடலகிதே பதம்மெட்டு.

மயங்காதே—மானவதியே—நம்விதியே—நீ— (மய)
மலர்முகத்தாளே என்றும் வருவது வந்தேதீரும் (மய)
உண்டானபோதுயாருங்—கண்டுவுபசரிப்பார்
உலகவழக்கமிதின்—உண்மையைமறந்தாயோ
ஒப்பும்நீதியுரைத்தேன்—உன்னண்ணனையோவெறுத்தேன்
செப்பும்மேலோர்மொழி—தப்பாதுசொன்னேன்மானே— (மய)
நன்றாய்நீவாழ்ந்தநாளி—லுன்றாய்வீடறியாயே—
குன்றானசெல்வமெல்லாங்—குன்றிப்பதானாலுமே
மன்றாடிக்கேழ்க்கிறேன்—மான்விழியாளேவேண்டாம்
மறுத்துச்சொல்லிப்போனாலே-மானக்குறைவுண்டாகும்— (மய)
ஹே! சபலே! உலகவழக்கம் பழக்கம் பாசம் எல்லாம் பொய் நாடகமடி, ஜாலம். இந்தநிலைமையில் உன் மக்களுடன் நீ தனியே, மதுராபுரி செல்வது

யாகில் யாரும் மதிக்கார். உன் இனத்தாருன்னைக் கொண்டாட மாட்டார்கள். இதுஸத்தியம்! என் மனக்குறிப்பிற்கப்படித் தோன்றுகிறது. ஆவியிலும் மேலென்று பேசப்படும் அருமையான மானத்திற்கு, குறைவேற்படும், வேண்டாம். மும்முறை கூறுகிறேன். நான் அந்த மானத்தையே பெரிதென்று நினைக்கிறவன். இந்தப்புன்றசை பெரிதல்ல, நமது பெண்டுமக்கள் பெரிதென்று சபலங்கொள்ளேன்.

மா. நிஜம்! ( துக்கம் கோபாவேசத்துடன் உற்றுப்பார்த்து பேசுவது.) ஆமாம். எல்லாமறிவேன். என்றுமிப்படித் தான். எங்கள் விட்டுப்பேச் செடுத்தால் உடனே சன்னதந்தான். இந்த ஆட்டந்தான். ஊ? —போகாதவகைக்கு வேண்டிய தத்துவங்கள் சொரிகிறது. அடேயபபா! கற்றீரே இந்தவித்தை. எல்லாருக்குமந்த மானந்தான். நீர் இவ்வளவு தூரம் பேசினீரே! நான் மக்களுடன் போய்வருகிறேன், வருகிறதெல்லாம் வரட்டும்; இனி யார் என்னைத் தடுத்தபோதிலும் கேழ்க்கமாட்டேன். விதிபோல் நடக்கட்டும்.

கு. (அதிகோபம்) குடிலபுத்தி! நிதானி. அறிவேன். பாழும் வினைவலியல்லவோ உன்னைத் தூண்டுகிறது. அடி, யருமைக் குழந்தைகளையும் அழைத்துப்போகிறேன் என்கிறுயே! என்ன துணிவு! என்னஸாஹஸம்! பார் என்னை! அப்படியேதேனும் குறைவுயேற்பட்டால், குபிதே! என் முன்னே வரக்கூடாது. உங்கள் முகத்தைப் பார்க்கமாட்டேன். போ.

மா. (கோபம், அழுகை) நாதா—அப்படியா! அப்படியா! உங்கள் வாயால் வரக்கூடிய பேச்சா! என்ன

காலவேற்றுமை! எந்த ஜன்மத்திலும் பிரியக்கூடா தென்று பலமுறை கூறிய வாக்கிலிந்த விஷமச்சொற்கள் பிறந்தது!

முகாரி இராகம்—ஆதிதாளம்.

அனுப்புவீர் அனுப்புவீரே—அண்ணலே
அண்ணன்வீடு—போறேன் (அனு)
அறந்தழைத்திடுமெந்தன்—பிறந்தவீட்டையடுத்து
அருமைமைந்தரைவைத்து—ஆசரிப்பேன் சோராமல் (அனு)
கனவிலும்மொழிகடவேன்—கற்பின்நிலைதவறேன்
மனம்வாக்குக்காயத்தால்—மறந்திடாமற்பூசிப்பேன்
தினையளவுமனஸ்தாபத்தை—சகிப்பேனே
நினைவிலும் சித்திரையிலும்—நின்மொழி மறப்பேனோ—(அனு)

துரையே! இவ்வளவு காலம் தங்களுடன் கூடிவாழ்ந்து பழகி வந்திருக்கிறேன். இந்த விதம் மனம் வெறுத்துக் கூறினதில்லை. நான் சமயந்தெரிந்து நடக்கக் கூடியவள்தான், எனது அண்ணனும் இங்கிதமறிந்தவன், ஸந்தேகமில்லை—காலபேதத்தினல் ஏதேனும் குற்றங்குறை எங்களுக்கேற்படுமானல் கேளுங்கள்.

பெற்றதாய்தந்தையர்க்கு—வுற்றதேவுண்மையானல்
சொற்றவனேதெய்வ—மென்றிருந்ததும்மெய்யானல்
பெற்றுஅபமானத்தை—சற்றுந்திரும்பிவாரேன்
சொற்றவறிடேனிது—சரதம்சரதமய்யா— (அனு)

நான் உத்தம குலத்தில் ஒரு தாய்தந்தை வயிற்றிற் பிறந்து, பிராணபதியாகிய உங்களையே தெய்வமென்று பாவனை யோடிருந்தது சத்தியமானல் திரும்பவும் உங்கள் முகத்தின் முன்னே வரமாட்டேன். நிஜமிது. எக்கதியேனு மடைவேன்.

(மக்களுடன் அதிவேகமாய் புறப்படுவது—கெட்ட சகுனங்கள் முன்னேகாண மனங்கலங்கி அரசன் தடுப்பது.)

திலஷோஜால் பேவையா—கஜல்மெட்டு—தாளம் நுபகம்.

குண—கட்டிவழிமறைக்கும்—காகமதோதோணுதடி
சட்டிநெருப்பைபற்றுங்கி-சவத்தின்முன்னேயழுதுவாரான் (கட்)

வலியனும்கட்டுதடி—வாணியுனும்கூவிவாரான்
பலிபிண்டந்தாங்கியதோ—பார்ப்பானும் சோர்ந்துவாரான் (கட்)

காவியுடைதரித்துக்—கரத்தில்தண்டம்பிடித்து
மேவியஜகம்வெறுத்த—மேலாம்சன்னியாசிவாரான் (கட்)

கருமானும்செட்டியுமே—கலந்துகடைவீதிபாரம்
உறுதியடிகூடாதடி—உத்தமியேபோகவேண்டாம் (கட்)

மக்களுக்கெதுநேருமோ—மனைவியேயுனக்கெதுவருமோ
தக்கமதியுடையாய்—தகாதடிதர்க்கம்வேண்டாம் (கட்)

உறுதியாக நம்பு. அடீ! கோபக்காரி! பலதுர்ச் சகுணங்களும் முறையே காண்கிறதே! எனதாழ்ந்த கருத்தையழிக்கிறதே! பிடிவாதம் பொல்லாது.

மா. இனியா திரும்புவது; வரும் விதியைத்தடுக்க யாரே வல்லார்? மாறிமாறிப் பேசுவதும் முறையோ? வாருங்கள் போவோம்.

(பதிநின்ற திக்கை நோக்கி வணங்கிச் செல்வது. குணசோமனும் அறிவழிந்து செல்வது.)

களம் முற்றிற்று.

## களம். 4.

இடம்.—வனமார்க்கம்.

காலம்.—பகல்

பாத்திரங்கள்.—மானவதி மக்களுடன் பிரவேசம்.

இராகம் சௌராஷ்டிகம்—தாளம் சாப்பு.

மா—எப்படிநடப்பேன்—இவ்வழிகண்டு—எப்படிநடப்பேன் (எப்).
கப்பியவிதியால்—காசிக்கரைவிட்டு
ஒப்பில்லாக் கணவரை—யொண்டியாகவைத்து (எப்)

கண்களுஞ்சோருது—கனிவரயுலருது
குலமணிகளான—குழந்தைகள்வாடுது
வெய்யிலுங்காயுதே—வெந்துடற்றேயுதே
வெப்பந்தலைசுற்றுதே—கொப்பளித்தடிப்பற்றுதே (எப்).
அம்மாஅம்மாவென்று—அடிக்கடிக்கத்துதே
சும்மாவழுதுநின்று—சோர்ந்துடல்வத்துதே
இம்மாதிரியென்னை—இடருறச்செய்தாயே
பெம்மானேச் சகியேனே—பேதை நான் திடங்கொண்டு--(எப்)

ஆகா ! தெய்வமே ! என்ன கோபத்தினுல் விளைந்த கஷ்டம் ! என்ன துணிவு ! என்ன அறியாமை ! நம்முடைய ஊர் எங்கே ! நாம் பிறந்தநாடாகிய மதுரை எவ்வளவு தூரத்திலுள்ளது ! இந்த மதலை மக்களை யழைத்துக் கொண்டு, சிரமத்தையாலோசிக் காமல் இத்தனை யவசரமாகவும், தனியாகவும் புறப் பட்டு வந்தோமே ! இந்த மார்க்கத்தையும் முன்னே காணும் சூரிய தாபத்தையும், பசி தாகத்தையும் பொறுத்து பாலருடன் செல்ல வேண்டிய சிரமத் தையும் நினைக்க நினைக்க, தைரிய மொடுங்கி உடல் நடுங்குகிறதே ! எனதெண்ணப்படி போய்ச்சேர வேணுமே ! ஹே ! சுந்தரேசா ! தாயே மீனுக்ஷி !

நீங்கள்தான் துணை. சுமுகா! சுகுண! குழந்தை களே! தொடர்ந்து வாருங்கள்.

சேஞ்சுருட்டி இராகம்—ஆதிதாளம்.

சங்கரா—சிவசங்கரா—துங்கமதி—கெங்கைகொன்றை
அங்கமாய்ச்—சிரத்திற்பூண்ட— (சங்)
நோகுமே—கால்கள்நோகுமே
கோகனதச் சீரடிகள்—வேகமாய்வழிநடந்தால்— (நோ)
மக்களா எந்தன் மக்களா
பக்கத்திற்சேர்ந் துநடந்தால்பக்ஷணங்கள்வாங்கித்தருவேன்- (மக்)
காயுதே—வெயிற்காயுதே
கனல்படுமெழுகுபோல் கரைந்துமெய்யுருகுதே— (கா)
வாருங்கள்—ஓடி—வாருங்கள்
கோரிப்போகும்—மாமன்வீடு—கூப்பிடுதூரமுள்ளது— (வா)

(பாலர் பசித்ததழுவதும் மானவதி தேறுதல்சொல்வதும்.)

(பார்ஸி மெட்.) பாரைய்யா செட்டியாரே.

பா. வயிர்பசிக்குதம்மா-யெங்கள்தாயே-வயிர்பசிக்குதம்மா—
பாலுமன்னம் பலகாரங்கள்—பலவகைப்பழரசங்கள்
காலங்கண்டு அளிப்பாய்—சாலக்கண்டுகளிப்போம்—அம்மம்மா-(வயி)

மா. வாடாதீர் கண்மணிகாள்—வருந்திமிக—வாடாதீர்கண்மணிகாள்
வகைபலகனிவர்க்கங்கள்---வருந்தியோடிப்பார்த்துத்தாரேன்
வந்துயென்பக்கஞ்சேரும்-உகந்துஅளிப்பேன்பாரும்-அழுதுமிக-(வா)

பா—கண்கள்சோருதேயம்மா-களைத்துமிக-கால்கள் பின்னுதேயம்மா-
லட்டுமிட்டாய் ரொட்டிபிஸ்கட்டு—பிட்டு வடை சுட்ட அடை
தட்டாமற்றருவாயே--திட் டமாயறிவோமே—கொண்டுவாரும்—(வயி)

மா-நடந்துவருவீரப்பா—எனையடுத்துத்—தொடர்ந்துவருவீரப்பா-
ததியோதனம் சக்—கரைப்பொங்கல்—தளதளப்பான புளியன்னமும்
தப்பாதுவாங்கிப்பசி-தணிக்கிறேன் தளராதீர்கள்-வாரும்வாரும் (வா)

மா. சுமுகா! சுகுணு! வாருங்கள் ஓடிவாருங்கள். ஆகாயத்தைப்பாருங்கள். இடி முழக்கமும், மின்னலும், மழையும், வருகிறதே! திடீரென்று காற்று வீசி மேகத்திரள்களால், காய்ந்து கொண்டிருந்த வெயிலை மறைத்ததே! நம்முடைய வாழ்வின் நிலையைக் கண்டு பரிகாசஞ்செய்கிறதுபோலக் காண்கிறதே!

விருத்தம் ஆனந்தபைரவி இராகம்.

பஞ்சணைமீதிற்பாதம் பட்டிடில்வருந்துமென்று
கஞ்சமலர்கரத்தாற்றுங்கிக் களிப்புடன்மடிமேல்வைத்துக்
கொஞ்சிடும்பதியைவிட்டுக் குழந்தைகள்தொடரப்பின்னே
பஞ்சைபோற்பரதவித்துப் படர்வனம்வரவுமானேன் (பஞ்)

ஆகா! தெய்வமே! என்ன செல்வம்! என்னவாழ்வு! என்ன சுகம்! எல்லாம் கனவாய்ப் போச்சே! கதையாச்சே!

(எல்லாரும் மறைந்துபோவது.)

களம் முற்றிற்று.

---

## களம். 5.

இடம்.—வனம்.

காலம்.—பிற்பகல்.

(மழை இடி மின்னல் வீசின்.)

செஞ்சுருட்டி இராகம் ரூபகம் தாளம்-கண்ணிகள்.

மழையோ—மழையோ—மனக்கலங்கப்—பொழியுதே
மகாதேவனே—என்செய்வேன்— (மழை)
பழுதில்லாமன்னவர்பாவலருக்கன்று பரிசளித்ததுபோல்(மழை)
இடியோ—இடியோ—படீரென வெடிக்குதே—
அடிக்குடலும் பதருதே. (இடி)
அன்றிரணியனைக்கொன்றிடத் தம்பத்தை—அரிபிளந்ததுபோல்

மின்னலும்-பின்னலும்-முன்னேதோன்றி மறையுதே—
என்நினைவை மாற்றுதே— (மின்)

செந்நெற்கொழிக்கும் சாசிபன்வாழ்வு காட்டிமறைத்ததுபோல் (மின்)

அடியம்மா! என்னால் சகிக்கக் கூடவில்லையே! கண்ணை மறைக்கிறதே! காதையடைக்கிறதே! குழந்தைகள்படும் அவஸ்தையைப் பார்க்க வயிறு பற்றி யெரிகிறதே! அய்யோ! கோழிகள் தன்குஞ்சுகளை இரக்கைகளால் மறைத்தணைத்து மூடிக்கொள்வது போல இடிமின்னல் மழைக்குப் பயந்து வந்த குழந்தைகளை தாவியெடுத்து அணைத்து கட்டிக்கொண்டேன். வாருங்கள், இதோ சோலை தெரிகிறது. பல வகை பழங்களுமிருக்கின்றன. பறித்துத் தருகிறேன் வாருங்கள்.

(பழங்களோடு கூடிய மரங்களுடைய சோலையின்.)

(எல்லோரும் செல்வது.)

குழ. அம்மா! பழங்கள் அதோ உயரத்தெரிகிறது. கைக்கெட்ட வில்லையே! நீ பறித்துக் கொடு, கல்கொண்டெரிந்து பார்க்கட்டுமா?

மா. குழந்தாய்! நம்முடைய பாக்கியம்போல இருக்கிறது. என் செய்வேன்! நான் பெண்பால்தானே! மரத்திலேறிப் பறிக்கக் கூடுமா! கல்கொண்டு எரிந்து பழங்களை உதிற்கத் தெரியுமா! மக்களெல்லாம்! பழங்களைக் கைகளால் சுட்டிக்காட்டி அழுகின்றனவே! ஹா! மீனாக்ஷி! பரதேவதை—நீ தான் கண் பார்க்கவேணும்.

கலியாணி இராகம் ரூபகம் தாளம்—இஜாமேதேரிஹ்யேமெட்.

கண்பார் என் தாயே—கவலைபட்டுக்கானகம்வந்தேன்— (கண்)

வறுமையினுல் நொந்துமிக—அருமைகுலைந்திங்குவந்தேன்
மைந்தர் முகம்பாராய்—மீனுக்ஷி—சிந்தைமகிழ்ந்
தவர் பசிதீராய்— (கண்)

கனிகளுயரக்காணுததோ—கண்டுமக்கள்துடிக்குதிதோ
கருணைசெய்வாயேக்—கனியுதிரக்—கருணைசெய்வாயே
கயற்கண்ணியே—காலமிதுவே— (கண்)

தாயே! ஜகத்ஜனனி! உன்னுடைய கடாக்ஷ விக்ஷணிய மாத்திரத்தாலேயே, எல்லா அண்டங்களிலுமிருக்கும் ஜீவகோடிகளை ஆதரிப்பதினுலன்றோ—மீனுக்ஷியென்ற திருநாமத்தை யடைந்தாய். பசியாகிய தீயிற்பட்டு மக்கள் புழுப்போலத் துடிக்கின்றனரே! உயர்ந்த மரங்களிற் காணும் பழங்கள், எங்கள் கைக்கெட்டும்படி அனுக்கிரகஞ் செய்ய வேணும். தாயே? உன்கிருபையால் நிகழக்கூடாத விஷயமும் உண்டா! பகவதி! பாண்டிய ராஜ புத்திரி! சுந்தரேசப் பிரியே!

(மரக்கள் தலைவணங்கி பூமியிற் படுக்க.)

ஸிந்துபைரவி இராகம்-ரூபகம் தாளம்.

பாலர் பசியாற்றப் பழங்கள் பரித்துத்தாரேன்—
பழங்கள் பரித்துதாரேன்—பரிவுடன் நடந்துபோரேன்— (பா)

மாங்கனி பலவின்கனி—மதுரமிகும் கதலிக்கனி
தீங்கனிக் கிச்சலிகள்—தெரியுதே பறித்துத்தின்பீர்— (பா)

தெங்குவிளா சீதாக்கனி—பாலையோடு சிறுகிளா
எங்கும் நிரைந்துகாணுது—உங்கள்பசியாற்றிக்கொள்வீர்—(பா)

(எல்லாரும் பழங்கள் பறித்தானவுடன்
மரங்கள் முன்போல தலை நிமிருவது.)

களம் முற்றிற்று.

# அங்கம். 2.

## களம் 1.

---

இடம்.—அந்தப்புரம் படுக்கை அறை.

காலம்.—மாலை.

பாத்திரங்கள்.—நல்லண்ணன்-சுபிராதா.

மூளியலங்காரி-குடிலாம்பாள் பிரவேசம்.

எதுகுலகாம்போதி இராகம்—ஆதி தாளம்.

(இகநேமந்துனே செவியா மெட்டு.)

குடி. இன்றேதோ—ஒருவிதமாய்—என்சாமிதுரை, கண்ணீர்விடு [கிறார்—(இன்)

மதிமுகம்வாடிமிகமார்பும்படபடத்து மலரணையில், பலமுறையும் நிலைப்புமாறித்—தலைபுரள— (இன்)

தன்னைத்தானேமறந்து—என்னநினைவோபிறந்து
சொன்னயமில்லாமற்கூவி, சன்னதம்கொண்டாற்—போற்றுவி (இன்)

எழுந்தெழுந்து-அழுதுவிம்மி-ஏங்கித்துயரோங்கிடவே
அழிந்தறிவு-அடுத்தடுத்து அழைத்துவாயால்-அரற்றிப்பேசி- (இன்)

(சுபிராதா படபடப்புடன் நித்திரை கலைந்துமனங்கலங்கிப்பேசுவது.)

ஹா! பிரியகாந்தே! என்னைப்பிடித்துக்கொள். உடல் நடுங்குகிறது.

குடி. ஆகா! துரையே! என்ன ஆச்சரியம்! இந்த விதம் ஒருநாளுமிருந்ததில்லையே! என்னகண்டீர்கள், யாருடன்பேசினது? ஏன் கண்ணீர் விடுகிறீர்கள்? நிதானமாகப்பாருங்கள், விற்றிருங்கள். இங்கே என்னைத் தவிர ஒருவரும் வரவில்லையே! நித்திரை தானே செய்தீர்கள்!

சுபி. என்னறிவு என்சுவாதீனத்தில் இல்லையே! கல் மனமும் உடைந்து உருகும்படியான காரியங்கள்பலவும், என்கண்கள் முன்னேநிகழப் பிரத்தியக்ஷமாகக் கண்டேனே! ஒன்றும் மறக்க முடிய வில்லையே! ஹா! மானவதி! என்பிரியசோதரி! நீ தந்தையில்லாத அனாதையாச்சே; இது கனவா! இல்லை யில்லை. உனக்கு இப்படிப்பட்ட கஷ்டங்கள் சம்பவிக்கக் காரணமொன்றும் காணேனே! சுந்தரேசா! நான் எப்படிப் பெருமையாக இருக்கக் கூடும்!

கமாசு இராகம்—தாளம் ரூபகம்.

கண்ணே இன்றுநான்-கண்டகனவை-பெண்ணே-யென் சொல்வேன்
கதியற்றுதங்கைப்பதிவிட்டுப்பாழும் விதிதொட்டுவர— (கண்)
கடுஞ்சுரத்தில்கால்கள்நோக—காதல்மக்கள்பின் துடர
படும்பாட்டையிந்தப்பாவிபார்த்தேன்—பதறுதென்னாவி— (கண்)
கற்புக்கரசிகலங்குவாளோ—கருதியென்னைத்தியங்குவாளோ
கற்பனையால்வந்த கடும்பஞ்சத்தால்—காட்டில்தனிவர— (கண்)
கண்ணிலைமத்தங்கையைக்கண்டுபேசி—கலக்கம்மாறுமோ
கணத்தில்விடைதந்தால்போவேன்—கவலைதீருமோ (கண்)

பிரியஸகி! நினைக்க மனம் ஆறுமற் பொங்குகிறதே! என்தங்கை நமது குலமணி, பதிவிரதா சிகாமணி, மானவதி, காலகதியால் தங்கள் நாட்டில் பஞ்சம் மேலிட புருஷனை பிரிந்து தனியே மக்கள் துடர்ந்து வர, வறுமையினால்மெலிந்து வனமார்க்கத்தில் பலவித சிரமங்களை யனுபவித்து வரும்படியான கோலத்தை, நிஜமாக என் கண்ணாற் கண்டேனே! எனதாருயிர்த் தங்கைக்கு இந்த வித ஸம்பவ மெப்படி ஏற்படும்! தர்மத்திற்கும் தெய்வத்திற்கும் கண்ணில்லாமற் போகுமோ!

குடி. துரையே! எது உங்களறிவுக்கும் பேதமை யேற்பட்டது! இதுதானு! ஆகா! வெகு நேர்த்தி! நான் என்னவோ வென்று மலைத்துத் திகைத்துக் கலக்கங் கொண்டேன். நீங்கள் மகா தீரர். நிதானம் ஆராய்ச்சி யுள்ளவர். அற்பமான நிலையில்லாத ஒரு சொப்பனத்தைக் கண்டு இந்த விதம் மனோ தைரியத்தை நழுவவிட்டுப் புலம்புவார்களா! யாரும் கேட்டால் நகைப்பார்களே! பொறும். கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள். அளவைக் கடந்த அன்பைச் செலுத்திய பதார்த்தங்களிடத்து மனிதர்களுக்கு, ஸதாஞாபகமும் சந்தேகமும் உதித்துக்கொண்டிருப்பது உலக இயற்கை யல்லவா? மதிமானே! என்ன அஞ்ஞானம்! எப்போதும் இந்த நினைவுதானு! நம்முடைய வீட்டில் நமது தாய் வயிற்றில் நம்மோடு கூடவே பிறந்தவர்களானலும், பெண்கள் வேறு ஒருவர் வீட்டிலிருந்து வாழ வேண்டியவர்கள்தானே! அவளுக்குப் புருஷன் வீட்டில் தான் என்னகுறைவு, அல்லது பிறந்து வளர்ந்த உங்கள் வீட்டில் தான் குறைவென்ன! விவாக காலத்திலும் மனம்போனபடி யெல்லாம் வேண்டிய சீரும் செல்வமும் சிறப்பாகச் செய்து கொடுத்தனுப்பினீர். பின்னும் நல்ல நாள் நட்சத்திரம் திதி பருவங்கள் தவறாது, நோம்பென்றும் விருத்தமென்றும் பண்டிகைகளென்றும், பிள்ளைப்பிறப்பிற்கென்றும், மக்களுக்கென்றும் விலையுயர்ந்த ஆடைகள் ஆபரணங்கள் இரத்தினங்கள் பண்டங்கள் பாத்திரங்கள் வாகனுதிகள் இரதங்கள் பசுக்கள் முதலியன தவறாது அனுப்பிக்கொண்டேயிருக்கிறீர்

கள். காட்டாறுகள் அலைபுரள மோதிக்கொண்டு சீறிக்கொண்டு கடலையே போயடையும். அங்கிருந்து ஒரு துளி ஜலம் எதிர்த்துத்திரும்ப மலைக்கு வராது. அதுபோல ஒரு பொன்மணி ஒரு நாலெழை தங்கை வீட்டிலிருந்து இந்த அண்ணனுக்கு அனுப்பிய நாளை கண்ணிற்காணேன். அதை நான் சொல்லிப் பொல்லாதவள் என்று பெயரை வாங்க வேணுமா! இப்படியிருக்க அவர்கள் நாட்டிற் பஞ்சம் வருவானேன்! இந்த விதம் கொள்ளை போய்க் கொண்டிருந்தால் இந்த நாட்டிலும் வரும் அந்தப் பஞ்சம். உங்களுக்கு எப்போதும் அவள் ஞாபகந்தான். அவள் உங்களைப் பொருளாக மதிக்கவுமில்லை. அடுத்து இங்குவரவுமில்லை. எத்தினை முறை சொல்லியனுப்பினீர்கள்! அறியாதவளா! தெரியாதவளா! வயதாக வில்லையோ? ஆண்மக்கள் ஏழு குழந்தைகளை இதற்குள்ளே பெற்றுச் சீராட்டி மடிமேல் வைத்துக் குலாவத்தெரிய வில்லையோ! உங்களுக்குத்தான் குழந்தை மானவதி. வாயில் தாய் பால் மணக்கிறது. போரும். வெட்கக்கேடு; எழுந்திருங்கள். சொந்த காரியங்களைக் கவனியுங்கள்.

சுசோ. (மனதைத்தேற்றிக்கொண்டு) காந்தாமணி! (புன்சிரிப்புடன்) உலகத்தில் பெண்களைப் பெற்றவர்களுக்கு அப்பெண்களுக்கும், மருமகனுக்கும், நன்மைகள் செய்கிறதற்கு ஒரு வயது காலம் சமயம் யென்ற முறை யளவு உண்டா! அந்தவிதம் எவ்வளவுதான் சுவர்ணவருஷமாகப் பொழிந்தாலும், அவர்களுக்கு பூரணமான திருப்தி யேற்படுமோ! அதுவுமிராது. அரசர்கள், அக்னி, பிராமணன், ஜாமாதா, தாசி

கள் ஆகிய இவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் தாங்கள் சம்பாதித்தாலும், திருப்தியேற்படமாட்டாது. நீ யுன் தாய்தந்தைக்கு அதிக சிரமம் கொடுக்கிறதில்லை. உனக்கு ஆசையுமதிகமில்லை.

குடி. துரையே! சொப்பனத்திற் கண்டதெல்லாம் பலிக்கிறதா. மணிகளும் இரத்னங்களும் முத்துக்களும் குவியல் குவியலாக பக்கத்திலிருக்கப்படுக்கையில் காண்கிறோம். ஏதேனும் பிரயோசனமுண்டா! உங்கள் மனதில் வைத்திருக்கிற பிரமைதான் காரணம். கவலையை மறந்துவிடுங்கள். நான் என்னருமைக் கண்மணி மானவதியைப்பற்றிக் குறை சொல்லுவேனு! வேடிக்கையாகப்பேசி யுங்கள் மனநிலையைப் பார்த்தேன். உலகத்தாரைப்போல அவளுக்கு நாமென்ன அதிகமாகச் செய்திருக்கிறோம்! அவள் குணத்திற்குக் கோடி கோடியாகக் கொடுக்க வேணுமே! தாயிலுமதிகமாக யென்னைப் பாவித்து நடந்துவருகிறுளே! அவளைப்போல நாத்தனர் எத்தனைபேர்களிருந்தாலும் மனஞ்சலிக்குமா!

சுசோ. நல்லது குடிகள் வேட்டைக்கு என்னைவரும்படி அபேக்ஷிக்கிறார்கள். என் மனக்கவலை மாறும்படி நானும் போய்ச் சீக்கிரம் திரும்பிவருகிறேன்.

குடி. அப்படியே சீக்கிரம் திரும்பி வரவேணும். (வந்தனஞ்செய்கிறுள்).

அரசன் செல்வது.

குடி. (பெருமூச்சுவிட்டு உதட்டில் கை வைத்து) என்ன புதுமை! என்ன புதுமை! யார்தான் அக்காள் தங்கையுடன் பிறக்கவில்லை! இரவும் பகலும் இந்த நினைவுதானு! எத்தினைகாலத்திற்குத்தான் வாயை

மூடிக்கொண்டு பொறுமையாக இருக்கிறது நினைக்கும்போதெல்லாம் வயிற்றைப் பொருமுகிறதே! (வயிற்றி லடித்து) அரமனையைத் துடைத்து ஒவ்வொருபண்டமாக அனுப்புகிறதே வேலை. தடுத்துப் பேசினல் கோபாவேசம் வந்துவிடுகிறது. கண் தெரிகிறதில்லை. வாயில் வந்ததைச் சொல்லிக் கூத்தாடுகிறது. இனிவரட்டும். நான் தக்க யேற்பாடுசெய்கிறேன். மறுபடி இந்த விட்டையே நினைக்கக் கூடாது. தன்னைப்போக்கி தர்மம், பாபமாவது புண்ணியமாவது.

அடாணு இராகம்—ஆதிதாளம்.

அவள்வரட்டுமிங்கே—அப்புரமெந்தன்கைப்யாலே
ஆனதைப்பார்த்துக்கொள்கிறேன்— (அவ)

அடுத்துவந்துகொள்ளை—யடித்ததுபோதாதோ
கொடுத்திழந்தவர்குடி—படுத்துப்போகாதோபாவி (அவ)

ஆனைகுதிரையாடையணி—அழகானமுத்துமணி
அளவில்லா வைர மணிகள்—
தானேவாங்கித்தரித்துக்கொண்டு—தங்காமலே யோடிக்கொண்டு
தக்கபடி வாழ்கிருளே—
பூனைபோற்பதுங்கிவந்து—ஆனதெல்லாம்பரித்துக்கொண்டு
புன்னுடலைவிட்டெங்கும் புகழுயிர்வாங்குமெமன்போல்— (அவ)

களம் முற்றிற்று.

———

## களம். 2.

இடம்.—வனமார்க்கம்.

காலம்.—பகல்.

பாத்திரங்கள்.—வேடன்பிரவேசம்.

மானவதிமக்களுடன் வரவு.

நோட் மெட்டு.

வே. போகுததோ போகுததோ பொன்னிறமானமானும்
சாகுதுபார்—சாகுதுபார்—சடுதிவிற்கணைபட்டு— (போ)
மனைவிமக்கள் தூண்டுறார்—மான்றசையை வேண்டுறார்
நினைத்தமிருகமோடுது—சுனைத்தடத்தைநாடுது— (போ)
அம்பொன்று நானேவியே—அழிப்பேனதினுவியை
கும்பிடப்போனதெய்வந்தான்—குருக்கேவந்தெதிர்த்தாற்போல் (போ)
எமனுக்குத்தப்பினுலும்—என்னையேமாற்றப்போமோ
நமன்விட்டத்தூதுபோல—நல்ல அம்பையேவுரேன்— (போ)

(அம்பை விட்டு) பட்டுது. வியுந்தது. அடேயப்பா! (தூரத்திலுற்றுப்பார்த்து)அடா யார்மக்களரா? இது கீச்சு மூச்சு இன்னுக்கிட்டு ஒருவயசாத்தான் ஒருவரிசையாகத்தான் கூவிக்கிட்டு கூத்தாடிக்கிட்டு வருதுங்களே! (மானவதியைக்கண்டு) அடே யாத்தா! கண்ணைத்தான் பரிக்கிறதே! பளிச்சு பளிச்சு இன்று ஜாச்சோதிகணக்கத்தான், இருக்கிறுவளே மவராசிதான். சந்தேகமில்லை. (ஆடிக்கொண்டு)

அன்னமே—எந்தவூரடி, சொன்னமே என்னபேரடி—
ஆண்துணையில்லாமலேநீ—ஆரணியந்தனில்வந்தாயே— (அன்)
ஆளைக்கண்டு அஞ்சாதேநீ—ஆன கணவன்நான்
நாளைத்தெரியுமெந்தன்பேச்சு—நான்சொல்லுவதெல்லாம்—
பட்டு ஆடைப்பாவாடைதாவணி—வாங்கித்தாரேன் நான்
துட்டுகாசுத்தோட்டம்துறவு—விட்டுத்தாசேன் நான்— (அன்)

பட்டக்காரைப்பாடகந்தண்டைப்-பூட்டிப்பார்த்திடுவேன் [வேன்
திட்டமாயுன்னைத் தொட்டுக்கட்டித்தாலி யிட்டமாய்சசேர்த்திடு
மச்சுவீடுகெட்டிவைத்து—உச்சிதமாமயிலே
கச்சயர்ந்த கனத்தனந்தொட்டுக் கலந்திடுவேன்குயிலே—
கிட்டவா—வா—வா—வந்துமுத்தந்தந்துச்சொந்தமாய்க்கூடுவாய்
(அன்)

ஏகுட்டி! ஏபிள்ளாய்! எங்கே பாக்கரே! என்னயோ சனே? உன்னைமொய்க்குதே! இதுகள்யார்? அம்மா அம்மா இன்னுகூவுதே! எந்தவூர்? எங்கே போரே? அடா எளவே! சமயந்தெரியலேயே! சங்கடம். கெட்ட பயல்மக்களா! இந்தா நொக்கிடுவேன். அடிச்சுப் பத்தி புதரிலே இளுத்து எறிந்திடுவேன். வாயை மூடு. நிமிந்து பார் பெண்பிள்ளே. சிங்கக்குட்டி கணக் கத்தான்நிக்கிறேன். என்னமலேக்கிருய்? வீளவிக் குவா. போவம். என்விட்டுக் கயுதைகளே, உனக்கு ஊளியஞ் செய்ய வைக்கிறேன். பெரியகருப்பனறிய சத்தியம். நம்பு. ஆண் பிள்ளேத்துணேக்கு இனி நான் தான்.

மான. ஹா! தெய்வமே! என்னகஷ்டம்! எங்கே கொண்டு சேர்த்தாய்! அற்பப் புத்தியாலே துணிந்துவந்துவிட் டேனே! புருஷத் துணே யாரு மில்லேயே! அடர்ந்த சோலே! மனிதர் அரவமே கேட்கவில்லேயே! வழியை மறைக்குருனே!

ஆனந்தபைரவி—ஆதிதாளம்—ஸாகிமேட்டு.

வழிமறைத்தொருவன் நிற்குருனே—
விழிசிவக்க உருட்டிப்பார்க்கிருனே— (வழி)

யாருமில்லாக் கானகவழியாச்சே—
தாறுமாருகப் பேசவிடமாச்சே— (வழி)

இனம்பிரிந்தமான் போலவாடுரேனே—
மனம்மீறிவேங்கைபோல் பாயுவானே— (வழி)
மானம்போகும் காலமிதுவே தேவி—குல
மானம்காப்பாற்றுவா யென்னுவி— (வழி)

வே. என்னபிள்ளாய்! பதுங்குறாய்! ஒதுங்குறாய்! கண்ணை பிசைந்துகுனு நிக்கிறே! வாய் முத்தம் சிந்துமா! இன்னமேதப்பவா! நெத்தியிலே கண் படைத்தவன் வந்தால்தான் பயமா எனக்கு! சும்மா ரோசிக்காதே.

ஸிந்துபைரவி இராகம்—ஆதிதாளம் தர்க்கம்.

ஏதடி மானேநீமெத்த—வேதனைக்குள்ளாக்குகிறாய்— (ஏத)
சோதனைசெய்யாதேபோடி—பேதகமெண்ணுதேகூடி
வாதனைசெய்மதனேடி—வாடத்தருவாயின்பம்நாடி (ஏத)

மா தாருமாறாய் பேசாதேடா
வே பாரென்முகம் ஏசாதடி
மா கற்பு உன்னையெரிக்குமடா
வே கலந்தாலாவி தரிக்குமடி
மா பாழும் நரகிற்படுவாயே
வே சூழும்பழியாற்கெடுவாயே
மா பேய்க்காமந்தலைக்கேறிநீ—நாய்குணம்படைத்தென்னை
வாய்க்குவாராததுகூறி—வாடிபோடியென்குறாயே
வே வந்தணைத்தாற்—றகாதோடி
மா வாழ்வழிந்து—போகாதோடா
வே வேண்டியதெல்லாம்—பெறுவாய்
மா தூண்டிற்பட்ட மீனுவாய்
வே தோகையேவழி சொல்லடி
மா தொடாதே யெட்டிநில்லடா. சுற்றிசுற்றி வந்துயென்முன் சொல்லாமொழிசொல்லுகிறாய்

வே. அடியென்சாமி! குலதெய்வமே! மனசுகல்லோ! இனி யெங்கே போவே! (மீசையிற் கைபோட்டு) ஒருபயல் வந்திடுவானு! கோபம் வருது. கசக்கிப் பிளிந்திடு வேன். ஆனல் அடி பாவி! உன் முகம்பாத்தால் ஒன்றுந் தோணலையே! என்னமோ செய்யுதடி. வா குட்டி!

தர்க்கம்—கண்ணிகள்

தானன தானனனே தானன தானனனே.

மதியையமயக்குதடி—என்மானம்பரிக்குதடி
கதியெனக்கு உனையன்றி—கட்டழகிவேறுமில்லை—
குலுக்குத்தளுக்கைக்கண்டு—கும்பிட்டேன்கோடிதரம்
பலுக்குமொழியாலோபாகோ—பழுத்தகனியோவதரம் (மதி)
வெறுத்துஎன்னைப்பேசாதடி—வேற்றுமுகம்பாரேனடி
பொருத்தமுனக்கானவன்நான்—வரித்தவனைச்சேரேனடி (மதி)
வாய்முத்தஞ்சிந்திடுமோ—வண்ணமேனிகுன்றிடுமோ
காயும்மதிக்காற்றுமென்னை—நாய்க்கோலமாக்குதடி (மதி)
சாந்தமோடியுந்தன்பார்வைக்—கயிறுபோட்டிழுக்குதடி
காந்தகுணமாமயிலே—சபல ஆசைபழுக்குதடி— (மதி)
பழியுன்னைச்சேருமடி—பாபம்துடருமடி
வழிவேறயில்லையடி—வாக்குறுதிசொல்லிப்போடி— (மதி)

பொருகுட்டி. எங்கேபோக பாக்கரே! என் உயிரோ டுன்னை விடுவேனு!

மா. (கோபமாகச்சீறி) அடபாவி! நானொரு குடிப் பெண். ஒரு புருஷனை யடைந்து இந்தக் குழந்தைகளைப் பெற்று காலத்தைப் போக்கினவள். நாவுகூசாமல் உற்றுப்பார்த்து சிரித்து வாயில் வந்தபடி யெல்லாம் என்னைப் பேசுகிருயே! இப்படியும் ஆண் பிள்ளைக் கொரு ஆசையா! மனித அறிவை யிழந்து மிருகங்கள்

போலத் தொடருகிருயே! முன்பொரு காலத்தில் உன்குலத்திற் பிறந்தவனெருவன், கற்புக்கரசி தமயந்தியென்ற மாதைக் கண்டிந்தவிதம் கொடுமை செய்ய, அவன் காயம் அனலிலிட்ட மெழுகுபோற் கரைந்துருகி மாண்டானென்ற கதை நீகேட்டதில்லையோ? நான் ஒருத்தி அநாதை. ஆண்துணை யற்றவள். இவளையெது வேணுமென்ருலும் பேசலாம் செய்யலாமென்று மலைக்காதே. மனப்பால் குடிக்காதே. இது கானலோட்டம். தண்ணீரன்று. உன் தாகத்தைத் தணிக்காது. உன்னுவியைப்பருகும் கால னென்று நினை. வந்தவழி நோக்கிக்குடிசை போய்ச் சேருவாய். வழியை மறைக்காதே. இந்தக்குழந்தைகள் கதறுகின்ருரே. மனமிரங்காதோ. பாவி!

சேஞ்சுருட்டி இராகம்—ஆதி தாளம் தர்க்கமிநவருக்தம்.

(வனவேடா மெட்)

மா—மூடா வேடா போடா— (மூ)
முன்பின்னறிந்தவன்போல—கன்மனங்கொண்டென்முன்சால
வன்மனப்புலியைப்போல—என்மீதிற்பாய்ந்துபற்ருதே- (மூ)

வே—கோப மாகுமோடி— (கோ)
பஞ்சபாணன்வெஞ்சரங்கள் நெஞ்சிற்பட்டு அஞ்சுரேனே
தஞ்சமென்றுகெஞ்சுரேனே—வஞ்சியேநீகொஞ்சாமலே- (கோ)

மா—மதிகேடா—நீபோடா— (மதி)
மாயக்காமன்வலைபட்டு—மானுபிமானமும்விட்டு
தாயென்றநினைவுங் கெட்டுத்—தாவித்தழுவலாகுமோடா- (மதி)

வே—காவிற் கூவுங்குயிலே— (காவி)
கணமுமாவிநில்லாதடி—காமன்வாதைபொல்லாதடி
கண்டுப்புகல்சொல்லாதடி—மணமுப்மலர்போல்வாழ்வோம்-(கா)

பழிபோடுவேன் உன் பாதத்திலே. சத்தியம் நம்பு. குட்டீ!

தாஹனே—தான தனம்—தாஹனே—தான தனம்
தாஹனே—தான தனம்—தாஹனே—தான தனம் (தாஹ)

போகமனம்வருமோடி—போக்குசொன்னாற்றீருமோடி
வோகமணைமீறுதடி—யேகபோகமாய்ச்சேருவோம்—
பொன்னம்மாள் என்னவோ—என் நினைவுமாறுதடி— (தாஹ)

சித்தமிரங்காதோமானே—சித்தஜன் கணைக்குள்ளானேன்
பித்தங்கிருக்குதேதேனே—மெத்தமோடிசெய்யலாமோ—
ஆறமோமோகந்தீருமோ—என்னுவிபதைக்குதடி (தாஹ)

அடி பாவி! எந்தப் பயல் வந்து என்னை வென்றாலும் கொன்றாலும் சிருக்கி உன்னை விடமாட்டேன். உன்கையாலானதைப் பார். என்மனம்போல நடந்தால்சரி. இல்லை ஒரு அம்பாலே புளுதியிலே சாச்சிடுவேன் தெரியுமா? இந்தப் பயிலெல்லாம் நடவாது. யார் என்று பாத்துக்கிட்டே? அடி மோசக்காரி! என்கண்ணிலே பட்டுப்பிழைக்கவா?

மான—மூடா! மனிதறிவில்லாதவனே! எட்டிநில். தொடாதே. விணே யழிந்துபோவாய்.

### விருத்தம் மோகனம் இராகம்

முழுமதி முகத்தார்மோகம் முள்ளியின் மலர்த்தேனென்று
வழுத்தியமூத்தோர் சொல்லைகொழுத்து நீ மறந்தாய்மூடா
பழுதில்லா கற்பிஹணை பலாத்காரஞ் செய்வாயானல்
அழுதிடுங்கண் நீருன்னை யனலாகி யெரித்திடாதோ. (முழு)

(மானவதியோட வேடன் தொடருவது. மருண்டுபோர்த்துப் பதைத்துபாடுவது—)

### ஸிந்துபைரவி இராகம்—ஆதிதாளம்

### கண்ணிகள்.

பத்தினி யெந்தன்சொல்லை—சுத்தமாய்க் கேழ்ப்பதில்லை
நத்தித்துடர்கிருய் தொல்லை—நாயே காட்டாதே பல்லை (பத்)

எத்தினை போதித்தாலுமுன்—எத்துமொழி வெற்றியாமோ
பற்றியெரிந்து போகாயோ—பகருஞ்சாபம் வீணைபோமோ(பத்)

(அந்தக்ஷணமே வேடன் தீப்பற்றி
யெறிந்துபோவது.)

களம் முற்றிற்று.

---

## களம் 3.

இடம்.—மதுரைப்பட்டணம், வீதிமார்க்கம்.

பாத்திரங்கள்.—மானவதி மக்களுடன் பிரவேசம்.

எதுகுல காம்போதி இராகம் ஆதிதாளம்

கண்ணிகள்.

மா. கண்மணி களானமக்கள் கனிவாய்துரந்து என்முன்
கசிந்துப் பசியாலழக்கண்டு மனஞ்சகிப்பேனோ—
யானை குதிரையிரதங்கள் அளவில்லா யணிமணிகள்
யாரும் மெச்ச வாங்கிப்போன—தெருவிலிக்கோலமானேன்
தந்தைகண்டால் சகிப்பாரோ—தமயன்பார்த்துப் பொருப்பானோ
தாயிருந்தாலுயிர் தரிக்காள்—தன்னினத்தார் மதிப்பாரோ
அன்னமென்று வேண்டிவந்த—யாரைநோகப் பேசினேனோ
அருந்தவத்தாரையேசி—யர்ப்பமாய் கைவீசினேனோ
பாதையில்வரும் ஜனங்கள்—பார்க்கமனம் நாணுதைய்யோ
பதரிலுங்கேடானவென்—னுயிர் விடத்தோணுதைய்யோ-(கண்)

ஹா! ஜகதீசா! காலவேற்றுமை யிப்படியும் செய்விக்குமோ! (பெருமூச்சுவிட்டு) மேருநிகரான என் செல்வமும் நிலமையும் மாறிப் பஞ்சைகள் போலப் பசியால் வருந்தியழும் பாலர்கள் மொழிகேட்டு விரித்த கூந்தலும், அழுக்கேறிய உடலும் உடையும், ஓய்ந்துபோன நடையுங் கொண்டு, நான் வரும் கோலத்தைக் கண்டு, ஜனங்கள் கூடிக் கூடிப்பார்

கிறார்கள்! மனங்கலங்கித் திகைக்கிறார்கள்! என்னைக் கேழ்க்கத் தயங்கி நிற்கிறார்கள்! என்னுடற் பதரு கிறது! தாயே! மீனாக்ஷி! இன்றுபொழுது எனக்கு நல்லதாகச் செல்லவேணும். அதோ! என் அண்ணன் மாளிகை தெரிகிறது. என் காலஞ் சென்ற தாய்தந்தையின் நினைவு வருகிறது. பலவெண்ணங்கள் உதிக்கின்றன. மனதைத் திடஞ்செய்துகொண்டு போவோம்.

(மாளிகைவீன் திறப்பது. தாதியுடன்குடிலாப்பாள் மேல்மாளிகையில் செல்வது)

குடி. தாவி! பகற்காலத்திலுள்ள சூரிய தாபத்தின் சிரமத்தை இப்போது வரும் மாலைக் காற்றானது மெல்ல மெல்ல மாற்றுகிறது. என்ன சுகம்! ஆகாயத்தைப் பார். நம்மால் வளர்க்கப்படும் கிள்ளைகள், பலவர்ணமான புறாக்கள், சிட்டுக்குருவிகள், நிர்மலமான காற்று வீசும், ஆகாயவீதியில் நிர்மலமாய் இஷ்டப்படிசம்மதித்து பாடிக்கொண்டு பறக்கின்றன. என்ன உத்தமமான ஜன்மம்! ஒரு கவலை யுண்டா! மனிதப் பிறவிமேலென்று சொல்வது முற்றிலும் அபவாதமே! நமக்கு உள்ள கவலையும் பொறுமையும், ஆசையும் அளவில்லை. அடீ! இந்தப்பலகணிவழியே இராஜவீதியைப் பார்க்க எவ்வளவு விநோதத்தை யுண்டு பண்ணுகிறது பார்! இங்கே யார் இங்கே வா!

பியாக் இராகம் ஏகதாளம் நோட் மெட்.

ஓகோ! ஒருவள் வருகிறாள்—ஒண்டியாகத்தெரிகிறாள்
ஆகா! அதிகமக்கள்சூழ—அலுத்துசலித்து களைத்துநடந்து- (ஓ)
பழகினவள்போலக்காணுதே—பக்கம்வரவாத்தோணுதே
அழகும் ஆடையும் அணியும்குறைந்து—மெலிந்துதளர்ந்து சோர்
[ந்து நடந்து— (ஓ)

அடிதாஸி! அதோ பார்த்தாயா? பழயவஸ்திரம் பூண்டு பலமக்கள் சூழ ஒரு ஸ்திரீ வருகிறுள் தெரிகிறதா! கவனித்துப்பார். இவள் யாரடி? பார்த்த முகமாகத் தோணுதே! நீ பார்த்துச்சொல்.

தாஸி. அம்மணீ! ஆம், ஆம்! எனக்கு மப்படித்தான் தோன்றுகிறது. நல்லா நமக்குப் பழக்க முள்ளவர்கள் தான். பார்த்த சாடையாகத் தானிருக்குது.

தடி—(பரபரப்புடனும் கோபத்துடனும்)

சொல்லாமொழி சொன்னாடி மெட்.

கனவிற்கண்டதும்பலித்ததே—கணவன்சொல்லும்வலுத்ததே
காளிநீலிஜாலியவள்தான்—கலங்கியொடுங்கிப்பதுங்கிநடந்து-
பார்க்கமனமில்லையடிப்—பாவிவந்தாற்றெல்லையடி
பாழுங்கொள்ளைக்காரியவள்—பரிந்துபரிந்துநினைந்துநடந்து (ஓ)

தாஸி! ருசிகண்ட பூனை உரியைவந்துசுற்றுமாம். அவளுக்கு வந்துவந்து கொள்ளையடித்துக் கொண்டு போன ஆசை இங்கே யிழுக்கிறது. யார் வேண்டினுள்? யார் அழைத்தாள்? ஏதுக்கு வந்தாள்? என்ன மாயப்பொடி தாவினுளோ அந்த அண்ணனுக்கு. அவருக்கு ஸதா தங்கை தங்கை யென்று நினைவிலும் ஞாபகம். நித்திரையிலும் ஞாபகம். நல்ல வேளை வாச்சுது. வேட்டைக்குப் போயிருக்கிறுர். இவள் அமுல் இப்போதென்ன நடக்கிறது? அடித்துத் துரத்துகிறேன் பஞ்சையை. தலைவலியென்று படுத்துக் கொள்ளுகிறேன். கதவை யடையுங்கள். காவல் யார்? பாராக்காரருக்கு சொல்லிவிடு. ஒருவரும் அவள்கணில் படக்கூடாது. வாருங்கள் கீழே போவோம்.

(படுக்கையிலிருப்பு.)

மா. சுகுண! சுமுகா! வாருங்கள். இது தான் உங்கள் மாமன் அரமனே. இனி நடந்து சிரமப்பட வேண்டாம். உங்கள் மாமி உள்ளே யிருக்கிருள். வேண்டியதெல்லாம் கொடுப்பாள். ஆஹா! இது என்ன! ஒருவரையும் காணேன்! கதவு மூடப்பட்டிருக்கிறது. ஜனங்கள் சப்தமே கேழ்க்க வில்லையே! (நான்கு புறமும் சுற்றிப் பார்த்து கதவை யிடித்து அழைக்கிறது) அம்மா! அம்மா! மதனி! மதனி! இது யென்ன விந்தை! உள்ளே யிருந்து ஒருபதிலும் கேழ்க்கவில்லையே!

ஸிந்துபைரவி— நபக தாளம்.

மங்களமாய் மனேயில்—வாவென்றுயென்னே (மங்)
மகிழ்ந்தழைக்கும்—மதனிகாணேன்—
தங்களினத்தாள் நான் எனக்கண்டு
தாவிவருவார் யாருமில்லே— (மங்)
வாவென்பாரும் போவென்பாரும்—வருந்தியழைத்திடுவோரும்
வக்குமில்லேத்திக்குமில்லே—வகையுமில்லேயேதுமாயம்— (மங்)
பெற்ருருற்ருர்யாருமில்லாப்—பேதையானேனே தெய்வமே
சற்றுகிலுங்கண்பார்த்தென்னே-சலிக்கும்மனந் தேற்றுவாயே. ()

ஹா! கஷ்டம்! கஷ்டம்! என்னசோதனே மரமேறியிரண்டு கைகளேயும் விட்டவள் கதையாச்சே! கதவுகள் மூடியிருக்கிறதே! எந்த நாளிலுமிப்படி இருந்ததில்லேயே! என் பாபமா இது! ஒரு துணேயுமில்லேயே! ஒரு ஜனமுமுல்லேயே!

சுருட்டி இராகம் ஆதிதாளம்—ஜாவளிமெட்.

வாவாவென கூவியழை.

கயற்கண்ணியே—இந்தக்கதவுகள் திறக்கக்—கருணேசெய்வாயே
வயற்கழனிசோலேகள்—வளமாகச்சூழ்ந்த மதுராபுரிதாயே (கய)

கனவிலும்நினைவிலும் கணவனேதெய்வமென்று
மனதினில்முக்காலத்தும் மாறாமல்மலர்கொண்டு
தினமும் பூசித்ததவமுண்மையானால்தானே—துறக்கும்கவாடம்
—(கய.)

படீரென்று கதவுகள் தானே திறக்க படுக்கையில் குடிலாம்பாள்.

ஆகா ! இப்படி மெய்மறந்து நித்திரை புரிவதினால் தான் நாம் வெளியே நின்று உரக்கக்கூவியழைத்ததற்கு மறுமொழி கிடைக்கவில்லை. இங்கு வேறுபரிஜனமுமில்லை. தனியே உறங்குகிறாள். சரீரநிலை சௌகரியமில்லைபோலத் தோன்றுகிறது. கதவுகள் மூடப்பட்டிருந்ததும் உள்ளே வந்தபிறகு விட்டிற்குத் தலைவி படுத்துறங்குகிறதும் நற்குறிகளன்றே ! நல்லது நாமே கூவியழைப்போம். பாத்தியமில்லையா ! குற்றமென்ன ! மதனி ! மதனி! குடிலா ! அம்மணீ ! பாருங்கள் நான்தான். நித்திரையா ! என்ன ஆச்சரியம் ! தெரியவில்லையா! என்ன! எழுந்திருங்கள்.

(புரண்டு படுத்து கைவிரல்களை நெட்டிவாங்கி பெருமூச்சுவிட்டு முணுமுணுத்து நித்திரைகலைந்து கோபச்குறியுடன் பேசுவது.)

குடி. எப்போது மிந்ததொல்லைதான். யாரடியவள் ? காலமில்லை சமயமில்லை கதவை யிடிக்கிறதும் புடைக்கிறதும். இதுமட்டுமா எப்போதும் துறந்து வைக்க! அய்யோ! அம்மாவலி தலையைபிளக்கிறதே! வெளிச்சத்தைப் பார்க்கக்கூட வில்லையே ! கதவை பாவிகள் அடையுங்களடி. எனக்குப் பேசவேண்டியிருக்கவில்லையே ! ஹா ! ஹா ! ஹா !

மா. மதனி! நான்தான். என்னைப் பாருங்கள். கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள். அன்னியர்கள் வருவார்களா? நிதானித்துக் கொள்ளுங்கள். நிதானித்துப் பாருங்கள்.

பியாக் இராகம்—ஆதிதாளம்—கன்னிகள் தர்க்கம்.

மா—மதனியாளே—மதனியாளே,
மதனியாளே—மதிவதனியாளே—மிருதுவசனியாளே — மிருக [லோசனியாளே (மத)
மானவதி நானே—மணவாளனைவிட்டு— [மகிழ்ந்தேன்
மாமன் மாமியைச்காண—மக்கள் பின்வந்தேன்—இன்றுமிக்க
எல்லாத்துக்க மொழிந்தேன்— (மத)

துடி—யாரடி நீ—எந்தவூரடி நீ
யாரடி நீ—எவ்வூரடி நீ—பதில்கூறடி நீ—போய்ச்சேரடி நீ (யா)
திராத்தலைவலி தேசத்தை வாட்டுதே—தெரியாமற் தீண்டவந்த
அறிவிலி நீயார்—அடித்தோட்டுவேன்! நீயார்—அடுத்த வகை கூர் (யா)

மா—தாயிலும் மேலாகத்—தாங்கி வளர்த்தாயே
தாணியோர் புகழத்தனிமணம் முடித்தாய்
து—தனிக்கொள்ளை யடித்தாய்
மா—தான் மகிழ்ந்துகொடுத்தாய்
துடி—வீணாசை படைத்தாய்
மா—விரும்பிக்கொடுத்தாய்
துடி—கொடுத்தது போதாதா
ம—சோபமேன் வராதாமோ
துடி—எண்ணமுடியாதடி
ம—அண்ணன் மனையீதம்மா
துடி—போ போ செல்லாதடி
ம—போவென்று சொல்வாதே நீ (மதனி)

மா—மதனி! என்ன புதுமையான குணம்படைத்தாய்! என்னைப்பார்த்து இப்படியும் பேச மனம் வந்ததா! பொறுமையாகக் கேள்.

குடி. அடீ! நீ பொறுமையைக் கோருவது பொருளேவேண்டித்தானே! எனக்குள்ள பொறுமையும் தர்மமும் போதும். முன்போல் உன்னெண்ணப்படி யொன்றும் சாதிக்கமுடியாது. உன் மக்களை யழைத்துக் கொண்டு புறப்படு வெளியே. மக்கள் லெக்ஷணமா! என்ன கூச்சல்! என்ன அழுகை! என்ன விசேஷம்! மர்க்கடங்கள்! ஒருபண்டம் பக்ஷணம் பழங்கள்கீழே வைக்கக்கூடவில்லை. இதென்ன பகற் கொள்ளையா! போ போ.

ஸிந்துபைரவி இராகம்—ஆதிதாளம் கெஜல் தர்க்கம்.

சொல்லசொல்லவுந்தனுக்கு—வெட்கமில்லேபா நீவி
வல்லமையிங்கேசெல்லாது—போ போ வீண்ஜோலி (சொ)

மா—பொல்லாதகாலத்தா லென்னே—போ போ வென்றுவிரட்டுறுய்
சொல்லாமொழிகளாற்சுட்டு—செல்செல்லென்று மிரட்டுறுய்— (பொ)

குடி—ஜால்லக்காரியுன்னைப்போல—ஜகத்திலிருப்பாரோடி
காலகெதியென்றுசொல்லி—சாலவேடமாறியாடி (சொ)

மா—சூதுவாதுமில்லேயே—மாதுசொல்பொய்யில்லேயே (பொ)

குடி—நடநடவேகமாய்—நாத்திமுறைநேர்த்திப்போடி (சொ)

மா. அம்மா! என்னை நீங்கள் இந்தவிதம் வெறுத்துப் பேசும்படி நான் ஒரு குற்றமும் செய்யவில்லேயே! பாபம் செத்த பாம்பை யடிப்பதுபோல ஏழை யென் மீது இந்தகோபத்தை செலுத்தலாமா! பாழும் வறுமையாகிய கடும்புயல் காற்ருல் மோதப்பட்டு அலேந்து மெலிந்து பறந்துவரும் துரும்பைப்போல உங்களடியில் வந்து விழுந்திருக்கிறேன். மக்களைப் பாருங்கள். மனமிரங்க வேணும்.

முகாரி இராகம்-ஆதிதாளம் கண்ணிகள்—புலம்பல்.

பாழும்பஞ்சம்பன்னிரண்டாண்டாய்—படர்ந்ததினுல்மதனி
வாழும்நாட்டைவிட்டுவந்தோம்—வகையில்லேயேநிதானி. (பாழு)

அருந்தவப்பெரும்மக்கள்—அழுதுயென்னைத்தொடர்ந்துவந்தார்
அருந்தப்பாலமுதமன்னம்—அடைவோமென்றுளம்மகிழ்ந்தார் ()
இல்லை இல்லையென்ற சொல்லை—யென்று முன்பாற் கண்டதி
[ல்லை
பல்லைக்கடித்துப்பார்க்க—பாபமேதுசெய்தேன்தொல்லை (பாழு)
கொல்லும்பசியாலே வாடும்—குழந்தைகள்முகம்பார்த்து
சொல்லும்பாற்சோறளிக்க—சோர்கின்றார் உடல்வேர்த்து ()
ஏழுபிள்ளைக்காரிநானும்—ஏழையாகியுன்பால்வந்தேன்
கூழுக்கும்வகை யிலையென்று—கூறக்கேட்டு மனம் நொந்தேன்
(பாழு)

குடி. என்னடீ! இந்தப்பஞ்சக்கோலம் பூண்டுவந்து பழி போடுகிறாய்! ஏழுமக்களைப் பெற்றவன் கூழுக்கும் வகையில்லை யென்று ஓட்டினானோ! பிறந்த விட்டிற்கும் புகுந்த விட்டிற்கும் நல்லபேரும் புகழும் தேடி வைக்கிறாய்! நல்லகொடுமை! நல்லஸாகஸம்! மலை போன்ற செல்வத்தைத் துடைத்துத் தரைமட்டமாக்கி வைத்தவள் இந்த மனைக்குள் நிற்காதே. பயமாக இருக்கிறது. போ அப்புறம். இந்தப் பேய் வேண்டாமென்று கருதியே கொண்டவன் இந்தத் திசை யோட்டினான் போலும். என்ன சுவாதீனம்! இங்கே யார் தேடிவைத்திருக்கிறார்! போடி. வேலை யற்றவளே! புறப்படு இந்தக் குட்டிகளுடன்.

செஞ்சுருட்டி இராகம்-ஆதிதாளம்-கெஜல் தர்க்கம்.

குடி—நில்லாதே போ—நில்லாதே போ—நீவந்தவழி
மா—சொல்லாதேவாய்பதறிநீ—சேருமே பழி
குடி—மல்லுக்கட்டி—மானம்போக்க—மறுத்துப்பேசுராய்
மா—கல்லுங்கரையும் அம்மாமெத்தக்—கடுந்து ஏசுராய்
குடி—துள்ளித்துடித்துப் பேசினாலும்—எள்ளளவும் தாரேன்
மா—அள்ளிக்கஞ்சி யூற்றினாலும்—அமுதமெனக்கொள்வேன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, 2 - SEP 1913 MADRAS.

துடி—பாவிநிற்காதே—
மா—பாபம் ஏற்காதே—
துடி—உன்னெண்ணஞ்செல்லாது—
மா—என்னண்ணன் வீடிது—
துடி—தள்ளுவேன் வெளியே— (நில்லாதே)

ஸிந்து பைரவி-ஆதிதாளம்-கன்னிகைள்-கெஜல்.

மா—பாலரைக் கண்டு பழிக்காதே—படர்ந்த கண்கொண்டு விழிக்கா [தே
பதறியே வார்த்தைகள் கொழிக்காதே—பரவிய கீர்த்தியை யழிக் [காதே (பால)
பாபம்பாபம் தருமோடி—பார்முழுதும் நகுமேடி
கோபம்தாபம் கூடுமோடி—குலமகட்கு ஆகுமோடி (பால)
மெலிந்தவரைக்கண்டு நகைக்காதே—வலியவந்தாளென்று பகை [க்காதே
சலித்திடும் வாழ்விது மலைக்காதே—சாதிமானத்தை குலைக் [காதே (பால)
மேட்டிமையெல்லாந் தெரிவேனடி—கோடிகளெல்லாம் அறி [வேனடி
வாட்டிடும் பசியாற்றுஞ் சுதடி—வாயாற்கேழ்க வஞ்சுதடி (பா)
அம்மா! தாயே! மதனி! உயர் குலத்திற் பிறந்து உத்தம மணவாளனை யடைந்த உங்கள் மனமும் இப்படி யாகுமோ! அனலிற் படும் மலர் மாலை போல அருமைக் குழந்தைகள் கொடும்பசியாகிய தீபற்றி வாடி மூர்ச்சையாகிக் கிடக்கின்றனவே! நீயும் மக்களை பெற்றவள் தானே!

செஞ்சுருட்டி இராகம்-ஏகதாளம் சேப்புவதேமிறு ஜாவளி மெட்.

துடி—அழைத்தாருன்னை—வர—வழைத்தாருன்னை
அழுத்தமாய்ப்பேசக்—கொழுத்துவந்தாயோ—தாயே பேயே— (அழை)
காத்தி நீ மெத்தசா—மார்த்தியக்காரி—

134919 ... 600 008.

பாத்தியம் நிலைக்கப்—பரிந்துவந்தாயோ சீ சீ போடி—(அழை)
அண்ணன்வந்தாலும்—உந்தன் அய்யன்வந்தாலும்—உன்
எண்ணம்முடியாது— மோசம் பண்ணமுடியாது — நிற்காதே
[போடி—(அழை)

ஏண்டி பஞ்ச வேஷம் போடுகிறாய் ! யானை படுத்தால் குதிரை மட்டமாகாதா ! இந்த எத்தானவார்த்தைகள் செல்லாது. அரைக்கணம் கூட இங்கே நிற்காதே.

ஸிந்துபைரவி-ஆதிதாளம்.

மா—என்னசெய்வேன் தெய்வமே—இவ்விதிக்கு
எதுசெய்வேன் தெய்வமே— (என்)
மன்னவன் என்கணவன்சொன்ன மொழிகடந்து
சின்னபுத்தியால் வந்தேனே (என்)
சுட்டாலும் மாறுமே—சொன்ன சொல்மாறுமோ
பட்டதுபோதும் மன்னவா (என்)
கல்லேனும் கரையுமே—கருத்துமே யுருகாதோ
செல்லென்று சொல்ல நீதியோ (என்)

அம்மா ! நீங்களே இந்த விதம் முகங்காட்டாமற் பேசினால் இனியெந்த வீட்டில்போய் நிற்பேன் ! யாரையாசிப்பேன் ! அந்தமானக்குறைவு யாரையடையும் ! இந்த எட்டு உயிர்களும் பசியால் மடியப் பார்ப்பது தர்மமாகுமா ! என் அண்ணன் இங்கிருந்தாலிப்படியும் பேசத்துணிவீர்களா ! இந்தக்காலமிப்படியே போகுமா ! ஜன்ம வைரிகளானாலு மிப்படிப் பேசுவார்களா !

முகாரி இராகம்—ஏகதாளம்—கண்ணிகள்.

உன்னருமைக் கணவருடன்—ஒருதாய் வயிற்றில்வந்த
சின்னஞ்சிறு தங்கையென்று—உன்மனத்திற் கொள்ளாதேனோ-
(உன்)

உலகம் பழித்திடாதோ—ஊரார் நகைத்திடாரோ
பல கன்னிகளைவாங்கலாம்—பாவியென்போல் பிறத்தலாமோ—
(உன்)
வாய் மொழிகளாலேசுட்டு—வந்தவழி செல்லென்கிருய்
தாய்வீட்டிற் பெண்களுக்கு—தக்கதொரு பாத்தியமுண்டு—
(உன்)
அண்ணன் தம்பிமார்களுடன்—அண்ணியரே பிறந்திலியோ
மண்ணின்மிசை கேட்டதில்லை—மனைகளிற் பார்த்ததில்லை—
(உன்)

குடி. என்னடீ! என்னசொன்னுய்! என்னசொன்னுய்! இந்த நிலமையில் இவ்வளவு தைரியமா! ஒருவயிற்றிற் பிறந்தால் உச்சிதமோ! போடி வெளியே! பாத்தியம் கொண்டாட வந்தாயா என்ன! ஊர்சிரிக்கக் கத்தாதே! பேய்போல் புறப்பட்டாள். இந்த வாய்க்கு பயந்துதானே அந்தப் புருஷன் பிசாசை ஓட்டிவிட்டான். குழந்தைகள் லெக்ஷணமோ குரங்குக் கூட்டம் போல ஒரு இடத்தில் வாடி யொடுங்கிநிற்கிறதில்லை. இந்தக்குழந்தைகளைப் பெற்றவளுக்கு இவ் வாய்ப் பதட்டம் வேண்டாம். பழிபோடாதே. போடி வெளியே.

(குழந்தைகள்கூடி பசியால் வருந்தியழுவது.)
ஹிந்துஸ்தான் தாதரா ஆதிதாளம்.

குழ—அன்னையே எங்களுக்கு—அடங்காத பசிமூண்டு
உன்னையே முகம்பார்த்து—உயிர்விடுவோம்
அன்ன மன்னமென்று—பன்முறை பணிந்துகேட்டும்
கன்னெஞ்சமாமி பாவி—கருத்துருகாள்
இலவு காத்தகிள்ளை கதியாச்சு—இவள்பொழிகிருள் கனல்
[போல் வீண்பேச்சு
இனிக்கணம்போனுல் நிற்காதெம் மூச்சு
இந்த வீடுவேண்டாமினி—யெந்தவீடாகிலும் போவோம்
(அன்னை)

குடி. அடி பார்த்தாயா! என்ன வாய் மதம்! தொலையுங்கள் எங்கேயாவது. சனி விட்டது. இனிச் சுகமாகயிருப்பேன். அடித்து விரட்டுவேன். மரியாதையாக ஓடுங்கள். இது என்னடி புருஷனில்லாத வீட்டில் பகற்கொள்ளையா ! உங்களைக் கேழ்ப்பவரில்லையா !

இராகம் புன்னாகவராளி-தாளம்-ரூபகம்.

(தாளில்பணிந்து முறையிடுவது.)

மா—கஞ்சியேனும் கொஞ்சம்வாரும் கெஞ்சிக் கேழ்க்குமிந்தக்
குஞ்சுகள் முகம்பாரும்
பஞ்சுபடாப் பாடுபடுகிற வரைக்காரும் நஞ்சானுமே யார்க்கும்
நன்மையுன் குடியேற்கும் (கஞ்சி)
மக்களுக்கு மனமிரங்கா மாதர்களுமிந்த மேதினியிலுண்டோ.
தக்கமறுமொழி தந்திடா தெதுகண்டோ
ஒக்கலாய் வந்தாரை ஓடென்பாரு முண்டோ (கஞ்சி)
அன்ன தானம் சமமான தானம்
ஆகாது ஆகாதென் றருமறைகள் கூறும்.
அறிந்தும் மறந்தால் அதிபாப மூனைச்சேரும்
விருந்தாக வந்தாரை விரும்பிக் கொடுப்பீர்கோரும் (கஞ்சி)

குடி. ஏதடீ ! ஏதடீ ! எழுந்திரு எழுந்திரு! பழி போடாதே! ஏனடி இந்தப்பொய்க்கூத்தாடுகிறாய் ! நீலிக்கு நெற்றியில் கண்ணீர் தெரியுமடி. ஏது இவள் நம்மை விடமாட்டாள். நான் என்ன செய்வேன் ! ஒன்றும் தோணவில்லையே ! உன் அண்ணன் ஊரில் இல்லை. எனக்கு உடம்பு சரியாக இல்லை. ஒரு காரியத்திலும் உற்சாகமேயில்லை. நான் ஒரு வாரமாக ஒன்றையும் கவனிக்கவில்லை. நெல்லா நீரா பண்டமா பக்ஷணமா பழமா காயா கரியா ஒன்றுமில்லை. வந்தவர்களுக்கு வகையாய் அன்னமிடவேணும். இல்லையென்றால் ஒரு குற்றம். வகையாய்ச் சோறுபோடாமற்போனால் பல விதப்பேச்சு ஏச்சுக்கிடமன்றோ ! வீண் வம்புக்கும்

சண்டைக்கும் வந்திருக்கிறாய். இப்போதென் வீட்டிலிருக்கிறதைப்போடுவேன். வேணுமானாலதையுண்டுபோங்கள். யாரடி அங்கே! நல்ல அரிசி யில்லையென்பது எனக்குத்தெரியும். அந்தப் புது அரிசி நொய் உண்டு. அதையும் சின்ன அடுப்பையும் புதுச்சட்டியும் கொண்டு வா. விரகில்லை யென்றால் இந்த வாழை மட்டையைக் கொண்டுவா. என்னைப் போல தெரியாதவளா. எப்படியும் காரியங்களைச் செய்து கொள்ளத்தெரியும். இந்த மானவதி! இதுகளைக்கொண்டு இப்போது அவஸரத்துக்குத் தக்கபடி இந்தக் குழந்தைகளுக்கு கஞ்சியை வைத்துக்கொடு. பிறகு பார்த்து சௌகரியம் போலச் செய்து கொள்ளலாம். ஊ ஊ நடக்கட்டும். நெருப்பும் கொண்டுவந்து கொடு பாபம் குழந்தைகளென் செய்யும்.

செஞ்சுருட்டி இராகம்-ஏகதாளம்.

மா— ஈசா காராயோ—ஜகதீசா பாராயோ (ஈசா)
கூசாமற் கொடுமை பேசி—பாசமறந்து ஏசி
கூகூவென்றும்—போ போவென்றும்—விரட்டுறாளே (ஈசா)
லச்சைநான் விட்டுக்கேட்டும்—பச்சை மட்டைதந்தாளய்யோ
இச்சைபோலக்—கொச்சைமொழி—பகரலாச்சே (ஈசா)

அம்மா! இந்தக்குஞ்சுகள் பசியால் வருந்துகின்றன. இதுப்புதுபானை. குளிர்ந்த நீரும் நொய்யும் கலந்து விட்டீர்கள். பச்சை வாழை மட்டை. இதிலெப்படித்தீப்பற்றி கஞ்சி கலந்து கொதித்துவரும். உங்கள்கையாலாவது தீமூட்டிக்கொடுங்கள். உங்கள் மனசுக்காவது அது நடக்கும்.

குடி. போடிஜாலக்காரீ! இது ஒரு விஷயமா! நான்மனது வைத்தால் இந்தக் கதலிச்சோலையே நீற்றுப்போமே!

எனக்குத் தலைவலிக்கிறது. என்னலானதை கொடுத்துவிட்டேன். குழந்தைகளுக்கு வேண்டியதைத் தயார் செய்து கொடு. வீண்காலம் போக்காதே. வீட்டைக்காலிசெய்.

மா. ஜகதீசா! என்ன பரிசோதனை! தீப்பற்றியபிறகு கிணறுவெட்ட எத்தனித்த கதையாக இருக்கிறதே! நல்லது உன் கிருபையும் எனது கற்பும் சரியாக இருந்தால் நினைத்த கர்மம் எது தான் முடியாது! பூர்வம் அநுசூயை இரும்புக்கடலையை பக்குவஞ் செய்து கொடுக்கவில்லையா! கர்ணிகை யென்ற ஒரு மாது சினந்து காற்சிலம்பை வீசி யெறிய கற்கோட்டைகளுடனும் மாட மாளிகை கோபுரம் சோலைகளுடனும் விளங்கிய மதுராபுரிதீப்பற்றி யெரியவில்லையா! நாளாயினி சூரியனைத் தடுத்து வைக்கவில்லையா! அழியாத சரீரத்தையும் பலத்தையும் தனத்தையும் நகரத்தையும் வரங்களையும் படைத்த திருபுராதிகளை சிறுபுன்னகையால் லீலா மாத்திரமாய் யெரித்த மகாதேவா! இதொரு பெரிதா! அந்தக்கண் இப்போது எங்கே போச்சு!

சேஞ்சுருட்டி இராகம்-சாப்பு தாளம்.

என்னகாலம் இந்தக்காலம்—எந்தனுக்கு வந்தகோலம் (என்)
மன்னன் ஆக்ஞை மீறிவந்தேன்—சின்ன மொழிகேட்டு நொந்
[தேன் (என்)
நெற்றிக்கண்ணுற் பச்சை மட்டைப்பற்றியெறியச் செய்யாதே
[னோ (என்)

(அடுப்பு தீப்பற்றக்கண்டு குடிலை அதிசயிப்பது.)

குடி. பாரடி! பாரடி! பச்சை மட்டை தந்தே னென்று தூற்றினயே! நான் வேணுமென்று கொடுத்தேன்,

அது என் மனம்போல இருந்தது. என் கையாலே தொட்டுக் கொடுக்கிறது விணுமோ!

மா. அம்மா! உங்கள் கையாலேயே குழந்தைகளுக்கு இடுங்கள்.

குடி. என்ன அவஸரம்! என்ன கூச்சல்! பேசாமல் உட்காருங்கள். அடிப்பேன்.

(குழந்தைகள் அவஸரப்பட்டு கூச்சலிட குடிலாம்பாள் கஞ்சிப்பானையை கோபத்திடன் கீழேபோட்டு உடைப்பது—குழந்தைகள் திகைத்து நிற்பது.)

மா. ஹா! என்னகாரியஞ் செய்தாய்! இப்படியு மொரு கோபமா! யார்சகிப்பார்! அடா பாவிமக்களா! உங்கள் பாக்கிய மிப்படியா இருந்தது! கைக்குக் கிட்டினது வாய்க்கு எட்டாமற் போச்சே! யாரை நொந்து கொள்வது!

சேஞ்சுருட்டி இராகம்-ஏகதாளம்-பார்ஸி கேஜல்.

எண்டி பாபியுடைத்தாய்—கூழ்பானையை— (எண்டி)
தாண்டிக்குதிக்காதே—தலைகீழாய் நிற்காதே
தெரிவேண்டி யுந்தன் தாபம்—அறிவேண்டி யுந்தன்கோபம்
[மதியிலாய்— (எண்டி)
பெண்ணாய்ப் பிறந்தாயேப்—பெருமையிற் சிறந்தாயே
கண்கெட்டுப் போவாயடி—கர்வஞ்சிதையுமடி—கருத்திழந்து—
(எண்டி)

குடி. பேஷ்! பேஷ்! எது பூனையும் புலியாச்சு! அழைக்காதுவந்த மானங்கெட்டவளே! கூழுக்குவகையில்லை. ஏழுபிள்ளைகள் இந்த பாக்கியத்துக்கு. பிச்சைக்குவந்து ஆக்கிப்படைப்பாளென்று மகிழ்ந்து வந்தாயோ! போடி வெளியே. பிடித்துத் தள்ளு

வேன் ஓடுங்கள். ஆஸ்திக்கு முறை கொண்டாட வந்தீரோ மூதேவிகளா செல்லுங்கள்.

செஞ்சுருட்டி—இராகம்—நோட்மேட் ஸர்வலகு.

ஓடிப்போங்கள் ஓடிப்போங்கள் உதைத்துதள்ளுவேன் பாருங்
[கள்
வாடிவாடி—யென்றுவுன்னை—வரவழைத்ததாரடி— (ஓடி)
அண்ணன் வீடுயென்றுயெண்ணி—அடுத்தடுத்து வந்தாயோடி
மாமன்வீடுஆசைகொண்டு-மானங் கெட்டுப்போனாயோ நீ-(ஓடி)

(எல்லாரையு மடித்துத்துரத்துவது-கதவை யடைத்துக்கொண்டு உள்ளேபோவது.)

களம் முற்றிற்று.

---

## களம். 4.

இடம்.—பட்டணத்தின் வெளிபாகம்.

பாத்திரங்கள்.—ஜனங்கள் சந்திப்பு.

மானவதி மக்களை யழைத்துக்கொண்டு மனம் வெறுத்துச்செல்வது.

செஞ்சுருட்டி இராகம்—ஆதிதாளம்—ஜாவளி மேட்.

மா. என்னுவி போகாதோ ஈசா நான் அழையாமல் வந்தேனே
கூவியே கொடுஞ்சொற்களைப்பேசி—பாவி விரட்டினாளே (என்)
ஆற்றுவாரில்லை தேற்றுவாரில்லை-உற்ற துணையைக் காணேனே
பற்றியெரியுதே பாவிமக்களா பரதேசியானோமடா (என்)
உத்தமன் வாக்கு சத்தியமாச்சுது பத்தினியங்கு செல்லேனே
சித்தங்கலங்குதே மெத்தமயங்குதே எத்திசைபோய்ப் பிழைப்
[பேன் (என்)

அய்யோ! பேயிலும் கொடியாள் வயிற்றிலேன் பிறந்தீர்கள்! என்ன சுகம் கண்டீர்கள்! மானங்குன்றி என்னுடல் நடுங்குகிறதே! எங்கே போவேன்! என்னசெய்வேன்! கண்முன்னே காணும் பொருள்கள் விளங்க வில்லையே! மார்பை யுடைக்கிறதே! தலையைச் சுற்றுகிறதே! ஒருவரையும் கண்ணெடுத்துப்

பார்க்க மனம் வேண்டலையே! ஓண்டியா யோடவும் ஒளியவும் உயிரிழக்கவும்—தெய்வமே!

(குடிகள் பிரவேசம்.)

குடி. (1) (பதைத்து பரிதபித்து) ஹா! கஷ்டம்! கஷ்டம். இதென்ன காலகதி! உங்களுக்கா இந்த கஷ்டம்வருவது. நீங்கள் குழந்தைகளுடன் போகும்போது பார்த்தோம். எங்களுக்கு முற்றிலும் தெரிந்துகொள்ள ஸாத்தியமில்லாமற்போனது. இப்போதெல்லாருக்கும் தெரிந்தது. உங்களை வரக்கூடாதென்று சொல்ல யாருக்கென்ன பாத்தியம்! உங்கள் தமயன் மகாப்பிரபு. ஸர்வோத்தமன். ஸர்வஜன பந்துவாச்சே! இந்த அபகீர்த்தி அவருக்கல்லவோ சேரும். அம்மா! வீட்டுக்கு வீடு இப்படிதான்! எலியும் பூனையுந்தான். ஸம்ஸாரஸுகம் வந்தவள் இராச்சியமாகத் தானிருக்கிறது. தயவுசெய்து ஒருகாரியஞ் செய்யவேணும். ஏழைகள் வார்த்தையைத் தள்ளக்கூடாது. உங்கள் தமயன் வருகிறவரையில் எங்கள் வீடுகளிலிருக்கலாம். வந்தவுடன் உங்களை அரமனையிற் கொண்டுசேர்த்து விடுகிறோம். யோசிக்க வேண்டாம். உங்கள் வீடுதான் அது. உங்களன்னம் புஜிக்கிறவர்கள்தான் நாங்கள். உங்களை நாங்களிந்த விதம்போக விடலாமா!

குடி. (2) அம்மா! அந்தவிதமே செய்யுங்கள். யோசனை யென்ன! மவராசாவுக்குக் குறைவு இல்லீங்களா! நாளையொரு பேச்சுக்கிடமாமே! வந்துரங்க பின்னலே. என்ன மலேக்கிரிங்க! தம்பி வாங்க போவம்.

மா. அய்யா! நீங்கள் பெரியவர்கள். உங்கள்வார்த்தையை கேழ்க்க வில்லையென்று நினைக்கக்கூடாது. எனக்கு

இந்த சமயம் மனம் ஒருவாறுகக் குழப்பத்தை யடைந்திருக்கிறது. ஒருவரைப்பார்க்க ஒரு இடத்தில் தாமதிக்க மனம் வரவில்லை. என் ஸகோதரன் வந்தால் என்மேல் தயவுசெய்து நீங்களிந்த விஷயத்தையும் நான் போகுங்கோலத்தையும் சொல்லவேணும். நான் திரும்பிவரும்போது உங்கள் மனம் போலவெல்லாம் நடக்கிறேன்.

குடி. (1)பாபம்! நாமென்ன செய்யலாம்! அந்த அம்மாளுக்கு ஆசைவிட்டுப் போச்சு. யாருக்கும் மானமல்லவோ பெரிது! எங்கே போகிறுகளோ! என்ன செய்வாங்களோ! ஒரு மாமன்விட்டிலே இந்த மருமக்களுக்கு இத்தினை கஞ்சித் தண்ணிக்குப் பாத்தியமில்லாமற் போச்சு! அடா, தெயவமே! என்ன காலமப்பா! கலியுவமா இது (போவது.)

களம் முற்றிற்று.

---

## களம். 5.

இடம்.—ஊர் வெளிக்காட்டின் வழி.

பாத்திரங்கள்.—மானவதி மக்களுடன்போவது.

காவடிச்சிந்து—பூமிமெச்சிடும் அண்ணுமலை யென்றமெட்.

மா கொழுந்தன் மொழிகேழ்காப் பழுதிஞலேவந்த—பாபமோ
அவர்கோபமோ—எவர்சாபமோ—இனி
யழுதழுதுநின்ருல் ஆவதொன்றுமிலை—சத்தியமே யிதுபத்திய
[மே— (கொ)
ஒரு மகவைப்பெற—ஓங்கிய தவங்கோடி—செய்குவார்
கானிற்றிகுவார்—கருத்திலுருகுவார்—இந்த—
அருமை மக்களேழும்—பெற்றுமவலமாய்ப்
போனேனே—பதரானேனே— (கொ)

பஞ்சத்தாற்பயந்து—பஞ்சைபோல நொந்து—
வந்தேனே—நிலைகுலைந்தேனே—திகைத்தேனே—இந்த—
வஞ்ச மறியாப்பாலர்க் கெஞ்சியழக்கேட்டு
வாழவோ—இன்னம்—தாழவோ— (கொ)

மானம்போனபின்பு மண்ணில்வைத்து அன்பு
ஆவதேன்—வீணிற்சடைவதேன்—விதியை நோவதேன்
மானே யெந்துமீசன்—மகிழும் தாக்ஷாயணிபோல்
மடிவதோ—பின்னடைவதோ— (கொ)

ஹா! தெய்வமே! என்ன அற்பபாக்கியஞ் செய்த ஜன்மம்! புண்ணியவதிகள் வசிக்குமிந்த பூமியினில் இனி வசிக்கக் கூடாது. நல்லோர்கள் கண்ணுற் பார்க்கக்கூடாது. திக்சுடவேணும். கரும்பிலும் இனிப்பாக நம்மோடு பழகி ஆடின இவளது குணங்கள் முற்றிலும் எங்கேயோ மறைந்து வேம்பாக மாறினது நமது தீவினையோ! என்ன கொடிய பாபம்! பாபி யென்னைத்தவிர வேறு யாருக்கு இந்த ஸம்பவம் ஏற்பட்டிருக்கும்! எனது சிற்றறிவிற் கெட்டின வரையில் ஒரு ஜீவனுக்காவது மனம் நோகும்படி நடந்தவளன்றே! மதங்கொண்டு பேசினவளில்லையே! பசிக்கவைத்துப் பார்த்தறியேனே! பெரியோரை ஆராதிக்காமல் அலக்ஷியஞ் செய்தறியேனே! எனக்கேன் இவ்வாறு நிகழலானது! யாருக்கும் குறிப்பறிந்து அன்ன மிடுவேனே! என் அருந்தவப் பேறும்மக்கள் அனைவரும் பசி மிகுதியால் வாய்விட்டுக் கதறி யன்னமென்று பலமுறை கேட்டும் நான் எவ்வளவோ நன்மொழிகளாற் கேட்டும் இப்படியும் கல்மனத்தாளாகி வெறுப்புற்றுத் தீயிலும் தொடிய சொற்களாற் இகழ்ந்து யேசிப் பேசி மக்களையும் அடித்துத் துரத்தி இக்கதியாக்

ளுளே! என்செய்வேன்! எங்கு செல்வேன்! யா ரோடு சொல்லி யாற்றுவேன்! தனது கைவிரல் தன் கண்ணைக்குத்தினது போல என்பிறந்த விட்டிலே யே இப்படி நடந்ததே! ஆம் இப்படி நடந்ததும் விகிதந்தான். நானல்லவோ அறிவீனத்தால் மறந்து உறவு பாராட்டி வந்தேன். பிறந்த விட்டின் சலு கை பெண்களுக்குப் பெற்ற தாயோடு போகு மென் பது நிஜமாச்சுது. அடி அம்மா! என்னைப்பெற்ற வளே! என்னருமைதாயே! ஹா! என் தந்தையே! உங்களைத் தானிழந்தேன்! இந்த விட்டிலுங்களால் முளைத்த அன்பையு மிழந்தேனே! இன்னும் பத்து மக்களைப் பெற்ற பிறகு வந்தாலும் என் மீதிலேற் பட்டபாசங் குறையுமோ! என்னை இந்த நிலைமை யில் பார்த்தும் உயிரோடிருப்பீர்களோ! ஹா! இதுவென்ன! தன்னை மறந்து பிரலாபிக்கிறேன்! நானிப்போது செய்து வந்திருக்கிற பாபத்திற்கு மேலானதும் வேறென் றிருக்கிறதா! பதியல்ல வோ தெய்வம்! அவனிட மேற்படும் அன்பல்லவோ தேவதாபக்தி! அவன்வாக்கல்லவோ வேதம்! அவர டிதொழுது ஸ்நானம் அன்னபானுதி சுகங்களைக் கொடுத்து அவர் மனம்போல நடப்பது அல்ல வோ உத்தம தருமம்! இவ்வளவும் தெரிந்தும் அறி யாத பேதையாகி ஸாகஸ புத்தியால் உத்தமகுண ஸம்பன்னராகிய என் பிராணநாதன் மனம் சோர் ந்த காலத்திலும் என்னைக்கோபிக்காமல் இந்த நிலை மையில் இந்த சமயத்தில் உன் மதனியார் விட் டுக்கு நீ போக எண்ணங்கொண்டது நியாயவிதிக ளுக்கும் வழக்கங்களுக்கும் விரோதம். வேண்டாம்

வேண்டாமென்று (கண்ணீர்விட்டு விம்மி) பலவிதமும் எச்சரித்தார்களே! அதை மதிக்காமலும் ஆலோசிக்காமலும் மனம் மருண்டு கொதித்து அகங்காரம் மேலிட்டு விருது கூறி மக்களுடன் ஒருதவியுமில்லாமற் புறப்பட்டு வந்தேனே! இந்தக் கொடுமையான வித்திற்கல்லவோ அனுவெல்லாம் மலையாகப் பெருகி வேண்டியவர்களுக்கெல்லாம் விஷமாகி உடுக்கக்கந்தையும் குடிக்கக் கஞ்சியும் நிற்க நிழலும் மதிக்க மனிதரு மற்று பிறந்த நாட்டில் பிறந்த வீட்டில் காற்றுல் மோதப்பட்டப் பதர்போலவும் ரஸமில்லாத சக்கையைப் போலவும் மணமற்று வாடிப்போன மாலையைப் போலவும் போ போ வென்று வெளியே தள்ளி விடப் பட்டேன்! ஆதிமுதலே யென்மதனியின் குணமிப்படி யிருக்குமாயின் நான் நினைத்து வலிய விரும்பி வர நியாயமில்லையே! பாகுபோலப்பதமாக விருந்த அவள் மனம் கற்பாறையிலும் கடுமையாக மாறி போனது என் தீவினை விளைவித்த கூத்தல்லவா! நல்லது இந்தப் பாழுமுடல் யாருக்கும் ஒருகாலத்து எந்த இடத்திலும் அழியக்கூடியது. இந்த மானமோ குணமாகவாவது தோஷமாகவாவது ஒரு அழியாத பெயரைப்படைத்து உலகத்தில் ஜனங்கள் முகத்தில் உலவிக்கொண்டிருக்கும். இதற்காகவேபயந்து அநேகர் தாங்கள் மானத்தை வாக்கைக் காப்பாற்ற இந்தப் புன்னுடலைத் தியஜித்துப் பூமியில் புகழ் பெற்று விளங்கிவருகிறுர்கள். ஆகையால் இனி பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் கருதிப்பயனென்ன! நமக்கும் வந்தவழி நாடுவதே மெத்த

நலம். பெரும்புயற் காற்று எழுந்து மோத அநேகம் விழுதுகளோடு கூடிய ஆலமரமானது தாங்குவாரற்று வேரற்றுப் பூமியில் விழுந்தாலெப்படியோ அதுபோல என்னிடம் முளைத்த மக்களுடனே நானும் எங்களுயிரை எந்தவிதத்திலும் பிறரறியாது மாய்த்துக் கொள்ளுவதுதான் முடிவான தீர்மானம் ஆகும். அந்தப்புருஷன் முகத்தையினிபார்ப்பதா! அவர்தான் யென்னை யினிவேண்டுவாரா! மனதாலும் நினைப்பாரா! கொடியள் பாபி! நாயிலும் கடையள்!

சஹானு இராகம்—விருத்தம்.

கூனொடு வெதிரபங் குருடு பேருமையானோர்
ஊனமதடைந்தபுன்மை யாக்கையோடழியுமம்மா
மானமதழிந் துதொல்லை வலியிழந் துலகில்வைகு
மேனையர் வசையின்மாற்ற மெழுமையுமகல்வதுண்டோ.

கூன் குருடு செவிடு ஊமை முதலான சரீரத்தோடு பிறந்த குற்றங்கள் அந்த சரீரமுள்ள வரையில்தான் உலகில் நிற்கும். யாக்கை அழியும்போது அதுவும் மாறும். மான மழிந்து வாழும் வசையானது எழு பிறப்பிற்கு அப்பாலும் மாறாதே.

பியாக் இராகம்-நபகம் தாளம்-கண்ணிகள் பையல்மான் மெட்டு.

ஆகா தாகா திந்த ஜன்மம்—அடியாள்மீது ஏனோவன்மம்
அருந்துணைக்காகாத பாவி—யற்றேமனம் பற்றொழித்தேன்—
(ஆகா)

பண்ணினைசை மக்களாசை—கண்நிறைந்த கணவராசை
அண்ணனாசை பொன்னினாசை—அனைத்தும்விட்டேன் ஆட்
[கொள்வாயே (ஆகா)

கதியளிக்கும் பாலர்தன்னை—வதைசெய்யவும் துணிந்தே
[னய்யோ
பதியிழந்தேன் சதிசெய்ததால்—விதியை முடிக்கவேண்டி வந்
[தேன்—(ஆகா)

(இடையர்கள் ஆடுமாடுகள் மேய்க்கப் பிரவேசம்.)

தந்தானமடி மெட்டு.

டிரியோ—டிரியோ—டிரியோ—டிரியோ—டிரியோ—டிரியோ
[செல்
டிரியோ—டிரியோ—டிரியோ—டிரியோ—டிரியோ—டிரியோ
ஹல்—(டிரி)

ஆதிமாயன் வளர்ந்துவந்த—ஆயர் குலத்தவர்நாம்
ஆடிப்பாடி யமுதம்தந்து—ஆதரித்தவர் நாம் (டிரி)
ஆடுமாடு கன்றைக்கூட்டி—அழகாய் மேய்த்திடுவோம்
காடுமலைகள் கழனிகள்சுற்றிக்—காலங்கழித்திடுவோம் (டிரி)
காலையிலெழுந்து கால் கைகள்கழுவி கண்ணனை துதித்திடுவோம்
மாலைவரையிலும் மாடுகளோட்டி-மந்தையாய் மரித்துடுவோம்—
(டிரி)
நரிபுலிவராமல் நாய்களையேவி—நாங்குபுறத்தில் வைப்போம்
சரிவரப்பார்த்து நாங்கு சாமங்களும்—நாங்கள் படுத்திருப்போம்
(டிரி)
மூப்பன் ஒருவன்சொல்க்—காப்புக்கடங்கியே—முறையாகவே
[நடப்போம்
பார்ப்பான் வேளாளன் பலசாதியர்கள்--பண்ணைகளை யடுப்போம்
(டிரி)
எழுமலையானை யெங்கள்பெருமானை—யெண்ணி நாமமிடுவோம்
கூழு குடிக்குமுன் கும்பிட்டுவிழுந்து—கூடிக்களித்திடுவோம்
(டிரி)
வீட்டுக்காரியன்றி—கோட்டிக்காரிகளைத்--தொட்டுப் பழக்கமாட்
[டோம்
காட்டுத்தெய்வங்களை வீட்டுத்தெய்வங்களை—அவனன்றி வழங்க
[யாட்டோம் (டிரி)

கோ. 1. எலா! சின்னகருப்பா! பெரிய கோனாரு! தெக்காலே போயிருந்தாவளே, அவங்க திரும்பியாச்சா. எப்போ வருவாக சொல்ரா எலே.

கோ. 2. அண்ணே! தெக்காலே போனவங்க, திரும்பியும் வருவாகளா! பெரிய ஆச்சியை இந்தவழிதானே கொண்டுபோனுங்க. இன்னம் தான் திரும்பலேயே.

கோ. 1. அடா கோட்டிக்காரப்பயலே! இருக்கிறவங்களேயும் செத்தவங்களேயும் ஒண்ணுக்கிட்டயே அதென்னடா! எலா! உத்துப் பாரு பாவம். ஒரு பெம்பிளே அஞ்சாறு குஞ்சுகளே யிட்டுக்குனு ஒருமாதரியா சொணங்கிவராளே. காட்டிலே—வழிதெரியாதே தெகைச்சிச்கின்னு நாலுபக்கமும் மிளுச்சுக்குனு நிக்கிரு, போய் கேள்ரா எலே. பாவம் பெண் பிள்ளே இன்னுக்கா பேயும் இரங்கும் என்டா வளே;

(கோனுருக்கும்—மானவதிக்கும் தர்க்கம்.)

தானுநன்னுனே—தானநன்னுனே—தானுநன்னுனே—தனு தனு.

கண்ணிகள்.

கோ—பத்தினியாரம்மா இத்தினேநேரத்தில்
சுத்திவந்துயாரைத் தேடுகிறுய் (பத்)

மா—தேடிவரவில்லேத்—திசையுந்தெரியலே
ஓடியநதிகுளங்கள்—உள்ளதைச்சொல்வீர். (தேடி)

கோ—சொல்லத்தண்ணீரில்லே—நல்லபாலிங்குண்டு
சோர்ந்தநீங்களுண்டு—செல்லுவீரம்மா. (சொ)

மா—சென்றுகால்கைகழுவி—இன்றுநேமமுடித்து
நின்று உன்சொற்படியே—உண்டுபோகிறோம். (செ)

கோ—போகவுமாகுமோ அம்மா தாகந்தீரப் பால்குடித்து
வேகமாயிவ்வழி சென்றால் வெள்ளங் காணலாம். (போ)

மா—கண்டுகைகால்கழுவிக்கொண்டு—காதல்மக்களேயுங்கொண்டு
உண்டுபோலேப்பசியுமாற்றி—ஊர்வழிசெல்வேன். (கண்)

அண்ணே! இந்தப் பாதைவழியே போனல் தண்ணீருள்ள தடம் காணலாமா? உங்கள் சொற்படியே நான் திரும்புங்காலே தங்கிப்போகிறேன். வருத்தப்படவேண்டாம். அதிக தூரம் போகவேணுமோ?

கோ. சரி. உங்கசாதிவளக்கத்தை மாற்றுவானேன். பெரிய இடிந்து விழுந்த துரவு கிணறு நல்ல நாளிலே நாலு கவிலே யடிச்சதுதான். ஆனலிப்போது அதிகத் தண்ணீர் இராது. ஆளம் ரொம்ப. பார்த்து இரங்குங்க. குஞ்சுகளை விட்டுவிடாதீங்க. மோசமாகும். பாவம் ஆண்பிள்ளைத் துணைகூட இல்லையுங்களே, சாக்கிரதை. போய்த்து வாங்க. அண்ணே. ஆடுகள் எட்டிப் போய்த்துதுங்க. வாங்க போவம். நாம் சொல்லிப் பார்த்தோம் கேக்கலே. யாரோ! எந்தமவராசியோ! கோவிந்தன்தான் பாக்கணும்.

(செல்வது)

மான. எட்டியை விதைத்தபலன் இனிக்கவில்லை யென்று ஏங்குவாரோ! நம்முடைய வினையாகிய காற்ருல் சுற்றி விடப்பட்ட கால சக்கிரத்தி லகப்பட்ட கிரக சாரங்களின் பலனன்ருே யிது! யாரை நோவது! யாரைக் குற்றங்கூறுவது! நம்மால் நிகழ்வது யாது! நம்மாலா குவதெல்லாம் நம்மைக் காரணமாக விதித்து ஆட்டி வைப்பவன் வசமன்ருே இருக்கிறது!

எதுகுலகாம்போதி-இராகம்-விருத்தம்.

நன்னலற்றீர்பயப்பதுண்டேம் தீயவுநல்லவாகுஞ்
சென்னலமிழப்பதுண்டே னல்லவுந்தீயவாகு
மின்னவால்வினையினுக்க மெனினிடையேதுவாழ
வன்னவர்தம்மைநோவ வழக்கில்லையந்தோவந்தோ

லலிபுகாநமை பல்மா மேட்டு.

போகத்திரும்ப மனமில்லையே—சாகத்துணிந்ததிந்த எல்லையே (போ)

தேகமிருப்பதுந் தொல்லையே—தேடி வருவார்க்கென் செய்கு வேன் சொல்லையே (போ)

உத்தமன்வாக்கு சத்தியமே—உரைத்தநீதிகள் பத்தியமே

உற்றபொய்யுற வநித்தியமே—ஊழ்வினை போலாகும் பைத்திய [மேன் (போ)

நற்பிறப்பை வேண்டிவந்து—அற்பமதியாள் மதனியால்நொந்து

சொற்ப்பனமென்றுவாழ்வைநினைந்து—கற்பனை போலாகுமென் றுயான் துணிந்தேன் (போ)

(மக்களுடன் செல்வது.)

களம் முற்றிற்று.

——

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
2 - SEP 1913
MADRAS.

# அங்கம். 3.

## களம் 1.

இடம்—நகரவெளி.

பாத்திரங்கள். — சுசோதரன் வேட்டையிலிருந்து திரும்புவது (ஆகாதகுறிப்புகளைக் கண்டு மயங்குவது.)

எதுகுலகாம்போதி இராகம்—திருபுடைதாளம்.

பல்லவி.

சு. காணுங் குறிப்புகளெல்லாம்—கருத்தைமாற்றுதே மாயம்
தோணும்பிரைக் கங்காதரனே (கா)

அநுபல்லவி.

ஊணுறக்கமில்லாமலே—உற்றகடும்வேட்டையாடி
ஊரைநாடிப்போகும்போது—உள்ளம்நைந்துவாடலானேன் (கா)
கண்களிரண்டுஞ் சொருகுதையோ திண்புயங்கள் துவளுதையோ
எண்ணந்தடுமாறு தென்செய்வேன்
கண்ணுதலேகலக்கம் யாதோ கண்டகனவின் றீதோ
மண்ணும்விண்ணுந் தோணலையே மானவதி கதியேதோ (கா)
மன்னன் காசிநகரவாசி மக்களுக்கேதுற்றதோ
இன்னல்யாதோ கொள்ளுதையமே—
சின்னஞ்சிறுவயதிற்சென்ற என்னருமை ஸகோதரியாள்
தன்னலமிழந்து தன்னைத் தாங்குவாரற்றுப்போனளோ (கா)

ஹா ! என்ன காலகதியின் விசித்திரம்! ஒரு நிமிஷத்தில்உற்சாகம் மறு நிமிஷத்தில் மனக் கலக்கம். ஜீவர்கள் தங்களிரண்டு பாதங்களையும் சுகம் துக்கமென்கிற இரண்டு பதார்த்தங்களின் மீது வைத்து நடக்கிறார்கள். ஒன்றமுழுந்தினல் ஒன்று நிமிரும். அதுபோல ஸம்பவங்கள் தானேவந்து போய்க்கொண்டேயிருக்கிறது. நாம் கோரிவந்த மிருக வேட்டையா

னது மனம் போலவே முறையாக நடந்து முடிந்தது. ஆனால் இந்தவித மொருமாதகாலம் தொடர்ந்து வேட்டையாடினாலும் என் கரசரவேகம் குன்றாது. என் திண்டோள்களும் கால்களும் துவளாது. எனது உடலும் மனமுஞ் சோராது. இந்த வில்லும் அம்புத்தூணியும் தோளிற்கொருபாரமாக காண்கிறதே! இதோ கண்முன்னே காணும் இந்த மதுரை செல்ல வெகு தூரத்திலுளதுபோல நினைத்து மனம் மலைக்கிறதே! எப்போதும் நாம் போய்வருகிற மார்க்கந்தானே இது. அந்த மாயக்கனவு கண்டதுமுதல் மனதில் மாறுமலே ஒரு பெருங் கலக்க மிருந்துகொண்டிருக்கிறது. அதன் பலனாக ஏதேனும் ஸம்பவித்திருக்குமோ! ஹா! கஷ்டம் என்னவோ! ஜகதீசா!

(குடிகள் பிரவேசம்.)

குடி. 1. யாரை விட்டதைய்யா கஷ்டம்! மது மாந்தாதி ஹரிச்சந்திரன் நளன் அவர்களே அந்த கஷ்டத்தை யனுபவித்திருக்கிறார்கள். நமது பிரபுவினுடைய அருமை ஸகோதரி மானவதி நேற்றுக் குழந்தை; தக்க சம்மந்தம் ஏற்பட்டது. அப்படி யொருபஞ்சமா! ஐந்தாறு குழந்தைகளுக்குத் தாயாகி இலையுதிர்ந்த கொடிபோல ஒரு ஆபரணமு மில்லாமல் உடுந்த ஆடையுடன் இங்கேபிறந்த விடுதானே யென்று வந்தால் இங்கே அழகாய் வீட்டைக்கட்டி அதிலொரு வேங்கையைக் குடி வைத்திருக்கிறாரே! அந்தப் பிரபு தயாமூர்த்தி பரமசாந்தர். ஸரவலி எப்படிப் பழகிவருகிறாரோ!

குடி. 2 அப்படிச் சொல்லாதீரையா. அந்த நாளிலே யிவள் தானே வேணுமென்று எத்தினையோ விமரிசையாக

கலியாணஞ் செய்து வைத்தாள். வயதாகி விட்டால் தனது காரியந்தானே யாருக்கும். ஆனுலிவ்வளவு கொடுமை இராது. அதோ வருகிருர். இங்கே நடந்ததொன்றும் அவருக்குத் தெரியாதுபோல இருக்கிறது. நாம் சொல்லலாமா!

குடி. 1. அவஸரப்படாதீர். அவர் முகம் ஒரு மாதரியாக இருக்கிறது. ஊரே தெரிந்த விஷயம். யாராவது முன்னேயே சொல்லி யிருப்பார்களோ என்னவோ! ஆனுலந்தப் பெண் அவஸரப்பட்டு ஏதேனும் ஸாகஸமான ஒரு விஷயமான காரியங்களைச் செய்துவிடப்போகிருளே என்று பயமாக இருக்கிறது. நாம் சொல்லிவிடுவோம். விஜயிபவ! விஜயிபவ!

சுசோ. சுவாமி! வந்தனம். ஏன் உங்கள் முகம் வாடியிருக்கிறது? விசேஷங்களுண்டா! பட்டணத்தி லிருந்துதானே வருகிறீர்கள்! எல்லாம் சுபந்தானே! சொல்லுங்கள்.

குடி. 1. உம் (கையைப் பிசைந்துகொண்டு ஆலோசிப்பது பயப்படுவது) ஓய். (மெல்ல) பெரிய இடத்துப்பேச்சு, நாம் வெளியிடலாமா!

குடி. 2. நாம் சொல்லாமற் போனுலும் பாபம். நாமும் ஸம்ஸாரி.

சுசோ. சுவாமி! கண்டதைக் கேட்டதை ஒளியாமற் சொல்லும், பயப்பட வேண்டாம். எது விஷயமானுலும் குற்றமில்லை.

குடி. 1. (பரபரப்புடன் கண்ணீர்விட்டு சொல்வது) மகராஜா! என்ன கலியுகம்! இந்த அநியாயம் எங்கேயும் கண்டிருக்க மாட்டாது! ஊரெல்லாம் தெரிந்து திட்டுகிருர்களே! பெண் குழந்தைகளுக்கு

வயதாகி நாலு குழந்தைகளைப் புருஷன் வீட்டிலி ருந்து பெற்றுவிட்டால் பிறகு தன் தாய் வீட்டி ற்கு வந்து போகக்கூட பாத்திய மில்லையா! அட அநியாயமே! யார் பார்த்துச் சகிப்பார்!

சுசோ. சுவாமி! என்ன! என்ன சொல்கிறீர்கள்! நானடை ந்து வரும் ஸந்தேகத்திற்குப் பொருந்த இடி விழுந் ததுபோல என்ன கூடமாகப் பேசுகிறீர்களே! விள ங்கச் சொல்லுங்கள்.

குடி. 2. மாகராஜா! கல்லும் மண்ணும் கரையுமே! என்ன கஷ்டம் உம்முடைய குழந்தை மானவதிக்கும் அவ ளேழு குழந்தைகளுக்கும் நேர்ந்தது! உங்கள் தர்ம பத்தினி என்ன காரியம் செய்தாள்! ஹா! பாபம்! பாபம்!

சுசோ. ஹா! ஹா! என் கண்மணி மானவதிக்கென்ன ஸம் பவித்தது! அவளை யெங்கே கண்டீர்கள்! அவளு டைய குழந்தையை எங்கே பார்த்தீர்!

குடி. 1. இதுவரையி லொருவிசேஷமும் தங்களுக்குத் தெரி யாதா! என்ன ஆச்சரியம்! இந்த ஊரெல்லாந் தெ ரிந்து மனமுருகிக்கண்ணீர் விடுகிறார்களே! எங்கள் கண்களினாலே பார்த்தோமே! அந்தப்பரிதாப நிலை மையை யார் கண்டு சகிக்கக்கூடும்! தங்கப்பிரதிமை போன்ற அவள் சரீரகாந்தி குன்றி மெலிந்து கரு த்து, இடையில் நல்ல வஸ்திர மில்லாமல் கூந்தல் சடையாகிக்கட்டத் துணியற்ற யேழு ஆண் குழந்தை களையு மழைத்துக் கொண்டு தனியே இந்த வீதிமா ர்க்கம் அரமனைக்குப் போகும்போது இந்தப் பாவி கண்களினாலே எல்லாரும் பார்த்தோம். அப்போது ஒரு விதத்தினாலும் இன்னவ ளென்று எங்களாற்

கண்டறியக் கூடாமற் போனது. பிறகு திரும்புங் காலையில அல்லவோ எங்களுக்கெல்லாம்தெரிந்தது. மனமிடிந்துப் பசியால் நொந்தழும் மக்களையும் கூட்டிக்கொண்டு போனுள் இந்தவழி.

சுசோ. (கொஞ்சம் மலைத்துத் தண்ணீர் ததும்பநின்று) சுவாமி! என்னருமை ஸகோதரிக்கு இப்படிப்பட்ட துர்த்திசை வருவதற்கு நியாயம் என்ன ! என் மருமகன் உத்தம புருஷனுச்சே ! இப்படித் தனியேவிடச் சம்மதிக்கமாட்டானே! நல்லது அரண்மனைக்குப் போய் நடந்த காரியங்களின் உண்மையைத் தெரிந்துக் கொண்டு உடனே புறப்படுவோம். நல்லது சுவாமி ! நீங்கள் முன்னே வேகமாகச் சென்று மானவதிக்கு நான் வந்துவிட்டேன் பதருதே யென்று அறிவியுங்கள்.

குடி. மாகராஜா! இதோ போகிறோம். இதோ போகிறோம்.

(எல்லாரும்செல்வது.)

களம் முற்றிற்று.

---

## களம். 2.

இடம்—அந்தப்புரத்தி லொருபாகம்.

பாத்திரங்கள்—குடிலாம்பாள் தனியேயிருப்பது.

சுலோசனையுடன் வீற்றிருப்பது.

பியாக் நுபகம்-கேஜல்-கோட்டமேர கியாஹுவா.

குடி—ஆராய்ந்து செய்யாக்காரியங்க—ளாவியைப்போக்கும்
சீராடவந்தச் செல்வியாளைச்—செய்தபழிகாக்கும் (ஆரா)
ஆவியனைய அண்ணன்வந்து—ஆவலாய்க்கேழ்ப்பார்
மேவியதங்கையெங்கேயென்று—கூவியேயழைப்பார்
கண்மணியையிழந்தவர்போலக்—கவலைப்படுவாரே
பண்ணியஅவமானங்கேட்டால்—பழியைத்தொடுப்பாரே (ஆரா)

ஹா! நெடுநாளாக எனது மனதில் கொதித்துக் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்றிவிட்டேன். இனி யெதுவேணுமானாலும் வரட்டும்.

சுசோ. (அந்தப்புரத்தை சுற்றிப்பார்த்துக்கொண்டு) பிரிய ஸகி! ஏது நீ தனியே ஒருமாதிரியாக ஆலோசனை யுடன் விற்றிருக்கிறாய்?

குடி. பிரியகாந்தா! உங்களிடத்திற் சொல்லாமல் வேறு யாரிடத்திற்றான் சொல்லப்போகிறேன்! என் கால கதியானது நான் யாருக்கும் வேம்பானேன்! என் வார்த்தைகள் யார் காதிற்கும் நாராசமாய்ப்படுகிறது! அதற்குநான் யாரைநொந்து கொள்ளுவேன்! என் விதி!

(பெருமூச்சு விடுவது.)

சுசோ. ஹா! இது என்னவிந்தை! ஏன் இவ்வளவு மனஸ் தாபத்தை யடைகிறாய்! நானில்லாத காலத்தில் இங் குயார்வந்தது! உன்சொல்லையும் ஏற்றுக்கொள்ளாத வர்களிருக்கிறார்களா! இதென்ன புதுமாதரியாகப் பேசுகிறாய்! என்ன நடந்தது!

குடி. அன்னியர்களாக இருந்தால் வெளியே சொல்லிக் கொள்ளலாம். தன்னினத்தாரே தன்னையவமதித் தால் யாரிடத்தில் சொல்லிக்கொள்வது! அதனால் தான் தன்னைத்தானே நொந்துகொள்ளுகிறேன்.

சுசோ. (மெல்ல) ஓஹோ! இங்கு யென்னவோ நடந்திருக் கிறது! குடிகள் சொன்னது நிஜந்தான். நல்லது பொறுமையாகக் கேட்போம், பிரியே! யார் வந் தது? என்ன நடந்தது, சீக்கிரம் சொல்.

குடி. யார்வந்தது உங்களுக்கு வேண்டியவர்கள் தான். உங் களுக்காக வந்தவர்கள் தான். என்னை யார் லக்ஷியம் செய்கிறார்? என் வார்த்தை யார் மதிக்கிறார்கள்.

சுசோ. நல்லது பிரியே! வருத்தப்படாதே! விபரமாகச் சொல்.

குடி. உங்கள் தங்கைதான் வந்தது. அவளுக்கு நான் என்ன குறைவுசெய்தேன். வைதேனு! திட்டினேனு! சீர்செய்யவில்லையா! அணி கொடுக்கவில்லையா! ஆடை கொடுக்கவில்லையா! உங்களைச் செய்ய வேண்டாமென்று தடுத்தேனு! போதித்தேனு! என்னைக்காட்டிலும் யார்தான் பொறுமைக்காரி! எவர் நல்லவர்கள்!

(கண்ணைப் பிசைந்தழுகிறது.)

சுசோ. ஓகோ! என்னமோ விபரீதம் நடந்திருக்கிறது. நிஜந்தான்.

மோகன இராகம்—ஆதிதாளம்.

(குடிலரம்பாளை ஆவலுடன் கேழ்பது.)

இங்கு வந்ததங்கை யெங்கே—இங்குவந்ததங்கை யெங்கே(இங்).
தங்கும் காசிவிட்டுத்தாழ்ந்த நிலமைகொண்டு
தனையர்கள் துடரப்பின்-தாய்வீட்டின் ஆசைபூண்டு (இங்).
கற்புக்கரசியாள் கண்கலங்கி வந்தாலும்
பொற்புடையாளேநீயும்பொறுமையாய்அழைப்பாயென்று(இங்).
மானமே பெரிதென்று மனத்துறுதிகொண்டவள்
தானுகவே வலியத்தமயன் வீட்டாசைகொண்டு— (இங்)

ஹா! குடிலே! என்ன ஸாதனையாகப் பேசுகிருய்! ஒளிக்கவேண்டாம். இங்குன்னை வேண்டிவந்த மானவதி எங்கே! இந்த நாடெல்லாம் பழிக்கிறதே! நம் குலமானம் போய்விட்டதே! யார்க்கும் நல்லவள் உன் அன்பிற்குரியவளாச்சே! என்னசெய்தாய்! எங்கேயிருக்கிருள்! எங்கேசென்ருள்! என்னருமையான மருமக்கள் எங்கே! எனதங்கம் பதறுகிறதே! உண்மையாக நடந்ததைக் கூறுவாய். பயப்படாதே!

குடி. (பயந்து கண்கலங்கி ஸாகஸஞ் செய்துசொல்வது)
கண்ணிகள் நோண்டிச்சிந்து.

வந்தவளுண்மை தானைய்யா—சொந்தமறந்து
எந்தக்குற்றமும் செய்திலேன் மெய்யாய்—கண்டவுடனே
மனைக்குள்ளே வாருமென்றழைத்தேன்—மக்களுடனே
மகிழ்ந்திருக்க ஆஸனங்கொடுத்தேன்—களைப்புமாறக்
கரர்தபாலும் பழமும் தந்தே—அவர்புசிக்கக்
கண்டுமெனம் பூரித்து மகிழ்ந்தேன் —பின்னுமவர்க்குப்
பன்னீராலே வெந்நீரும் வைத்தேன்—பாலர்களுக்குப்
பட்டுப்பட்டாடைகள் கொடுத்தேன்—பின்னும் ராத்திக்கு
எத்தனை விதமாக பக்தியுடன் நானும்
மெத்த வுபசரித்தும்—அத்தனையு மிகழ்ந்தாள்— (வந்த)
மின்ன வொளியாடை பணிகள்—மிகவுமீந்து
அருசுவை யுண்டிகள் சமைத்தேன்—அழகாகவே
அநேக பலகாரங்கள் படைத்தேன்—அதை யுண்ணமல்
அண்ணன் எங்கே யெங்கே யென்றழுதாள்—ஆதரவாக
வருவார் வருவாரென்று சொன்னேன்—வஞ்சனையாக
வாயில் வந்ததைப்பேசி யெழுந்தாள்—வழிமறைத்து
வேண்டிவேண்டி யுபசரித்தேன்—வேகமாகவே
வெளியே மக்களுடனே சென்ருள்—வேண்டவேண்டவள்
வெறுத்துப் பழித்திகழ்ந்து போனுள்—அய்யய்யோ பாவம்
ஆகாத எந்தன் காலகுணமோ—அறிகிலேனே
அலறிக் கூக்குரலிட்டு, அடித்துப் புடைத்துக் கொண்டு
பலரும் பரிகவிக்க—ப்பதறிப் பாராமற் போனுள்— (வந்த)

நாதா! நான் என்னசொல்வேன்! குழந்தை மான வதி தன்னருமை மக்களெழுவருடன் தனதுநாட்டில் கொஞ்சகாலமாகத் துடர்ந்து வாதனைசெய்த பஞ்சத்தின் கொடுமையால் ஊரைவிட்டு ஒண்டியாக நம்மைப் பார்க்கவேணு மென்றுவந்தாள். அவள்வந்த நிலமை யாருக்குமவளைத் தெரிந்துகொள்ள முடியவில்லே. அதினுல் முதலில்கொஞ்சம் மயங்கிமலேத்

தேன். பிறகு தெளிந்து பரபரப்புடன் அழைத்தேன், உபசரித்தேன். விபரந்தெரிந்து துக்கப்பட்டேன். வேண்டிய பால்பழம் பலகாரங்கள் கொடுத்தேன். விருந்துக்குவேண்டிய எத்தனங்கள் செய்தேன். என் குழந்தை யல்லவா அவள். அவள்விடுதானே இது. நானிந்தப்படி செய்கதற்கு அவள்மட்டிலும் என்னவோ நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டு உற்சாகமாகப்பேசாமலும் கலந்து ஸந்தோஷப்படாமலும் மௌனமாக இருந்து, அண்ணன் எங்கேயென்று பலமுறை கேட்டாள். குழந்தைகளும் கேட்டது. நான் ஸமாதானமாகப் பேசிக்கொண்டிருக்கும் போதே எழுந்து வெளியேபோக உத்தேசித்தாள். தாயை நினைத்தாளோ தந்தையை நினைத்தாளோ! தன் ஊரை நினைத்தாளோ! புருஷனைத்தான் நினைத்தாளோ தெரியவில்லை; வாய்விட்டழுதாள். குழந்தைகளுடன் என்வார்த்தையை மதிக்காமல் போய்விட்டாள். நான் வழியைமறைத்துக் குறுக்கே நின்றேன். கவனிக்காமல் பிடிவாதமாய்ச்சீறிக்கொண்டுபோனாள்.

சுசோ. ஹா! அப்படியா! நலலது ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது! நாம் பதறக்கூடாது. ஒரு பக்ஷமாக மட்டும் தெரிந்துகொண்டது முறையல்ல. என் மானவதி யெங்கே சென்றிருப்பாளோ! மானம் கோபம் பொல்லாது. பொறுமையாக யிருப்பதரிது. இதோ போய் என் சகோதரியைச்சந்தித்து ஸமாதானங் கூறி யழைத்துவருகிறேன். அவளிங்கே வந்தபோதிலும் நயமாகப்பேசி வைத்துக்கொள்.

களம் முற்றிற்று.

(செல்வது)

---

## களம் 3.

இடம்.—காட்டின்வழி பாழுங்கிணறு

பாத்திரம்.—ஸுசோதரன் பிரவேசம்.

மானவதி மக்களுடன் பிரவேசம்—

முகாரி இராகம் ரூபகம். கண்மணியே இன்னம் தூக்கமாமேட்.

மா. பாலர்களை யழைத்துப்போரேன் நான் பாழுங்கிணறுதேடி— (பால)

சாலவேதவங்கள் செய்து—திருடன் நாங்கள்பெற்ற
வாலிபவயதாம் மக்களை—பலிகொடுக்க (பால)

பால்மணம் முகத்தில்வீச—பார்க்கயாரையும் மனம்கூச
பாவிபெற்ற வயிறுங்கொதிக்க—பாரோர் பழிக்க— (பால)

ஹா! தெய்வமே! எங்களுயிரை வாங்கநிற்கும் கிணறு இதுதான். இந்த ஸ்தலம் எங்களுக்கென்றே அமைத்து வைத்ததுதான்போலும். வேறு யார் இங்கு வருவார்கள்! பயங்கரமான இடம். என்னைப் போலிருக்கிறது. யாருக்கும் எக் காரியத்திற்கும் உதவாத ஜலம். இனித்தாமதம் கூடாது. அன்னியர்கள் யாரேனும் வந்துவிட்டால் நமதெண்ணம் முடியாது. அப்பா! என் கண்மணிகளே வாருங்கள். இந்தப்பாவி வயிற்றைத்தேடி நீங்கள் எழுவரும் ஆண்மக்களாகப் பிறந்ததற்குப்பலன் இது தான். நம்மொருவருக்கொருவர் ஏற்பட்டிருந்த ரணுபந்தம் அற்றது இன்றுடன்.

விருத்தம்—செஞ்சுருட்டி—இராகம்.

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன ஆவதில்லை
தொழுதாற் பயனென்ன நினையொருவர் சுடவுரைத்த
பழுதாற்பயனென்ன நன்மையுந்தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படி வருமோ சலியாதிரென்னேழை நெஞ்சே.

யாரை நினைந்து யாரைமுனிந்து யாரை இகழ்ந்து பயனென்ன! அவரவரிட்ட விதைக்குப்பலன் அவரே யனுபவிப்பார்! இனி வருந்தியாவதென்ன!

செஞ்சுருட்டி இராகம்—ஆதிதாளம்.

பாலரே குணசீலரே—பத்தமாதஞ் சுமந்து
பெற்ற கடனைதீர்க்கிறேன் (பா)
காணீரோ காக்ஷிகாணீரோ—கணவன் சொல்லைக்கேளா பாவி
கண்டபலன் யிதுவாமே (பா)
போருமோ—உயிர்போகுமோ
ஏகவிருதங்கொண்ட பூபன்—நோகும்படிச் செய்தவுயிர் (போ)
அண்ணனே நல்லண்ணனே—
எண்ணியும்மை நாடிவந்தேன் புண்ணிய மில்லாமற்போரேன்--
(அண்)
நாதனே—பிராணநாதனே
நான்செய்த பிழைபொறுத்து நற்கதி யளிக்கவேணும் (நாத)

இனி நினைந்துநினைந்து கசிந்தழுவதிற் பயனில்லை புருஷன் வாக்கிற்கு எதிர் மொழிபேசி வாதாடிப் புகழ்படைத்தவர்கள் யார் இருந்தார்கள்! எனக்கும் அந்தக்கதிதான் வரும். சூரியவம்சத்து சக்கிரவர்த்தி தசரதராஜனுடைய தேவி கைகேயி தன் பிராண நாதனை வாய்மொழியால் மடக்கிக்கொண்டு ஸாக ஸஞ்செய்தாள். அவளெண்ணம் முடிந்ததோ! உலக கம்பழிக்கப் பாத்திரமானுள். லோகமாதாவாகிய சீதை ஸ்ரீராமனை மானைப்பிடித்துத்தரக் கேட்டாள். அது மாயமான் வேண்டாமென்று எவ்வளவு சொல்லியும் பிடிவாதஞ்செய்து அவரை யோட்டினுள். பின்னும் தர்ம ஸ்வரூபியாகிய லெக்ஷ்மணனையும் கடிந்துபேசி அவர் பின் போகச்சொன்னுள். பிறகு அதினல் அந்த சீதாதேவிப்யடைந்த அவமானமும்

பழிப்பும் இன்னமும் மாறவில்லையே! நளசக்கிரவர்த்தியின்தேவி தமயந்தி விதிவசத்தால் காட்டில் மனம் நொந்து வருந்திகிற்கிறபுருஷனை அன்னத்தைப் பிடித்தே தரவேணுமென்று ஸாதனையாகப்பேசி நிர்வாண மாக்கிவைத்தாள். இன்னமும் தக்கன் செய்தவேள்விக்கு லோகமாதாவாகிய தாக்ஷாயணி தன்னை யழைக்காத தந்தை விட்டிற்குத் தன்னை யனுப்பவேண்டுமென்று பரமசிவனைக்கேழ்க்க அவர் அங்குபோவது முறை யல்லவென்று பலவிதமாக நல்வார்த்தைகள் சொல்லியும் கேளாமல்போய் மான பங்கமடைந்து அக்னிப் பிரவேசஞ்செய்யவில்லையா! அது போலதான் என்கதியும் ஆகவேண்டியது, பிராணகாந்தா! புண்ணிய மூர்த்தியாகிய தங்கள் வாக்கே சத்தியமானது. நீங்களே தெய்வமாக இருந்து எனது குற்றங்களைப்பொறுத்து என்மக்களுக்குமெனக்கும் நற்கதி யளிக்கவேணும்.

செஞ்சுருட்டி இராகம்—சாப்பு தாளம்.

மதிமோசம் போனேனே—விதிவசமானேன் நான்
கதியளிக்கும் கண்மணி—மக்களா—மக்களா—மக்களா—மக்களா—
(மதி)

பிறந்ததும் வளர்ந்ததும் புருஷனாற் சிறந்ததும்
பிரர் நகைக்கவுமாச்சே மக்களா—மக்களா—மக்களா--மக்களா—
(மதி)

மானம் விட்டவாழ்வு மண்ணினில் மிகத்தாழ்வு
மதிப்பாரோ வுலகத்தார்—மக்களா—மக்களா—மக்களா-மக்களா—
(மதி)

ஆரிலும் சாவுதான்—நூறிலுஞ்சாவுதான்
ஆராய்ந்து மகிழ் வீரே மக்களா—மக்களா—மக்களா—மக்களா—
(மதி)

பாடெல்லாம் முடிந்தது—பழங்கதையாச்சுது
பாழும்வயிறுபற்றுதே—மக்களா-மக்களா-மக்களா—மக்களா-(பா)

அடே அப்பா மக்களா! நம்முடைய வாழ்வு முடிந்ததடா! நாம் பூமியில் வந்தகதையும் முடிந்ததடா! ஒரு மகனில்லாமல் எவ்வளவோ உயர்ந்த வம்சங்களும் வாழ்வும் அழிந்துபோனதே! இந்த மக்கட்பேறு பெறுவதற்கு எத்தனை தானம் தர்மம் யாத்திரை நோன்பு விருதம் தவம்செய்து சரீரத்தை யுலர்த்தி வாட்டுகிறார்கள்! என்கண்மணி மக்கள் பசியால் குடல் வற்றிக்காய்ந்து அழுது முகம்வீங்கி கை கால்கள் பின்ன, கண்கள் பஞ்சடையக் காணுமிக்கோலம் யார்கண்டு சகிப்பார்! பாவி தன்வயிற்று மக்களைத் தானே தின்னும் பேயானேனே! இனி தாமதித்தலாகாது. யாரேனும் வருவார்கள். நமது எண்ணம் முடிவுபெறாது.

(மூத்தவனைப் பிடித்திழுத்து கிணற்றின் பக்கம் கொண்டுபோவதும் அவன் நியாயம் கேட்டதும்)

சுமு. தாயே! மனிதரே கண்ணிற்குப் படாமலிருக்கிற இந்த வழியே இந்த இடத்திற்கு என்னமோ வாயால் சொல்லி யழுதுக்கொண்டே எங்களுடைய பசியையுமாற்றாமல் அழைத்துவந்து பாழும் கிணற்றையும் எங்கள் முகத்தையும் அடுத்துப் பார்த்து அழுகிறாயே! என்ன செய்யப்போகிறாய்! எங்களுக்குப் பசியே யில்லை. மாமன் வீடும் வேண்டாம். நாங்களறியாமல் ஆசைப்பட்டு வந்தோம். தந்தையரிடம் கொண்டுபோய்விடு. உன்னைப் பார்க்கத் தாயாராலும் பயமாக இருக்கிறது. அம்மா! அம்மா, ஒன்றும் செய்துவிடாதே! இவ்வளவு கோபமும்!

பிடிவாதமும் வேண்டாம். உன்னைத்தவிர வேறு கதியென்ன இருக்கிறது! யார் துணை! தந்தையர் கேட்டால் உயிர் விடுவாரே! பெரிய குலத்தை யழிக்காதே! நாங்களென்ன குற்றஞ் செய்தோம். பொறுமையாக ஆலோசித்துப்பார். அம்மா, நாங்கள் ஆண்மக்கள், எங்கும் போகலாம். எந்த இடத்திலுமிருக்கலாம். எந்தவேலையுஞ் செய்து பிழைக்கலாம். எங்களால் ஒருவிதப் பழிப்புமேற்படாது. பெண் பிறப்பிற்கல்லவோ நீங்கள் கவலைப்படவேண்டும்! இந்த உடைகோவணத்துடன் ஓடிப்போய் யாரையாவது அடுத்துப் பிழைக்கிறோம். உன்னையும் காப்பாற்றுகிறோம். அஞ்சாதே! எங்களை விட்டுவிடு. எனக்கொன்றும் வேண்டாம். அம்மா, தம்பிகளை யழைத்துக்கொண்டு ஓடிப்போகிறேன்.

பியாக் இராகம்—ரூபகம் தாளம்.

இதற்கோநீயுமெங்களைப்—பெற்றெடுத்தாய் அன்னையரே
இந்தப்பழி வாங்கவோ நீ—எண்ணங்கொண்டதும் முறையோ—
ஆகுமோ—ஆகுமோ—ஆகுமோ—ஆராய்ந்துபாரும் (இத)

மா. இரக்கமற்றபாவி வாயால்—உரைக்க வேதுந்தோணலையே
மறக்கவொண்ணுக் கொடுமொழிகள்—மர்மம் பிளக்குதையோ—
வாட்டுதே—வாட்டுதே—வாழும் ஜீவனை யோட்டுதே (இர)

சு. மக்களுக்கு மனமிரங்கா—மாதாவேயுன் மனங்கல்லோ
பக்கத்துக்கிணற்றிறள்ளப்—பார்க்கிறேனென்பதுஞ்சொல்லோ
பதருதே—பதருதே—பதறிய கருமஞ்சிதறும் இத)

மா. மானமே மனிதற்கு—மகிமைதரும் பூஷணமாம்
மன்னுயிர்க்கு மதுபெரிதாம்—மதிமான்கள் மதிப்பாரே
மலைக்காதே—மலைக்காதே—மரணத்திற்குச் சலிக்காதே. (இர)

குழந்தாய்! நீ சொல்வதெல்லாம் உண்மையே! உனக்குச் சரியான சமாதானங்கூற ஒன்றும் தோன்றவி

வ்லையே! என் பின்னே நீங்கள் வந்து ஒரு சுகமுமடையவில்லையே ! அன்று உன் தந்தை நாம் புறப்படும் போது ஒரு வார்த்தை சொல்லிமுடித்தார். அதாவது நீ உன் பிறந்த விட்டில் மானக்குறைவாய் நடத்தப்படுவாய். அந்தவிதம் நேருமேயானல் மறுபடியும் நீ இங்குவந்து என் கண்முன்னே யிருந்து வாழக்கூடாது. அந்த ஆசை வைக்காதே. நானுங்கள் முகம் பார்க்கமாட்டே னென்று வெறுப்புற்று சபதஞ்செய்து விட்டார். கோபமே யறியாத கணவர் கூறிய மொழிகள் கூர்மையான அம்புகள் போலப்பாய, நானும் பொறுமையிழந்து அப்படியே நடப்பே னென்று மறுத்துப் பேசி வந்துவிட்டேன். அந்த உத்தம புருஷன் வாக்குப் பலித்து விட்டது. இனி எந்த ஆசை கொண்டங்கு அவர்கள் முன்னே போவது. நம்மை நினைப்பாரோ க்ஷமிப்பாரோ அழைப்பாரோ கண்கொண்டு பார்ப்பாரோ! சொன்ன மொழி யொரு மொழியல்லவா! வாய்மையும் மானமுமல்லவோ பெரிது! மனிதருக்கு எவ்வுலகத்தும் பெருமையளித்து நற்கதி கொடுக்கும்! இனி மண்ணாசை வைக்கலாமா! மனிதர்களைப் பார்க்கலாமா! எக்கதிக்கு வந்தோமோ அக்கதிக்குப் போவோம் வா! மலைக்காதே கண்மணி!

மத்யமாவதி இராகம் ஆதிதாளம்
கண்ணிகள்.

பாலரைப்பாவி தள்ளற்றுணிந்தேன் பாழுங்கிணற்றில் (பா)
அருந்தவத்தால்வந்த—குலமணியாம்—பாவிநான்பெற்ற— (பா)
குலத்திற்குமுதல்வனுய்ற்—ரேன்றிவயிற்றில் தென்
புலத்தவர்க்குமெமக்கும்—கதியளிக்கவந்த (பா)

அன்னை தந்தையற்—கன்புடன் கடந்திட
பின்னுமென்வயிற்றினி—லிரண்டாவதாகவந்த (பா)
மூன்றுலோகத்திலும்—முழங்கிடக் கீர்த்தி
மூன்றாவதாகவந்த—முருகன்போலழகிய (பா)
நான்குவேதங்களும்—நாங்கு பாஷைகளும்
ஸாங்கமாய்க்கற்க—நான்காவதாகவந்த (பா)
கஞ்சமலர்முகமும்—கொஞ்சும்கிளி மொழியும்
அஞ்சாதேயென்று சொல்ல—ஐந்தாவதாகவந்த (பா)
ஆறுமுகனைப்போல—ஆறுதல் கூறியெந்தன்
ஆவிக்குத்துணையாக—ஆறாவதாகவந்த (பா)
ஏழுபிறப்பிற்செய்த—எல்லாபுண்ணியங்களும்
எழுந்துவடிவங்கொண்டு—ஏழாவதாகவந்த (பா)
பாவம் பாவம் பரிதாபம்—யார் சகிப்பார்
போதும்—போதும்—இந்த ஜன்மம்—போய் மடிவேன்— (பா)

(கீழேவிழுந்து புரண்டு அழுது சோகத்துடன் பேசுவது.)

ஹா! கண்மணிகளே! அய்யோ! குலமணிகளே! எனதாருயிர்ச் செல்வமே! உங்களை எல்லாரையும் ஒரே காலத்தில் வாரிக் கொடுத்து விட்டேனே! எனது குடல் காட்டுத்தீ பற்றியதுபோலப் பற்றுகிறதே! இனி யெனக்கென்ன வாழ்வு! நாங்க ளிறந்து உங்கள் கை யெள்ளும் நீராலே கதி பெற்றிருந்தால் அது முறையாகும். ஒன்றைப் போலவே ஏழு ஆண் மக்களைப் பெற்றிருந்தும் முடிவிலிப்படி விபரீதமானதே! கனவிற் கண்ட நிதிபோல எங்கள் பாக்கியமானது மக்கட்பேறைக்காட்டி மறைத்ததே!

செஞ்சுருட்டி இராகம்—ரூபகம் தாளம்.

என்ன நான்செய்குவேண்டா—நானெவ்விதஞ் சகிப்பேண்டா
முன்னம் நாங்கள்செய்தவினை—மூண்டதோ இக்கதியாய் (அன்

அன்னியரிசி கொண்டு—உன் அன்னை தந்தையருக்கு
கொள்ளிவைத்துக் குடமுடைப்பா—யென்றல்லோ யெண்ணி
[ருந்தேன்—(என்)
காணவும் போரேனு யென் கண்ணுள்மணியே உம்மை
எண்ணுதெல்லாம் எண்ணிநானும் ஏங்கித்தவிக்கவிட்டாய்(என்)

என்னடிக் குடலைப்பிடுங்கி அடைக்கிறதே! எனதாசை யிவ்வளவு அற்பமாகப் போகுமென்று நினைக்கவில்லையே! இனிக் கணமும் சகிக்க முடியாதே! இதோ உங்கள் பின்னே வருகிறேன்.

(கழுத்து கருப்பு மணியையும் சங்கத்தையும் கிணற்றின் கரையில் வைத்துக் கிணற்றை வலம்வந்து பதியையும் தெய்வத்தையும் வணங்கி கிணற்றுக்குள் தானும் பாய்வது)

அரேஜோபனு வாசிஜோபனு—பார்ஸி மெட்.

பாராயோமுகம்—பார்வதிநாதா (பா)
பார்வதிநாதா—பங்கயப்பாதா—பாவிமேல் வாதா
பரிவுடன் வாரும்—பரகதிசேரும் (பா)
கணவன் சொன்னமொழி கேளாமலிவ்வழி
கடுந்துவந்த பலன் கண்டேனிதோ—
தெய்வமே—தெய்வமே—படுந்துன்பத்தா லாவி
விடுத்தேனையோ (பா)
மன்னனைப் பிரிந்தேன்—மக்களை யிழந்தேன்
சின்னமதி கொண்டு—தன்னே தனிவந்தேன்
நாதனே—பிரபோதனே
போகிறேன் விழுந்து சாகிறேன் ஈசா (பா)
வருவாயென்முன்னே தருவாய்கதிசொன்னேன்
திருவடிக்கிழே யமர்த்திக்கொள்வாய்
ஈசனே—கைலைவாஸனே
சரணம் சரணம் சரணமையா (பா)

களம் முற்றிற்று.

## களம். 4.

இடம்—முன்னே காட்டியவனமே

பாத்திரங்கள்—ஸ்ரீசோதரன் தங்கையைத்தேடி வருவது.

புகாரிஇராகம்—ஏகதாளம்—கண்ணிகள்.

ஸ்ரீ. என்னைத்தேடிவந்ததங்கை—யெங்கேசென்றனளோ,
எங்கிநின்றனளோ—ஏதுமறியாள்—சூதுதெரியாள்
என்னநினைந்தாளோ—தெய்வமே (என்).
பாவிமேல்வைத்தபாசத்தால்—பரிவுடனேவந்தாள்—பதறிப்பேச
நொந்தாள்—பற்றெல்லாமொழித்தெற்றிசைநோக்கிப்
பதைத்து—ஓடினளோ—தெய்வமே (என்).
காணுமல்கலந்துபேசாமல்—கலக்கம்மாறுமோ
கவலைதீருமோ—கருத்தும்வாடுதே—கண்கள்தேடுதே — கால்பி
[ன்னலாடுதே (என்)

ஹா! ஆகாயம் பூமி மேடு பள்ளம் எல்லாம் ஒன்ருகக் காண்கிறதே! கால்கள் பின்னுகிறதே! இந்த வழி மலையாகத் தோன்றுகிறதே! என்ன செய்வாளோ! எங்கே போவாளோ! யாரையும் பணியாளே! குழந்தைகளேழுபேரும் பின்னே போகிருர்களாமே! எந்த சப்தமும் எந்த உருவமும் அவளாகவே தோன்றுகிறதே! ஹே! ஸோதரி! நீ சென்ற வழியே கதறிக் கொண்டு வருகிறேனே!

(இடையர்களைச் சந்தித்து வினவுதல்.)

எதுகுலகாம்போதி—இராகம் ஹிந்துஸ்தான் ஆதிதாளம்.

ஆயர் குலத்தவரே சொல்வீர்—மாயன்—கோபாலன்—
மனதிற்குகந்த— (ஆ)
மனமெலிந்து—மதியழிந்து—மக்கள்சூழ்ந்து—பக்கம்வா
மன்னன்தேவி—மதியாதாவி—மறைந்து ஓடி விரைந்துவந்தாள்
(ஆ)

முன்பின்னறியாதவள் — தன்பெருமைதெரியாதவள்
கன்மனத்தாள்கடிந்துபேச—காட்டில்வர்தாள்கண்டதுண்டோ ()

கலியாணி—ஆதிதாளம்—கண்ணிகள்—
(உந்தன் பாதசிந்தையாலே மெட்)

எவருங்காணேன்—எதுந்தோணேன்—
எங்குசென்றாளோ—எங்கிநின்றாளோ— ()
மானிகருக்கு—மரணம்திரணம்
மதியார் மனத்தால்—மடிவாரச்சணம்— ()
அங்குமிங்குமடிச்சுவடுகள்
அழுந்தமணலிற்—றேணுதெங்கும்— ()
ஓகோமோசம்—உயிர்க்குநாசம்
உற்றதேதோ—உண்மைபாதோ— ()
பாழுங்கிணற்றிற்—பாய்ந்திறந்தாரோ
பாவிமேற்பாசம்—பற்றிழந்தாரோ (எங்கு)

யாதவர்களே! கற்பிற்கரசி, காதல்மக்கள் எழுவருடன் கண் கலங்கியிந்த வழிவரக் கண்டதுண்டோ! கரைகாணு மாலுமிபோல தத்தளிக்கிறேனே! தெரிந்தால் ஒளிக்காமல் சொல்லுங்கள்.

கோ. அடா பாவமே! என்ன பெண்பிள்ளே! என்ன பிடிவாதம்! இப்பத்தான் பஞ்சையான குஞ்சுகளே கூட்டிக்கினு இதோ இந்தப் பாதைவழியே போகுதே! துறவு எங்கே—தண்ணீர் வேணும். தாகமாகுதே இன்னு கேட்டாங்க. நாங்கள் மக்களுக்குப் பால் தரமின்னேம், வேண்டாம். போய்வரும் போது ஆகட்டும் இன்றுசொல்லிப் போச்சுதுங்க. பரிதாவம் பாக்க வருத்தமாச்சுதுங்க. சாமீ!

(லவிடபுகாருமை மெட்)

அய்யோ எந்தன்மானவதியே—அருமையானகுணவதியே
பொய்யோஉந்தன்பாசம்மறந்தாய்—பொற்கொடியேஉயிர்துறந்

[தாய் (அய்)

அழகியமக்களைக்கொன்று—அவஸரமாய் மடிந்தாயின்று
அணையாத்தீயைமூட்டிவிட்டாய்—அடியேன்மீதுபழிபோட்
[டாய் (அய்)

ஸ-ப. ஹா! அப்படியா! இந்த வழியாகவா போனார்கள்! இதோபோகிறேன். பிரியசோதரி! அவஸரப்படாதே! வந்துவிட்டேன். ஸாகஸம் செய்யாதே!
(ஓடித்தேடுவது.)

ஆலமரமும், புதரும், பாழுங்கிணறும்—மணல்தரையும் வீன்.)

(கிணற்றை உற்றுப்பார்த்து கிணற்றைச் சுற்றி வயிற்றிலடித்து கீழே புரண்டு புலம்புவது.)

ஹா! மானவதி! என் குலமணி! என்குணமணி! குலதீபமே! மணிதீபமே! அம்மாதாயே! நம்மையீன்ற அன்னைதந்தையர் இந்தக் கொடுந்துன்பம் நேரிடு மென்றெண்ணித் தாங்கள் முன்னே யிறந்தனரோ! அடியார்க்கும் நல்லவளே! மாதர்க்கரசியே! கற்பிற்கணிகலமே! உன்னைச் சதமென்று திருமணஞ்செய்தவன், உன்னுடன் பழகி யேழுமக்களைப்பெற்றவன், உங்களது கொடுமையான துன்மரணத்தைக்கேட்டு எப்படிச்சகிப்பான்! எங்கேயென்றுகேட்டால், என்ன மறுமொழி சொல்லுவேன்! என்றும்மாறாத பழிப்பிற்கு இடந்தேடி வைத்து மறைந்தனையே! என்னை நேரில்கண்டு ஒருவார்த்தை பேசி போகக்கூடாதா! என்ன அவஸரம்! என்ன துணிவு! என்ன ஸாகஸம்! கோடி தவஞ்செய்தாலும் மாண்டார் இனித்திரும்பி வருவாரோ! உயிருடன் வாழ்பவருக்கன்றோ எல்லா காக்ஷியும்! அடி ஒன்றா இரண்டா பாவி, ஏழு கண்மணிகளான மக்களையும் ஒருகணத்தில், மானத்திற்

கும் கோபத்திற்கும் பலிகொடுத்தனையே! அய்யோ! வயிறு எரிகிறதே! என்னமாகச் சகிப்பேன்! மானவதி!

(மூர்ச்சையாகித் தெளிந்து புலம்புவது)

முகாரி—சாப்புதாளம்.

ஹா என் சோதரியே—ஹா என் மானவதியே—
அய்யோ உங்களை யிழந்தேன்—ஆறுமோ—ஆறுமோ—மாறுமோ (ஹா)

மாமன்வீடு யென்றுமனம்—மகிழ்ந்துவந்தீரித்தினம்
மானத்திற்குப் பலிகொடுத்தீர்—மக்களா மக்களா மக்களா (ஹா)

மணக்கோலம் செய்வித்தாரை—மறுத்தழைத் தறியேனே
பிணக்கோலம் காண இருந்தேன்—மங்கையே நங்கையே தங்கை
[யே (ஹா)

எப்படிப் பிரிந்திருப்பேன்—எவ்விதம் உயிர் தரிப்பேன்
ஒப்பில்லாக்குணநிதியே—மாமதியே விதியே சதியே (ஹா)

ஸிந்துபைரவி—ரூபகம்தாளம்—கண்ணிகள்.

கருப்புமணிப்பொட்டுக் கண்டேன்—களங்கமிக நெஞ்சிற்கொ
[ண்டேன் (கரு)

விருப்பமிகச் சொன்னேன்மனே—வேண்டிவந்து உயிர்விட்டாய்
விண்மணியே—கண்மணியே—பெண்மணியே— (கரு)

பாற் சங்கத்தைப் பார்த்தபோதே—பாதி வுயிர் போச்சே மாதே
பாவிமேற் பாசம்வைத்துப்—பாதவித்தோடி மாண்டீர்
பனிமதியே—பாழும்விதியே—பட்டாய் நிதியே (கரு)

மாதவப்பேறும் மக்களின்—மதிமுகத்தைப் பாராமலே
மறைந்தோடி வந்துயிங்கு—விரைந்துயிர்விடமுறையோ
மறந்தனையே—பிரிந்தனையே—இறந்தனையே (கரு

(திரைவிட்டு கிணற்றில் விழுந்திறந்த
சவங்களை யெடுத்துவைத்துப் புலம்பல்.)

ஹா கஷ்டம்! என்னகோபம்! யார்தான் பார்த்துச் சகிப்பார்! மாமன் செல்வத்திற்கு மருமக்கள்

காணியாட்சி யென்பாரே ! இந்த ஆக்ஷிபெறத்தானு என் வீடுதேடி வந்தீர்கள்! பசித்துவந்த வயிற்றுக்கு ருசிக்குமன்னம் இவ்வளவு கொடுக்காப் பாவியானேன் ! இனி நினைத்துப்புலம்பிப் பயனென்ன! ஹா தெய்வமே ! என் தீவினையே !

ஸிந்துபைரவி — திசிரம் தாளம் (அல்லியேனும் பூவல்லி)

ஒன்றுபோலேழு மருமக்களைக்கொன்று—இன்று துடர்ந்த வசை
[யெனக்கினி
யென்று துலைந்திடுமோ—அது குன்றியழிந்திடுமோ
மோசம் போனேன்—குல நாசமானேன்—அதி கிலேச மடைந்
[தேனடா—(ஒன்று)

கன்றுந்தாயும் நீங்கள் கதறிவுயிர்வி—க் கருத்தறியாமற்—
வெருப்புடன் மாளக்—காணுமற் பரிகொடுத்தேன்
கனல்மொழுகாய்—கருத்துருகக்—கண்டுமெகிந்தேனடா— (மோ)
உற்றபிறப்பையும் உங்களையும் விட்டு—ஒண்டியாய் வாழ்ந்தால்
உலகம் நகைத்திடாதோ—பலரும் பகைத்திடாரோ—
உண்மையடா கண்மணிகாள்—உறுதியா யுயிர்விடுவேன் (ஒன்று)

அடா ! துரைமக்களா ! உங்கள் குலத்தோடு உங்கள் தாய்பிறந்த எங்கள் குலத்தாரையும் நற்கதிக்கேற்ற ஏழு நவரத்தினங்கள் பிறந்திருக்கிறீர்கள். நமது பெருந்தாகம் தீரும், நமக்கொப்பாகார் யாருமென்று மதங்கொண்டிருந்தேனடா ! எங்கள்வாய் நீர்வற்ற மண்ணைச்சொரிந்தீர்களே! இதுமுறையோ ! இதோ உங்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகளை முன்னாலே பாவி யென்கையாலேசெய்து முடிக்கிறேன். இதற்குக் கைமாறு என்னையுமுடனே உங்கள்வழிக்கு யழைத்துப்போவீர். ஹா ! மானவதீ!

காளம் முற்றிற்று.

# அங்கம். 4.

## களம். 1.

இடம்—தனியே வனமார்க்கம்.

பாத்திரங்கள்—குணசோமன் பிரவேசம்.

நீலாம்புரி இராகம்—திருபுடை தாளம்.

குண.—எதிர்மொழி யாடிப்போன—எந்தன் காதலியைக் காணேன்
எண்ணுதெல்லா மெண்ணித் துய—ரோங்கியே துஞ்செய்யத்
[தோணேன்— (எ)

கனவிலும் நினவிலுமென்—கருத்து மீறிப்பேசிடாளே
கடுந்து முகங்கோணிஞலும்--கணமும் பார்த்துச்சகித்திடாளே
கற்புக்கரசி யென்மாஞள்—காதல் மககளுடன்போஞள்
காலகதி யெதுவாச்சோ—கற்பனையாய்ப் பேசிக்கொண்டு— (எ)

அன்று முதலின்றவரை—அண்ணன் விகிதம்போடாமல்
சென்றுதாய் வீடையடுத்த—சேதி சொல்லற்றுதுவிடாமல்
என்று மிந்தவிதமாக—இருந்து முன்நாள் அறியேனே
இன்றேமக்களுடன்சென்று-இன்பமேதானடைவேனென்று (எ)

எழுந்தகோபாவே சத்தாலே—என்னைமறந்து சபித்தேன்
மொழிந்தகொடுஞ்சொல்லம்பாலே-சோர்ந்தாளோவென்று தவித்
[தேன்
கழிந்த நாட்கள்போக நல்ல—காலமும் ஈசன்வகுத்தான்
அழிந்த மானத்துடன் இங்கு—அழுத்தமாய் அணுகேனென்று
—(எ)

ஹா! தெய்வமே! என்ன உலகதர்மம் தெரிந்தும் தெரியாதவஞகப் போனேன்! காலவேற்றுமையாலெழுந்த அற்பமான கோபாவேசத்தால் எங்களிருவருக்குள்ள காதலின் அருமையை மறந்தும் அவியாஜமாகக் குழந்தைகளின் மீதேற்பட்ட பாசத்தை

யும் துறந்து நுண்ணறிவுடைய எனது பிரியநாயகியைக் கடுஞ்சொற்களால் பேசிவிட்டேன்! இயற்கையாகப் பெண்களுக்குத் தாய்வீட்டின் நினைவு அதிகமாயிருப்பது வழக்கம்! அதை யனுசரித்துப் பேசினவளைச்சினந்து வெறுத்துப் பேசிவிட்டேன்! ஆசையுடன் மக்களையழைத்துக்கொண்டு போனாளே! என்ன சம்பவித்ததோ! அவர்களை மறந்திருக்க என்னால் முடியவில்லை! அடிக்கடி என் வயிற்றில் தீப்பந்தங்கொண்டு சுடுவதுபோல 'பக்' என்று தோற்றமுண்டாகிறதே! என்தேகம் ஒடுங்கி தைரியம் குன்றிப்போகிறதே! அவர்களைப்போய்ச் சந்திக்காதவரையில் எனது ஜீவன் நிலைகொள்ளாதே! ஹா! ஜகதீசா! இதோ செல்லுகின்றேன். எனக்குப் பக்ஷமில்லாததினால் இந்தவிதம் நடந்து போகிறேன்.

(இரண்டு பிராமண வழிப்போக்கர்கள் பிரவேசம்.)

1. பி. என்ன ஆச்சரியம்! இப்படியுமிந்தக் கலியுகத்தில் மனுஷியாளிருக்கிறார்களா! ஓய், பெண்டாட்டி வார்த்தையைக் கேட்டுக்கொண்டு பெற்றதாய் தந்தையருக்கு அன்னம்போடாத இந்தநாளிலே என்ன ஸகோதரவாஸ்சலியம்! என்ன மர்மம் வைத்து வேலை செய்திருக்கிறாள். அண்ணன் தங்கை, மாமன் மருமக்களென்றால் இப்படி யல்லவோ பாசமிருக்கவேண்டும்! ஆனாலும் சுஸோதரனைப் போல மனுஷியன் கிடைப்பதரிது.

2. பி. ஆனாலந்தபாபி குடிலை பெண்ணா பேயா! அந்தவீட்டிலே அந்த மானவதி பிறக்கவில்லையா! பாவம்!

ஏழு குழந்தைகளுடன் வந்தவளுக்கு குடிக்கக் கஞ்சிக்குக்கூட பாத்தியமில்லையா ! வீட்டிற்கு உடையவனில்லை. அடித்து ஓட்டிவிட்டாள். மானம் பொல்லாது.

குண. அய்யா ! நீங்கள் யார்? என்ன பரிதாபப்பட்டுப் பேசிப்போகிறீர்கள் ? விபரம் என்ன ?

1. பி. அய்யா ! என்னவோ வயிற்றெரிச்சல். எல்லாம் பெண்டுகளால் நேரிட்ட பிரளயம். மதுரைப்பட்டணமே அழிந்துவிட்டது. புருஷர்களுக்கு என்ன புத்தியிருந்தும் என்ன !

குண. (பரபரப்புடன்) சுவாமி ! என்ன ! என்ன நடந்தது ?

2. பி. இந்த மதுரைக்கதிபதி சுசோதரன். அவருக்கு ஒரு தங்கை மானவதி. அவளேழு குழந்தைகளுடன் தன்புருஷன் வீட்டைவிட்டு பிறந்தவீட்டுச் செல்வம்கொண்டாடப் புறப்பட்டு வந்தாள். அண்ணனில்லை. மதனி மகாபாவி குடிலையிருந்தாள். தாயும் குழந்தைகளுமாக வந்திருக்கிறுளே யென்று நினைக்காமல் வாயில்வந்தபடி பேசிக் கஞ்சிக்குக்கூட வழியில்லையென்று ஓட்டிவிட்டாள். அய்யோ மானம் பொல்லாது. தங்கமான பெண். ஏழு குழந்தைகளுடனேடி ஊருக்கு வடக்கேயுள்ள வேலங்காட்டில் ஒரு பாழுங்கிணற்றில் மக்களையும் தள்ளிக் கொண்டு தானும் வீழ்ந்துஉயிர் விட்டாள். அய்யா ! ஊர் நாடு கதறுகிறது.

குண. அய்யா ! அய்யா ! இது நிஜந்தானு? நன்ருய்த் தெரியுமா உங்களுக்கு ? அங்கிருந்துதானு வருகிறீர்கள் ?

1. பி. அய்யோ ! இந்த விஷயத்தைப் பொய்யாகவும் பேசு

வார்களா! அய்யா! வயிறெரியுதே! யார் சகிப்பார் பாபம்!

குண. ஹா! மானவதீ! கண்மணிகாள்!

(கீழே விழுந்து மூர்ச்சை)

(பிராமணர்கள் திடுக்கிட்டுக் குணசோமனை யெடுத்துக் களைப்பாற்றுவது.)

எதுதலகாம்போதி—திசிரம் தாளம்—நீசறுப்பிறந்தாலும்.

இனியென்னால் வாழ்வதாகாது—இன்பந்தரும் மனைவியுடன் மக்களை யிழந்து— (இனி)

மனதிற்குகந்த மணவாட்டி—மானிலத்தோர் கொண்டாடும் மங்கையென் சீயாட்டி—

அன்றென் வாயில்வந்த மொழிதானே—சென்றவரின் முன்னின்றுசெய்தபழி தானோ— (இனி)

உயிரனைய மனைவிமக்களொன்றாய்—உற்றமானக் கேட்டிற் குடன் பலிகொடுத்தேன்— (இனி)

இனியுயிர் தரிக்கலாகாது—மனிதர்கள் முகத்தில் விழிக்கவுமாகாது—(இனி)

(மறுபடி மூர்ச்சையாகித் தெளிந்து பிரலாபிப்பது.)

ஹா! மானவதீ! அடேசுகுண! சுமுகா! சுசீலா! கண்மணிகாள்! ஓகோ! என்ன விபரீதகாலம்! உங்கள் கதி யிப்படி யாச்சுது! நான் சங்கையுற்றுக் கூறினமொழிகள் நிஜமாகப் பிறந்ததே! அடிஸாகஸி! நான் கோபாவேசத்தில் சொன்ன சிலமொழிகளை மனதில் ஞாபகமாகவைத்து யாருஞ் செய்வதற்கரிய கொடிய ஸாகஸ கர்மத்தைச் செய்து தற்கொலை செய்துகொண்டதுமன்றி, எனது ஏழு தாதுக்கள் போன்ற யேழு மக்களின் ஜீவனையும் துணைகொண்டு மாண்டனையே! இதைக் கேட்டு யார் இனி உயிர் வாழ்

வர்! இனிக் கூவியழைத்தால் வருவார்களா! இனி மதுரா நகரத்தில் எனக்கு என்ன வேலை! எதற்காகப் போகவேணும்! என் மைத்துனன் முகத்திலினி விழிக்கவேணுமா! இனியென்னை ஜனங்களெப்படி மதிப்பார்கள்! இந்தப்பாவியேன் தனது பெண்டையும் மக்களையும் தனியே யனுப்பினான்! தன்னிடம் வைத்துக் காப்பாற்ற விதியற்றவன் என்றேசுவார்களே! நடந்த வுண்மை யாருக்குத் தெரியும்! தெய்வமே நீ தான் அறியவேணும்! நானுமிந்த வழியே சென்று அந்தக் கிணற்றடியிற் போய்ப் பார்க்கிறேன்! ஹா! மானவதீ! என் கண்மணிகாள்!

களம் முற்றிற்று.

---

## களம். 2.

இடம்—அரண்மனையி லொருபாகம்.

பாத்திரங்கள்—சுசோதரன் குடிலையை வாளையோங்கிக் கொண்டு கோபமாய்க் கேழ்ப்பது.

காபி-ஆதி-ஏதோயேன்மேல்பழி சுமத்துரீர் மெட்.

சு—மோசக்காரி குல—நாசக்காரி நீ
கு—பாசமறந்தீரோ நீர்—பாசமறந்தீரோ நீர்
சு—கூசாமலினிப் பேசவந்தாய் சீ சீ (மோ)
கு—சூதுவாதுக்காரிப் போதனையேறி—யேதுமதியிழந்தீரோ
சு—போதும் வாயை மூடு—போதும் வாயை மூடு
கு—ஏதென் குலத்தாரை சூதாற் கொன்றீற் பாவி
அறிவேன்—அறிவேன்—அடுத்துக் கெடுத்தாயே (அரி)
சு—கட்டைகதிபெற—மொட்டையடிக்குறேன்
கு—கல்லோ மனங் கரையாதோ—கல்லோ மனங் கரையாதோ
சு—கழுதையிலேற்றிக்—கண்டோர் நகைக்கச்செய்வேன் (மோ)

து—பெண்ணாகப்பிறந்துப் பேய்க்குணம் பூண்டுக் கண்டசுகமிதுபாரீர்
சு—பேயே வாயை மூடு—பேயே வாயை மூடு
து—பேயிலும் நாயிலும்—பேதைநான் கடையானேன் (அரி)

சு. அடி! குலகளங்கி! என் இனத்தாரே கூடாது! மூலத்தோடே அழித்துவிட வேணுமென்று அள வில்லாக் கொடுமைகள் செய்து அபமானஞ்செய்து அருமை மக்களுக்கும் ஆருயிற் றுணையாகப் பிறந்த என் மானவதிக்கும் இறுதிதேடி வைத்தாயே, அடி வஞ்சகி! இனிப்பாபம் புண்ணியம் பார்க்கமனம் வருமா! அப்பழிக்குப் பழிவாங்கக் கருதியன்றோ உன் குலத்தவரை மாயா நிர்மிதமான மணவரை மண்டபத்தில் வஞ்சனைபேசி வரவழைத்து அன்ன மிட்டுக்கொன்றேன்! என் மனமாற்றக் கூடவில்லையே! ஊரார் நகைக்கப்பேசித் தெருவழியோட்டினாய். நமது காரிய முடிந்ததென்று உனக்குத் தீக்ஷை வாங்கிக் கழுதையி லேற்றி ஊர்வலம் செய்வித்து காளவாயிற்றள்ளிக் கனியாத கட்டையைக் காய்ந்த கட்டையுடன் நீறாக்கி விடுகிறேன். கிங்கரர்களே! நான் கூறியபடி இந்தக்கொடும்பாவியை, நமது நாட்டி லுள்ளவர்கள் அறியச் செய்துவிடுங்கள்.

செஞ்சுருட்டி இராகம்—ஏகதாளம்

கண்ணிகள்.

துடி. ஆண்மக்கள் பெண்மக்களா—அன்னை தந்தையர்களே
ஆகாதசெய்கையாலருமைகுலைந்து—ஆனேன்நானிக்கோலம் (ஆ)
அண்ணன் தம்பிமார்களே—அக்காள் தங்கைச்சிகளே
எண்ணியகொடுமை யென்னையேசுட்டு ஏதுமில்லாமற்போ
[னேனே (ஆ)
உலகத்துப் பெண்மணிகாள்—ஒத்துமையாக வாழ்வீர்
சீலம் கற்புவாய்மை யானம்பூண்டு—சிறப்புடன் வாழ்வீர் (ஆ)
(எல்லாருஞ்செல்வது.)

களம் முற்றிற்று.

## களம் 3.

இடம்.—பாழுங்கிணறு படர்வனம்.

பாத்திரங்கள்.—குணசோமனும்—ஸுசோதரனும் சந்திப்பு.

சாவேரி இராகம்—ரூபகம் தாளம்-(கால்சோருது கண்சோருது)

கண்ணிகள்.

குண—மதியிழந்தேன்—பதியிழந்தேன்—மனைவிமக்களை யிழந்தேன்-
விதியோ—முன்செய்சதியோ-காலகதியோ-நானேதிலானேன்—
வயிறுகொதிக்க—மனம்பதைக்க—வருந்தியாரிட்ட சாபமோ—
உயிருக்குயிராம்—உயர்கதிக்காம்—உத்தமி மக்களைப்பிரிந்தேன்-
கொண்ட ஆசை—கொள்ளைபோச்சே—கொடும்பாவி யுயிர்வா [ழேன்
பண்டுசெய்த—பாபத்தாலே—பரதேசியாகப் போனேனே—

வழிப் போக்கர்கள் சொன்ன குறிப்புள்ள இடமும் கிணறு மிதுதான். ஹா! மானவதீ! எங்கே பிறந்தாய்! எங்கேவாழ்ந்து காலமெல்லாம்போக்கினாய்! எவ்வளவு சீக்கிரத்தில் உங்கள் வாழ்வு கதையாக முடிந்தது! நேற்று இருந்தார் இன்றிறந்தார் எனும்பழமொழியெனக்குத்தானேற்பட்டது. அடி யென்னருந்தவப் பேறே! ஒப்பு உவமையில்லாக் குணவதியே! எனது துவாழ்விற் குகந்தவளே! கட்டழகீ! யாரைப் பழுதுரைத்தேன்! யாரைப்பிரித்து வைத்தேன்! எவர் குடியைக் கெடுத்தேன்! எவரை வஞ்சித்தேன்! அடி யென் பாக்கிய களஞ்சியமே, உன்செரிந்த கூந்தலும் மருண்ட பார்வையும் வெண்ணிலவைப்போன்ற முருவலையும் குவியாத தாமரைபோன்ற முகமும் கோபகாலத்திலும் குழைந்துபேசும் விநயமும் உன் மிருதுவான வாக்கின் பொருளும் இன்பமும் எப்போது பார்ப்பேன்! எப்படி மறப்பேன்! எப்படி உயிர் தரிப்பேன்! ஓகோ! அதோ சாம்பற் குவியல்

களும் முறிந்த எலும்புகளும் காண்கிறதே! அய்யோ பாவிமக்காள் இக்கதிக்கா! இந்தக் கோலம் காணவா உங்களையனுப்பினேன்! பாவி யென் வாயால் உங்களைப் பார்க்கமாட்டேன், உங்கள்முகத்தில் விழிக்க மாட்டேனென்று வெறுத்துச் சொன்ன வாக்குப் பலித்ததே! அய்யோ! (கீழேவிழுந்து புரண்டழுவது.) ஹா! மானவதீ! மானவதீ! என் காதலீ!

ஸா. ஹா! என தருமைப்பிறப்பே! உன் தாயிருந்தால் கேட்டுச் சகிப்பாளா! பெற்றவளுக்கல்லவோ தெரியும் உன்பெருமை! உன்குணம்! குணசோமன் கேட்டால் உயிருடன் பிழைத்திருப்பானு! நீயும் உன் மக்களுமில்லாதமனையில் வாஸஞ்செய்வனு! என்னை மதிப்பானு! என்முகத்தில் விழிப்பானு! என்மீதுள்ள வாஞ்சையல்லவோ உன்னை யிங்கிழுத்துவந்து இக்கோலம் செய்வித்தது! நீ இறந்த இடத்தில் என் உயிரை மடிக்கிறேன்! அந்தக் குடிலை மகாபாவியை மூலத்தோடு கருவறுத்துப் பழிவாங்கினேன்! என் குடல்கொதிக்கிறது! இதோ உன்பின்னே வந்துவிட்டேன்! என்னையு மழைத்துக்கொள். ஹா! இது யார்? மண்ணில்விழுந்து புரண்டு கிடக்கிறது! (உற்றுப்பார்த்து) ஹா! என் குணசோமா! என் மருமகனே! என் உயிர்த்தோழனே! அருஞ்செல்வமே!

(கீழேவிழுவது.)

இராகம் நாதநாமக்கிரியை—ஏகதாளம்—புலம்பல்

மருமகனே—அப்பா—துரைமகனே—அய்யோ
முகமதியே—ஆகா—குணநிதியே
மறைந்துவந்து மாண்டாயோடா (மரு)

மருத்து வுன்னைபபார்க்கலையே—மகிழ்ந்துகூடி யிருக்கலையே
மர்மம் யாதோ—முன்செய்த கர்மமீதோ
வெருத்து யெம்மை—விடுத்துச்சென்றாய் (மரு)
மனைவி மக்களாசையாலே—மாண்டாயோடா மண்ணின்மேலே
எனையழைத்து—மனங்களிக்க—மொழியுரைத்து
மனையைநாடி—வாராதேனோ (மரு)

(குணசோமன் மூர்ச்சைதெளிந்து சுசோதரனை விழித்துப்பார்த்து இருவரும் கட்டிக்கொண்டு பிரலாபிப்பது.)

ஸ. ஹா! குணசோமா! இப்படி உன்னைப்பார்க்க என் கண்கள் கூசுகின்றனவே! உனக்கென்னபதில் சொல்வேன்! இவ்வாழ்க்கையில் புருஷர்களுக்கு எந்த நன்மையும் தீமையும் பாபமும் பழியும் பெண்களாலன்றோ விளைகின்றது! நான் விட்டிலில்லாத காலத்தில், எனதருமை ஸகோதரி மானவதி, மக்களுடன் வந்தவளை அருமையாகப் பேசியழைத்து வழக்கம்போல நடத்தாமல், ஏதோகடிந்து இகழ்ந்து பேசிய கொடுஞ்சொற்களால் எழுந்த மானக்குறையும், சகிக்கமுடியாத கோபமுமன்றோ யாருமறியாது இந்தத் தடம்வந்து மக்களுடன் உயிரை விடுத்தது. அந்தவஞ்சகி ஸாகவஸி, எனது மறைப்பையும் மானத்தையும் அழித்து என்றும் மாறாத பழிப்பைப் பூமியில் நாட்டவந்த அக்குடிலையை பழிக்குப் பழி வாங்கினேன். பந்துமித்திர மூலத்தோடு கொன்றேன். அவமானஞ்செய்து உயிர்க்கொலை வாங்கினேன். என்னசெய்தும், என் வயிற்றெரிச்சல் மாறவில்லையே! இனி யெனக்கென்ன வாழ்வு! என்ன இருப்பு! அவர்களைச் சிதையேற்றி தகனஞ்செய்த இடத்திலேயே இந்தப் பாழுமுட

லேப் போக்குவோமென்று கருதினேன்! இந்தவிபரம் உனக்கு அறிவிக்கத் தூதர் அனுப்பினேன். உன்னை யொருமுறை பார்க்கவேணுமென்ற தாகம் மிகவுமிருந்தது. தெய்வகதியால் உன்னைப் பார்த்தேன். உயிரும் வெறுத்தேன். ஹா! மானவதீ ஹா. குணசோமா!

குண. ஹா! சுஸோதரா! நீங்கள் நல்ல விவேகி. தர்மம் விநயம் தெரிந்தவர்கள். யாருக்கும் சுலபர் நானறியேனு; உங்களுடன் பிறந்தவள் உங்களைப் போலவே நற்குணம் நல்லவினயம் ஜீவகாருணியம், தருமத்தில் புத்தி, என்னிடத்தில் மாருத அன்பு பக்தியுடையவள். யாருக்கும் நல்லவள். மாருத பஞ்சத்தின் கொடுமையைச் சகிக்கமுடியாது மக்களுடன் உங்கள்வீடு வரவேணுமென்று என்னை வேண்டினுள். நானிந்த நிலமையில்போவது முறையல்ல என்று தடுத்துக்கூற, அதைக்கவனிக்காமல் பிடிவாதமாய்ப் புறப்படும்போது காலவேற்றுமையால் எனக்குப் பொறுமைமாறி நீசென்ற இடத்தில் ஏதேனும் மானக் குறைவாக ஏற்பட்டால், திரும்பியிங்கு வந்துன்மக்களுடன் என் முகத்தில் விழிக்கக் கூடாதென்று பாவி சொன்னேன். அதைக் கேட்டுக்கொண்டே புறப்பட்டு வந்தாள். தெய்வகதியால் என்வாக்குப் போலவே இங்கு ஸம்பவித்திருக்கிறது (அழுதுகொண்டு) அந்த வாக்கிற்கும் வாய்மைக்கும் மானத்திற்காகவும், பதியின் வாக்கை மறுத்துவந்த பாபத்தை யறிந்தும் தங்களுயிரைத் திரணமாக நினைத்து கிணற்றில் விழுத்திருக்கிருள். ஹா! காதலி—மானவதீ! கண்மணிகாள்

அடி உத்தமி. என் வாக்கின்படி உயிர் விடுத்த னையே! ஒரு ஜீவனு! ஒப்பற்ற எட்டு ஜீவன்கள்! பாபம்! ஒண்டியாகி பட்டமரம் போல நிற்கின் றேனே! என்னவாழ்வு! இனி யெந்த வாழ்வை வே ண்டி என்ன நன்மையைக் கருதி உயிர் வைத்துக் கொள்ள வேணும்! சுசோதரா, நம்மிருவர் மனமு மொன்றுபட்டிருப்பதுபோல இருவருடைய கால கதியுமொன்ருய் முடிந்ததே; என்னுலே யுனக்கு துக்கம், உன்னுலே யெனக்கு துக்கம். ஆகையால் நம்மிருவர் ஜீவனும் ஸமகாலத்தில் அவர்கள் சென்ற இடத்திற்கு தொடர்ந்து செல்லட்டும்; ஹா என்னு யிர்த்தோழா! ஹா! ஜகதீசா! இந்தக் கதைக்கும் பழிக்குந்தானு எங்களைப் படைததீர்.

ஸ-ா. இன்னும் எந்த ஜன்மத்தில் என் மானவதியைப்போ லத் தங்கையும் உங்களைப்போல மருமகனேயும் பார்க்கப்போகிறேன்! ஜகதீசா! இந்த் பரிசுத்தமான ஜீவன்களை அங்கீகரித்து நற்கதி யளிக்கவேணும்.

(இருவரும் வாளையுருவிக்கொண்டு)
(நோட்மேட்.)

ஈசனே—ஜகதீசனே—பாபநாசனே—யாட்கொள்ளுவீர்
பாசகதிகளொழித்து உலக—பற்று நீக்கிப்பணிந்தோம் (ஈச)
பாவியிருவரும்—கூடினேம்—பரமகதியை—நாடினேம்
ஆவிற்றுணையாய் அனைத்துயிரையும்—ஆட்கொள்ளும் நட [ராஜனே

(பார்வதி பரமேசுவரன் ஆகாயவெளியில்)

ஹா!! ஹா!! பதறவேண்டாம். பதறவேண்டாம். தற்கொலை புரியாதீர்.

(இருவரும் திடுக்கிட்டு மேலேபார்க்க

பர. பக்தர்களே ! ஆச்சரியம் ! என்ன திடமானவிருதம்! என்ன மனசு! ஒருவருக் கொருவர் உள்ள அன்பு ! உலகத்தில் பிராணிகளுக் கேற்படும் சுகதுக்கங்கள் அவரவர்கள் முற்பிறப்பில் செய்திருக்கிற புண்ணியத்தினளவேயாம். நீங்களொருவர்க் கொருவர் காரணமாகப் பேசி வருத்தப்பட வேண்டாம். நடக்க வேண்டியது நடந்தது. உங்களைப் போல பந்துவாஸ்சலியம், ஸகோதர வாஸ்சலியம், ஸ்திரீ புருஷ வாஸ்சலியம் கொண்டு ஆவிக்கும் மேலாம் வாய்மை மானம் முதலியவைகளை கைக்கொண்டு ஸாதித்தவர்களில்லை; உங்கள் இருவர் கண்களாலேபாருங்கள். எழுமக்களுடன் இதோ மானவதி யிருக்கிருள். நீங்கள் செய்திருக்கிற ஸாகஸ கர்மங்களின் கொடுமை மாறி பாபம் நீங்க கொஞ்ச காலம் அருந்தவம் இயற்றிப் பிறகு நற்கதியடைவீர்கள். ஹே மானவதீ ! நீயும் உன்னேழு மக்களுடன் இந்த இடத்திலேயே தேவ சரீரம் பெற்றிருப்பீர்கள் ! இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து உங்களைப் பிரார்த்தித்து பூஜிப்பவர்களுக்கு இந்த கலியுகத்தில் ஸந்தானபாக்கியம் ஸௌபாக்கியங்களுண்டாகும். பிறகு நீயும் நற்பதவியை யடைவாய்.

(புஷ்பமாரி பொழிவது-மங்களம்பாடுவது.)

காபி இராகம்--சாப்புத் தாளம்சீசாம்--சீராம் சபையோர்க்கு மேட்.

ஜய ஜய குருநடராஜன் பாதம் பணிந்தோம்
ஜகம்புகழ் சித்விலாஸ ஸபையன்பர்கள் வாழ்கவே
மாதமும்மாரி பெய்து மாநிலம் செழித்தோங்கவே
மாமன்னர் மற்றவர் கற்றவர் மகிழவே

வேதாகம தர்மங்கள் வேறுபடாமல் வாழ்க
வேந்தர்குல வேந்தனைந்தாம் ஜார்ஜு சக்கிரவர்த்திவாழ்க
ஜயலெக்ஷுமிமேரிமகா சக்கிரவர்த்தினி வாழ்க
ஜகமெலா மொருகுடைக்கீழ் ஜயம்பெற்று வாழ்கவே (ஜய)

## நாடகம் முற்றிற்று.

அகிலாண்டேஸ்வரி துணை.

C. S. கல்யாணராமய்யர்,
கொண்டயம் பேட்டை,
திருவானைக்காவல், போஸ்டு.

சென்னை-600 008.
139919
072MKR4
N13